www.padippakam.com

ஜனவரி - பிப்ரவரி 2002

இதழ் 31
ரூ. 12.00

இலக்கியச் சிறப்பிதழ்



படிப்பகம்

www.padippakam.com


FAMOUS FOR SILKS SAREES

Nalli SILKS
SALES DEPOT A/c

64-G, SWAMY SANNATHI St., (KOVIL VASAL BUS STOP),
TIRUNELVELI TOWN. ✆ : 330660

**CANADA**
1419 GERRARD STREET,
EAST TORONTO,
CANADA.
Ph. : 416-7784542

**SINGAPORE**
50, BUFFALO ROAD,
SINGAPORE 219799
Ph : 2998676
Fax : 2998744

**CALIFORNIA**
1686 BERRYESSA ROAD,
SAN JOSE,
CALIFORNIA 95 133.
Ph. & Fax : 408-2511997

**COIMBATORE**
315/316 RAJA STREET,
COIMBATORE - 641001.
Ph. : 395969

**TRICHY**
49, BHARATHIYAR SALAI,
(CONTONMENT)
TRICHY - 620 001.
Ph. : 465711

**MADURAI**
3 JADAMUNI KOIL STREET,
MADURAI - 625 001.
Ph. : 625884, 626352

**DELHI**
E - BLOCK, No : 12,
SOUTH EXTN. PART I,
NEW DELHI - 110 049.
Ph. : 4629926

**MUMBAI**
NALLI SILKS SAREES
Shop No : 7,
TIRUPATHI APARTMENT,
BHULABHAI DESAI ROAD,
MUMBAI - 400 026.
Ph. : 925545

**BANGALORE**
1/24, MAHATMA GANDHI RD,
BANGALORE - 560 001.
Ph. : 5583178, 5583179

Phone : 4344115 (7 Lines)
Telex : 041-23299 SILKIN
Grams : NALLICO
Fax : 044-4343062

Nalli CHINNASAMI CHETTY

SILK CLOTH & PIECE MERCHANTS
OPPOSITE PANAGAL PARK, 9, NAGESWARAN ROAD,
T. NAGAR, CHENNAI - 600 017.


படிப்பகம்

www.padippakam.com

இலக்கிய வாசகனின் நண்பன்

எழுதுகோல் தெய்வம் - இந்த
எழுத்தும் தெய்வம்
- பாரதி

# சதங்கை

இதழ் 31
ஜனவரி - பிப்ரவரி 2002

ஆசிரியர்
வனமாலிகை

உதவி ஆசிரியர்
எம். சிவசுப்ரமணியன்

ஆலோசகர்கள்
பொன்னீலன்
பா. செயப்பிரகாசம்
இரா. காமராசு

உதவி
இரா. கோபாலகிருஷ்ணன்

முன் அட்டை ஓவியம்
டிராட்ஸ்கி மருது

வடிவமைப்பு
உ. சுரேஷ்
நாஞ்சில் திருமாறன்

தனி இதழ் ரூ. 12
ஆண்டு சந்தா ரூ. 70
(6 இதழ்கள்)
இரண்டாண்டு சந்தா ரூ. 100
(12 இதழ்கள்)
மாணவர் சலுகை சந்தா ரூ. 40

வெளிநாட்டு சந்தா விபரம்
(விமானத் தபால்)
ஓராண்டு சந்தா ரூ. 300
இரண்டு ஆண்டுகள் ரூ. 500
காசோலை அனுப்புகிறவர்கள்
ரூ. 15 கூடுதலாக அனுப்ப
வேண்டும்.

❖ ❖ ❖

சதங்கை
அஞ்சல் பெட்டி 9
459 பாண்டியன் தெரு,
கவிமணி நகர்
நாகர்கோவில் - 629 002.
தொலைபேசி : 04652 - 203713

### கதைகள்

நாஞ்சில் நாடன் 3
ஆர். சூடாமணி 16
காஞ்சனா தாமோதரன் 29
கிருஷ்ணகோபால் 52
நந்தன் 56

### கட்டுரைகள்

பொன்னீலன் 22
வே. சபாநாயகம் 39
பாவண்ணன் 44

புத்தகவங்கி 5
ஆசிரியர் பக்கம் 68

### கவிதைகள்

பாவண்ணன் 2
கர்ணன் 4
பெ. நாயகி 12
சாந்தாதத் 14
அன்பாதவன் 15
பாரதி நிவேதன் 15
பா. சத்தியமோகன் 15,38
இரா. சாகுல் அமீது 21
சகாரா 27
சிவகுமார் முத்தய்யா 41
என்.டி. ராஜ்குமார் 42
அக்னிக்குமரன் 48
பழமலய் 49
சுப்ரபாரதிமணியன் 50
இலக்குமி குமரன் ஞானதிரவியம் 50
பீமா 51

படிப்பகம்

www.padippakam.com

# வாழ்க்கையின் வரிகள்

காக்கைக்கு வைத்த படையல் சோறென
பாறையின் மீது கிடத்தப்பட்டிருந்தது
அருவிச் சுழியில்
தடம்புரண்டு மாண்டவன் உடல்

இளமைச் சாவுக்குப் பரிதாபப்பட்ட படி
அருவி நோக்கி நடக்கிறார்கள் .பயணிகள்
எந்த ஊரோ யார் பெற்ற பிள்ளையோ
என்பதைப் பற்றிப் பேசிக் கொள்கிறார்கள்
மலத்தைப் பார்த்து ஒதுங்குவது போல
வேகமாய்க் கடந்து செல்கிறார்கள் சிலர்
இந்த சீசனில் இது பதினேழாவது பலியென்று
புள்ளிவிவரம் சொல்கிறான் உள்ளூர்காரன்

ஓரமாய் உட்கார்ந்து புகைத்த
பீடித் துணுக்கை வீசியபடி
நாலுமணிநேரம் சுழல்ல தேடியிருக்கேன்
பாத்துக் குடு சார்.
என்று கேட்கிறது மீட்புக்குழு
"பதிவு செஞ்சிட்டா அறுத்துத்தான் குடுக்கணும்
அப்புறம் குறைசொல்லக்கூடாது.
சிவப்புத் தொப்பிக்காரர் கண்டிப்பாய்ச் சொல்கிறார்
"செக்போஸ்ட் ரிஸ்க் நூறு இருக்குது
எல்லாம் எங்க பொறுப்பு
அலுங்காம நலுங்காம
கொண்டு வந்து சேத்துருவோம்.
வாகனக்காரர் யோசிக்கச் சொல்கிறார்

சிவப்புத் தொப்பிக்கு மோதிரத்தையும்
நால்வர் குழுவுக்குக் கழுத்துச் சங்கிலியையும்
கழற்றிக் கொடுத்த மாண்டவன் கூட்டாளி
ஊரில் இறங்கியதுமே தருவதாக
வாகன வாடகைக்கு வாக்குறுதி அளித்து
டீசல் செலவுக்குக் கடிகாரத்தைத் கழற்றுகிறான்

பேச்சுவார்த்தை முடித்து
அள்ளியெடுத்து வண்டியில் வைக்க
அனைவரும் நடக்கிறார்கள்

வாழ்ககை பற்றிய பலவரிகள் எழுதப்பட்டிருக்கின்றன
மரணத்தின் முகத்தில்

பாவண்ணன்



படிப்பகம்

www.padippakam.com

# தாளம்

நாஞ்சில் நாடன்

இரவு ஒன்பதரை மணி ஆகிவிட்டது, விடுதி அறையில் இருந்து வெளியே வர. பேச்சு மிகுந்த சுவாரசியமும் தகவல்களும் நிறைந்ததாக இருந்தது. தாளங்கள் பற்றியும் தோல் வாத்தியங்கள் பற்றியும், சிறுவனாக இருந்த போது பூதப்பாண்டியில் பக்க வாத்தியம் வாசித்த கச்சேரியைப் பற்றிக் கேட்ட போது அவருக்கு சிலிர்ப்பாக இருந்ததை உணர முடிந்தது.

உண்மையிலேயே இந்த நாற்பதாண்டு காலத்தில் தேர்ந்த வித்வானாக வளர்ந்து விட்டிருந்தார். விரல்கள் பத்திலும் இறைவன் உறைகிறேனோ எனும் பரவசம் ஏற்படுத்தும் இசைப் பயிற்சியும் நுணுக்கமும் திறனும் கொண்ட வாசிப்புகள். ஆதியும் திஸ்ரமும் மிஸ்ரமும் திஸ்ரசாப்பும் கண்ட சாதி திரிபுடையும் வெறும் தாளங்களின் பெயர்கள் எனில் அவர் விரல்களில் அவை உயிரின் அசைவுகள்.

கூட இருந்தவர்கள் அனைவரும் அவர் வாசிப்பு போல வாய்ப்பேச்சிலும் கிறங்கிப்போய் உட்கார்ந்திருந்தனர். அரைமணிக் கூரில் பார்த்து விட்டுப் போய் விடலாம் என்று வந்தவர்கள் எழுந்திருக்கும் மார்க்கமின்றி அமர்ந்திருந்தனர்.

இரண்டு பேர்கள் தங்கும் அறை ஓரமாய் பயணப் பெட்டிகள், பெரிய அளவு உணவு தூக்குப் பாத்திரங்கள் பிளாஸ்டிக் கயிற்றுக் கூடை, வெல்வெட் துணி உறையில் போர்த்தப் பட்டிருந்த இரண்டு வாத்தியங்கள்

கிடந்த இரண்டு நாற்காலி களிலும் மேலும் கொண்டு வரச்சொன்ன நாற்காலி களிலும் போக மீதிப்பேர் கட்டிலில் கால்மாட்டில் உட்கார்ந்து கொண்டிருந்தோம். உட்கார்ந்திருந்தவர்கள் இசை நுணுக்கங்கள் அறிந்தவர்கள் இல்லை என்றாலும் தாளம் யாவர் கால்களிலும் இன்னும் சிவனுடன் தர்னே இருந்தது!

அவருடன் நிற்பது கௌரவம் கலைத் தேவியின் கருணை பெற்றவருடன் அமர்ந்து பேசுவது பெரிய கௌரவம். அழகும் கம்பீரமும் கொண்ட அவருடன் நின்று புகைப்படம் எடுத்துக் கொண்டோம்.

குறுக்கும் நெடுக்குமாய் ஒரு சிறுவன் நடந்து கொண்டிருந்தான், உரையாடல்களின் இடையே பத்துப் பன்னிரண்டு வயதிருக்கும்.

துவைக்க, உலர்த்த, உணவு வாங்கிவர, பாத்திரங்கள் கழுவ, எடுபிடி வேலைகள் செய்ய வாத்தியம் சுமக்க, கச்சேரியின் இடையே சூடான பானம் ஊற்றிக் கொடுக்க, கால்கை அமுக்க, கடைக்குப் போக... ஒழிந்த வேளைகளில் எதுவும் சொல்லித் தருவாரோ என்னவோ? சொல்லித் தருவதை வாங்கிக் கொள்ளும் அலைவரிசையில் அவன் இருந்தானோ என்னவோ?

பேச்சின் இடையே புகைப்பட ஆல்பம் எடுத்துக் கொடுத்தான். அவரைப் பாராட்டாத பெரிய மனிதப் பிரமுகர்கள் இல்லை. அவர் இணைந்து வாசிக்காத பிரபல வித்வான்கள் இல்லை, அவன் சென்று திரும்பாத நாடுகள் குறைவு.

வாசித்துக் காட்ட வாத்தியம் எடுத்துக் கொடுத்தான். காப்பி வாங்கி வந்தான். .எங்கேடா பால்சாமி தொலைந்து போனாய்?. என்று குரல் எழும்பிய போது எதிரே வந்து நின்றான் பவ்யமாக



படிப்பகம்

www.padippakam.com

இடையிடையே எங்கு போவான் என்று தெரியாது.

முதலமைச்சர் முன்னால் வாசித்த கச்சேரியும் அவர் கழற்றி அணிவித்த ஐந்து பவுன் சங்கிலியும் பற்றிப் பேசிக் கொண்டிருந்த போது அறையினுள் "திடு திடு" வென வந்தான் விடுதி மேலாளன். கையில் பால் சாமியின் கையைப் பற்றிப் பிடித்திருந்தான். 'அப்பளத்தில் கல் சொர்க்கத்தில் கட்டெறும்பு சுபாமில் எலும்பு நொறுங்கல் என எதுவேனும் சொல்லிக் கொள்ளலாம்.

.சார், பையனைக் கொஞ்சம் கண்டிச்சு வையுங்க .. ரிசப்ஷன்லே இவன் லூட்டி தாங்க .. முடியலே பலதரம் சொல்லிப் பார்த்தாச்சு. கேக்க மாட்டங்கான்...

வித்வான் முகம் சிவந்து போய்விட்டது. உலகத்தரத்தில் வாசிக்கும் ஆற்றல் குன்னிப் போய்விட்டது சில நொடிகள்

விசுக்கென எழுந்து, பால் சாமியைப் பற்றி இழுத்துக் கவிழ்த்து, முதுகில் பளார் பளார், ... என்ன தாளம் விழுந்தது எனக் கணிக்க இயலவில்லை.

பிட்டுக்கு மண் சுமந்தவன் வாங்கிய பிரம்படிபோல், எல்லோர் முதுகிலும் விழுந்தது அறை. விடுதி மேலாளன் ஓடிப்போய் வித்வான் கையைப் பிடித்தான்.

.விட்டுருங்க சார் - பொடியன்-

எங்களோடிருந்த ஒருவர் கூவினார் .அறிவிருக்காய்யா? பையன் ஏதும் செய்தான்னா இப்பிடியா வந்து சொல்றது? ஆள் தரா தரம்

விடுதி மேலாளன் போன பிறகு ஒருவர் சொன்னார் மொதல்ல இவனுக்கு ரெண்டு போடணும் ...த்தா தானுகளுக்கே ரொம்பத் திமிராகிப்போச்சு ... .

ஆயிரக்கணக்கான கச்சேரியில் எல்லா நடைகளிலும் வாசித்துப் பழகிய விரல்கள். பால்சாமியின் சட்டையைக் கழற்றிப் பார்த்தால் தாளங்களின் தடயங்கள் தெரியலாம்.

பால்சாமி உரத்துக் கத்தவில்லை. வாய்விட்டு அழவும் இல்லை. கணகள் மட்டும் சோகரா கமாய் சொரிந்து கொண்டிருந்தன.

.பால்சாமி, போட்டுண்டே .. ஐயா தானே அடிச்சாரு .. போ. போயி மொகத்தைக் கழுவு.

சுக்கானை எந்த திசையில் திருப்பினாலும் பேச்சு உயிரற்று நடந்தது. வித்துவான் கலகலப் பாகக் காட்டிக் கொண்டிருந்தார்.

மழையில் நனைந்து கொவர்ந்த தோல் வாத்தியம் வாசிப்பது போல, சொத்துச் சொத்தென்று கேட்டது தாளம்.

மனதிலும் மழையின் ஈரம் பாறையாய் பதிந்து கிடந்தது. பெயர்த்து உருட்டித் தள்ளிவிட முடியாத வேர் கொண்ட பாறை.

## மெய்யும் - மொய்யும்

அந்த மாத
முதியோர் பென்சன்,
அரசுக் கூட்டிக் கொடுத்த
அதிக பணத்துடன் வந்தது.

பார்வை தெ யாத
அந்தக் கிழவி ரேகை புரட்டி
வாங்கியபோது,
தபால்காரர் சொன்னார்
இந்த மாதம் 150 ரூபா கூட
வந்திருக்கு
இருவது ரூபா
எடுத்துக்கிட்டேன்.
கிழவி சொன்னாள் இத்தனை
நாளும்
ஒனக்கு மொய் எழுதினேன்;
இன்னிக்கு ஒன் எழவுக்கு
மொய் எழுதிட்டேன்.

கர்ணன்.



படிப்பகம்

www.padippakam.com

# செதுக்கத் துடிக்கும் சிறகுகள்

ஆசிரியர் : ம. திருவள்ளுவர்
வெளியீடு : தாமரைச்செல்வி பதிப்பகம் சென்னை - 600 078
விலை : ரூ.30

## அ. முரளி ஷாஜஹான்

நடந்து காட்டும் மிதியடி கவிதைத் தொகுப்பின் மூலம் பரவலாக அறியப்பட்ட ம. திருவள்ளுவரின் இரண்டாவது கவிதைத் தொகுப்பு செதுக்கத் துடிக்கும் சிறகுகள். ஐம்பத்தைந்து தலைப்புகளில் கவிதைகளை ஆக்கி இருக்கிறார். ஐம்பத்தைந்து கவிதைகளும் திருவள்ளுவர் என்னுரையில் கூறி இருப்பது போல பொழுதை போக்குவதற்காக அல்லாமல் பொழுதை ஆக்கவே செய்து இருக்கிறார். இந்த எண்ணமே கவிஞரை தமிழுலகம் ஏற்றுக் கொள்ளும்.

இவருடைய கவிதைப் பார்வை சமூகச் சிந்தனையோடும், கற்பனை வளத்தோடும், எதிர்காலம் பற்றிய பல கேள்விகளுக்கு விடையாகவும் அமைந்து இருக்கின்றன. இப்பார்வை கவிதை முழுவதும் விரவி இருக்கின்றன. ஒரு கவிஞனுக்கு உண்மையான வெற்றி என்பது மக்களின் வாழ்க்கைப் போராட்டங்களையும், அவர்கள் படும் இன்னல்களையும், சுரண்டலையும் படைப்புகள் மூலம் வெளிக் கொணர வேண்டும். இக்கவிதைத் தொகுப்பின் மூலம் திருவள்ளுவர் இதை செய்து இருக்கிறார்.

விருதுக்குறியவள், மீண்டும் தலைப்புச் செய்திகள், சிந்தாமணியும் சின்னாச்சியும், ருசிகரம், குருகுலம் ஆகிய கவிதைகள் கவியரங்குகளில்

# புத்தக வங்கி

வாசித்தால் கைதட்டல் பெறுவது மட்டுமின்றி, முதன்மை இடத்தையும் கவிஞரே பிடிப்பார்.

திருவள்ளுவரின் சமூகப் பார்வை விரிவுபட்டது. இப்பார்வை முதல்ராத்திரி, மகப்பேறு, தூறல், செவிலியர் இனி ஆகிய தலைப்புகளில் தெளிவாக தெரிகிறது. இவையே கவிஞருக்கு வெற்றியை தருகின்றது.

ருசிகரம் என்னும் தலைப்பில்

சேரிக்காரன் செருப்பணிந்து நடப்பதைச்
செருக்கென திரிந்து ஒரு
சாதிக் கலவரத்துக்குச் சங்கெடுத்து
முழங்க வைக்கும்
கீழமைக் குணத்துக்கு
அடி பணிவதும்
அன்றி
வேறென்ன நாம்
புரிவது.

என்று இன்றைய காலச் சூழ்நிலையில் சாதிக் கலவரத்திற்கான தீ எவ்வாறு மூட்டப்படுகிறது என்பதனைக் கூறி, அது எவ்வாறு தம்மையும், சமூகத்தையும் உறுத்துகிறது என்பதில், திருவள்ளுவர் சமுதாயத்தின் மீது கொண்ட அக்கறையைக் காட்டுகிறது.

கனியிருப்ப என்னும் தலைப்பில் அமைந்த

பூக்களைக் கொண்டே
புயலை ஆக்க முடிகிற போது
சாக்கடை இரைக்கும்
சமர் எதற்கோ?

என்று புதிய திருவள்ளுவராய் உருவெடுக்கிறார்.

பிரசவ பெண் படும் வேதனையை மகப்பேறு என்னும் தலைப்பில்

வலியெடுக்காதவர்களுக்கென
காத்திருக்கின்றன
கழுவி சுத்திகரிக்கப்பட்ட
கத்திகள்
அறுவை கூட்டத்தில்

என்று பெண்ணின் வேதனையை பதிவு செய்து இருக்கிறார்.



படிப்பகம்

www.padippakam.com

காதலைப் பற்றி பாடாத கவிஞர்களே இல்லை எனலாம். காதலின் மென்மையை இன்னும் கூறப் போனால் காதலியின் எதார்த்தத்தை விருதுக்குறியவள் என்ற தலைப்பில்

நானில்லாமல் நீ இருக்க முடியாதா
என்றால்
முடியும் என்கிறாள்
முடியுமா என அதிர்ந்தால்
வேறென்ன செய்வதென்கிறாள்

என்று இயல்பாய் கூறி இருக்கிறார்.

கவிதை முழுவதும் படிப்போர்க்கு நல்ல வாசிப்பதைத் தருகின்றது. திருவள்ளுவர் சிறந்த படைப்பாளியாக மீண்டும் அடையாளப் படுத்தப் பட்டு இருக்கின்றார். அடுத்தடுத்த படைப்புகளில் அதை விட இன்னும் வீரியம்மிக்க கவிதைகளை கொண்டு வருவாரென்று இந்நூல் நம்பிக்கை தருகின்றது.

## மகளுக்குச் சொல்ல

ஆசிரியர் : இரா. காமராசு
வெளியீடு : NCBH
சென்னை
விலை : ரூ.32

### கெ. வெற்றிச்செல்வன்

கதைசொல்லும் நமது பாரம்பரியத்தினூடாக குழந்தைகளின் முன் ஒரு புனைவுலகை நாம் உண்டாக்கி வந்திருக்கிறோம், நீண்ட நெடுங்காலமாக. ஆனால் அண்மைக் காலந்தொட்டு தாலாட்டு கேட்பதையோ, கதை கேட்பதையோ இழந்து வருகிற ஒரு தலைமுறையினூடே வாழ வேண்டிய நிர்பந்தம் உருவாக்கப் படுகிறது. ஏகாதிபத்திய உற்பத்தி முறையில் "கேட்டல் புலனை அடித்து வீழ்த்தி காணல் 'புலன் துருத்திக் கொண்டு முன் நிற்கும் விதமாக தொடர்சாதன வளர்ச்சி ஆதிக்கம் செலுத்தி வருகிறது.

பழைய கதை மரபின் மூலம் உருவான புனைவுலகு புராணம் சார்ந்த சற்றே வரலாறு சாரந்த பழங்கலாச்சாரம் சார்ந்த புனைவுகளால் எழுப்பப்பட்டிருக்கிறது. போலவே இப்போது விடுதலை சார்ந்த புதிய கலாச்சாரம் சார்ந்த முன் மாதிரி சார்ந்த ஒரு புனைவுலகை இலக்கியம் மூலம் உருவாக்கவும், மறு புனைவாக்கம் செய்யவும் வேண்டிய தார்மீக கடமை இன்றைய படைப்பாளிகளின் முன் இருக்கிறது.

"மகளுக்குச் சொல்ல" கதைத் தொகுதிக்குள் நுழைகிற போது, படைப்புகளின் உள்ளீடாக காணக் கிடைப்பது இதுதான் 16 கதைகளில் பாழ்மண்டபம் என்கிற தலைப்பில் ஒரு கதை விட்டு விடுதலையாகி என்ற தலைப்பில் இன்னொரு கதை. இருகதைத் தலைப்பு களைச் சேர்ந்து பார்க்கிற போது கதைகளில் உட்கோள் இப்படியாக இருக்கிறது. அதாவது வாழ்வு சார்ந்த இருப்பு தொடர்ந்து பாழ் மண்டபமாகி வருவதும் உரிமை சார்ந்த போராட்டங்களினால் அது விட்டு விடுதலை யாகத் துடிப்பது மான முரண்பாட்டுக் குணாம்சம், சுருங்கச் சொன்னால் பாழ்மண்டத்திலிருந்து விட்டுவிடுதலையாகிற முயற்சி இயங்கிவருகிறது. உலகை. இந்த சாராம்சமே தொகுப்பின் எல்லாக் கதைகளினூடாகவும் வெளிப்பட்டிருக்கிறது எனலாம்.

கூடப்படித்த பள்ளித் தோழர்கள் திருடத் தொடங்கி பிச்சை எடுப்பதும், படிக்கமுடியாத போது மாட்டுக்கிடை வைப்பதும், காதலைப் புதைத்து விட்டு கல்யாணமாகி பிள்ளை குட்டி என செட்டிலாவதும் ஒட்டப்பந்தய சூரனாக இருந்தவன் தொடுப்பு வைத்துக் கொள்வதும் இன்னும் பாம்பு கடித்து செத்தும் தச்சு





படிப்பகம்

www.padippakam.com

வேலைக்குப் போவதும் என்று பலவாறாக நினைவில் பின்னோக்கி நகர்கிறது 'தோழமை' கதை. கோவிந்தை சீதை வேஷத்தில் பிச்சை எடுக்கக் கண்டு பழைய நினைவுகளை அசை போட்ட படி மேலும் நகர்கிறது. உதவி செய்ய எண்ணி பணங்காசு பலகாரத்தோடு பார்க்கப் போனால்,'கோவிந்த்' இடத்தைக் காலி செய்து கொண்டு போன வெறுமை.. இது ஏற்படுத்தும் மன அவசம்'.. கதையின் லாவகமான நடை .. இவற்றால் தொகுப்பின் முத்திரைக் கதையாக மிளிர்கிறது. கதையில் வரும் ஒரே ஒரு வரி இந்த சமூகத்தை அரசியலை வரலாற்றை கூர்மையாக விமர்சிக்கிறது "இராமன் கையில் வில்லுக்குப் பதிலாய் திருவோடு" (பக்:17)

பொய்சொல்லி, இலவசம் பெறத் தயங்கி இறுதிக் கட்டத்தில் வெளியேறும் கணபதி; வறுமையும் சாதிய ஒடுக்கு முறையுமே மிச்சமிருந்தாலும் சுயமரியாதையும் தன் மானமும் மிச்சமிருப்பதாக காட்டப்படும் நாவம்மா வேலன் ஆனந்தாவை புதுமைப்பெண்ணாக வார்தெடுக்கிற பாலன். அப்பாவியை தண்டிக்கலாமா? கேள்வி எழுப்புகிற தாயாரம்மா ஆச்சி; அனைத்திற்கும் மேலாக அடித்தட்டு சமூகத்தின் வந்து சக்தியாக வருகிற செழியன் சார் இவர்களது மனசை மொழி பெயர்ப்பதன் மூலம் நல்ல முன்மாதிரிக் குணச்சித்திரங்கள் படைத்துக் காட்டப்படுகின்றன, இரா. காமராசுவால்.

திடீர்ப் பணக்கார அரசியல் ரவுடிகளின் ஏதேச்சாதிகாரம் சொக்கனை சொந்த மண்ணை விட்டு விரட்டுகிறது. ஒரு பள்ளி திறக்கும் போது ஒன்பது சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன என்ற பழமொழியை கேள்வி எழுப்புகிறது.'தாத்தா தொலைந்து போனார்' சிறுகதை. ஒரு கல்லூரி திறக்க படும் போது எத்தனைக் குடும்பங்கள் நடுத்தெருவிற்கு விரட்டப்படுகின்றன? விடை தேடி அலைகிறது கேள்வி.

மீண்டும் நதியாகி குறியீட்டுச் சிறுகதை. கவிதையின் ஒளியும் நிழலும் நிகழ்வின் மீதேறி பலவற்றைப் பேசுகிற பன்மைக் குரலோடு ஆனால் எளிமையோடு உறவாடுகிறது கதை.

எத்தனைச் சேனல்களி லிருந்தும் எனக்கான ஒரு அலை வரிசையுமில்லையே கதைக்குள் பேசும் பெண்ணின் ஆதங்கம் நம் எல்லோரினதும் ஆதங்கமாக பொது அனுபவமாக நீட்சி பெறுகையில் வெளிப்பாடு அழுத்தம் பெறுகிறது.

உலகம் அழியப் போறதாச் சொல்றாங்களே - குயில்க்கத்துமா சங்கக் கவிதை. அம்மாவின் துக்கம், பிள்ளைகளின் மௌனம் - பெண் உடலைக் கண்காணிக்கிறதே ஆணின் வேலை ஆதித் தொல்குடி வாழ்வு - ஷீலா ரௌபாத்தம் எழுதிய கற்பனைக் கடுதாசி ரஷ்யக் குல்சாரி - கி.ரா.வின் கிடை ஈழத்துச் செல்வி சிவரமணி - பாடினி ஔவை தீமேத்தா உமாபாரதி தி.ஜா பாலகுமாரன் முறிந்த சிறகுகள் கிரிக்கெட் சூதாட்டம் தமிழ்வழிக்கல்வி தினகரன் சுதாகரன் சானிடரி நாப்கின் மடிசார் - ஜன்னல் ஜாக்கெட் - சுடிதார் நைட்டி - காப்பர் டி - மனுஸ்மிருதி - ஆணுறை - போலி சாமியார் - புதிரா புனிதமா - தியானம் - லேடீஸ்கிளப் - பில்டர் சிகரெட் - இலக்கியக் கூட்டம் - தயிர்சாதம் - இறால் வறுவல் - செல்போன் - விகடன் - கல்கி - மகளிர் மட்டும் பேருந்து.

இப்படியாக ஒரே கதைக்குள் விரித்தெழுதத் தூண்டும் விவரணை கள் சம்பவ அடுக்குளில் பல கதைகள் சொல்லப்படுகின்றன. ஆசிரயரால்.



படிப்பகம்

www.padippakam.com

எனினும் வார்த்தைகளில் செறிவு கூட்டவும் முடிப்பில் வெளிப்பாடு அழுத்தம் பெறவும தேவை ஏற்பட்டிருப்பதைச் சொல்லாமலிருக்க முடியவில்லை.

கடைசியாக கதாபாத்திரம் காயத்ரி கேட்கிறாள்.. (என் வழி தனி வழியல்லாது) காயத்திரி வழியிலேயே நானும் கேட்கிறேன் இவை வெறும் வார்த்தைகள் தானா? வார்த்தைகளின்றி வாழ்க்கை சாத்தியம் தானா

-நதி சுருங்கிக் குட்டை என்றொரு வரி (பக். 67) மனசுள் பலஅலையடிப்புகளை நிகழ்கிறது. சமூகம் சுருங்குகிறது. மனிதர்கள் சுருங்குகிறார்கள் நாகரீகம் சுருங்குகிறது அரசியல் சுருங்கிறது. எனினும் காமராசுவின் படைப்புகள் சுருங்கிவிடக்கூடாது. வாழ்வின் உன்னதம் நோக்கி, விரிவும் ஆழமும் தேடி பயணிக்க வேண்டும்.

**காகங்கள் (சிறுகதைகள்)**

ஆசிரியர் : சுந்தர ராமசாமி
வெளியீடு : காலச்சுவடு பதிப்பகம் 699, கே.பி. சாலை, நாகர்கோவில் -1.
விலை : ரூ.295
பக்கங்கள் : 656

## ந. முருகேசபாண்டியன்

பரந்துபட்ட வாழ்க்கைத் தளத்தில் படைப்பு மனநிலை வாய்க்கப்பெற்ற சமூக அக்கறையுள்ள மனிதருக்குப் பேசவும் எழுதவும் நூற்றுக் கணக்கான விஷயங்கள் உள்ளன. அரை நூற்றாண்டுக் காலத்திற்கு மேலாகத் தொடர்ந்து கதை சொல்லலில் ஈடுபட்டுள்ள சுந்தர ராமசாமிக்கு வாசகரை முன்னிறுத்திச் சொல்ல இன்னும் ஆயிரமாயிரம் சேதிகள் காத்துக் கிடக்கின்றன. சு.ரா. என்ற பிம்பமானது நவீனத்துவம் சார்ந்தது என்று இளம் வாசகர்கள் கற்பிதம் கொண்டிருக்கின்றனர். வாழ்க்கை குறித்த ஆழ்ந்த விசாரிப்புகளை, மனதின் விகாசிப்புகளில் திளைத்து ஒரு நிலையில் செறிந்து இறுக்கமான பிரதிக்ளைப் படைக்கிறவர், அவரது கதை சொல்லல், வாசகரை மாறுபட்ட புதிய பிரதேசங்களுக்கு அழைத்துச் சென்று வாழ்வின் விசித்திரங்களைத் தரிசிக்கச் செய்யும் தன்மையுடையது இப்படியான தோற்றங்கள் 'காகங்கள்' தொகுப்பு மூலம் கலைந்து போய், முகமூடியற்றுச் சகஜமான படைப்பாளியாகக் காட்சிக்கு எளிய வராகச் சு.ரா. தோன்றுகிறார். இன்னும் நுணுகிப் பார்த்தால் சு.ரா.வின் படைப்பாக்கத்தில் மக்சீம் கோர்க்கி ஆண்டன் செகாவ் பொதிந்து கிடப்பதை அவதானிக்கலாம். இளம் பிராயத்துச் சு.ரா. தன்னைச் சுற்றி நடக்கும் சிறிய சம்பவங்களையும் அக்கறையும் கவனித்துக் கதையாக்கியுள்ளார். இவ்வகையில் சு.ரா.விற்கு ஆதர்சம் புதுமைப்பித்தன் எனினும், புரட்சிக்கு முந்திய ரஷிய படைப்பாளிகளின் யதார்த்தமான கதை சொல்லல் முறை அவருக்குள் தாக்கமேற்படுத்தியுள்ளது. அது இன்று வரை தொடர்கிறது.

சு.ரா. எழுதியுள்ள 61 சிறுகதைகளில் ஐந்து கதைகளை மட்டும் நீக்கிவிட்டு 56 சிறுகதைகளின் தொகுப்பு காகங்கள் என்ற பெயரில் வெளியிடப்பட்டுள்ளது. படைப்பாளி வாழும் காலத்திலே முழுமையான தொகுப்பு வெளிவருவது மூலம் எதிர்காலத்தில் பாடபேதங்களும் விமர்சகர்களின் குழப்பங்களும் தீரும். செம்பதிப்புக் கொண்டுவரும் சிக்கலான பணி தேவையற்றுப் போகும். அதே நேரத்தில் தொலைக்காட்சி ஊடகத்தில் ஓய்வு நேரத்தைப் பலிகொடுத்துவிட்டுச் சவசவத்துக்



படிப்பகம்

www.padippakam.com

கொண்டிருக்கும் தமிழர்கள், 656 பக்கங்களுடைய நூலை வாசிப்பதற்கு முயற்சிப்பார்களா என்பது புலப்படவில்லை. (ஒரு பக்கக் கதைகளை வெளியிட்டு இலக்கியச் சேவையாற்றும் வெகுசன இதழ்கள், போகிற போக்கில் ஒருவ க் கதைகளை வெளியிட்டுப் புண்ணியம் தேடிக் கொள்ள இடமுண்டு). எனினும் வேறுவழியில்லை; சமூக அக்கறை யுள்ள வாசகர்கள் முழு நூலையும் படித்தேயாக வேண்டும் அப்பொழுதுதான் இலக்கியம் பற்றிய சொல்லாடல் பீறிடும்.

சு.ராவின் தொடக்கக்கால கதைகள் இன்றைய நவீன வாசக மதிப்பீட்டில் சாதாரணமாக உள்ளன; நேர்ப்பொருளில் அப்பட்டமாகக் கதையாடல் மூலம் கருத்தினை முன் வைப்பது கதைக்கு வெளியே எவ்விதமான அனுபவங்களையும் தரவில்லை. யதார்த்தமான சம்பவங்களைச் சு.ரா. தன் நோக்கத்திற்கேற்ப கோர்த்துக் கதை சொல்லிய முறையில் பாசாங்கு இல்லாமலி ருப்பது முக்கியமான அம்சமாகும். இளைஞர்களுக்கே உ ய லட்சியம் ஆவேசம் கதைகளில் ஊடாடியுள் ளது. சமூகத்தின் சீரழிவுகளை அம்பலப்படுத்துவதும் புதிய பாதை குறித்து நம்பிக்கையை விதைப் பதும் கதைகளில் தொக்கி நிற்கின்றன. இத்தகைய கதைகள் குறிப்பிட்ட காலம் தாண்டிய பின்னர், மெருகு குலைந்து மதிப்பிழந்து விடுவது இயல் பானது. எனினும் கோவில் காளையும் உழவு மாடும் கதை இன்று வாசிப்பதற்குச் சுவாராசிய மாக உள்ளது. கதை விவ ப்பில் படிந்துள்ள நாடோடித்தன்மை அருமையானது. பண்டாரம் வழங்கும் உணவு இல்லாவிடில், பனையேறி ஓய்ந்துபோன கிழவனுக்கு உணவுக்கு ஏது வழி? சமுதாயச் சங்கிலியின் நுட்பங்களை வகை மாதி யான மனிதர்கள் மூலம் சித்த ப்பது இளம் சு.ரா.வின் ஆக்கத்திற்கு எடுத்துக்காட்டாகும்.

சு.ரா. எழுதத் தொடங்கிய பத்தாண்டுகளில் நிகழ்ந்த மாற்றத் தின் விளைவுதான் 'சன்னல். ஒன்றும் பு யவில்லை'. அவருக் குள் புகைந்து கொண்டிருந்த மனதின் காட்சிகள், எழுத்து வடிவம் பெறுவதில் புதிய வடிவம் பெற்றன. கலைஞன் என்ற ஆளுமை, சு.ரா.வினுக்குள் ப ண மித்தது இக்காலகட்டத்தில்தான். நடப்பியல் சித்த ப்பை நகைச்சுவை யுடன் சொல்லியுள்ள 'வாழ்வும் வசந்தமும்' கதை, அவரது படைப் பாற்றலை முதன்முதலில் நேர்த்தி யுடன் வெளிப்படுத்திய கதை ஆகும். உள்ளும் புறமும் முரண் பட்டு அப்பழுக்கற்றதாகப் பாசாங்கு செய்திடும் தூய தமிழ்ப்பண் பாட்டில் வங்கி ஊழியர்களின் இயல்பான விடலைத் தனத்தை எப்படி அடையாளப்படுத்துவது?

நம் கண்முன்னே நிகழும் பிரதட்சய நிகழ்வுகளுக்கும் உண்மைக்குமான தூரம் அளவிட இயலாதது. நாம் பொறுக்குகளின் து சிறகைக் கண்டு மயங்கி, அசலான பறவையின் வீர்யமான சிறகடிப்பைக் காணத்தவறி விடுகிறோம். ஒவ்வொரு களத்திலும் 'சூழல்' காரணமாகக் கற்பிக்கப்படும் புனைவுகளும் புனிதங்களும் ஒரு நொடியில் நொறுங்கித் தூளாவது வாழ்வின் விசித்திரமாகும். 'திரைகளுக்கப்பால்' கதையில் ஒரு பெண்ணுக்கு நேர்ந்த கொடுமை, அத்து றல், வன்புணர்ச்சி ..... என்று வி யும் அவலமானது இசக்கியின் பேன்றாவில் தாண்டவமாடி, இறுதியில் அடையும் நிலை இடைவிடாத கேள்விகளை வாசிப் பில் எழுப்புகின்றன. உண்மை



படிப்பகம்

www.padippakam.com

எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம் என்பதைச் சு.ரா. சித்தரித்துள்ளது அற்புதமான கதையாக வெளிப்பட்டுள்ளது.

1965-ஆம் ஆண்டு வெளியான 'தற்கொலை' கதையிலிருந்து சு.ரா.வின் எழுத்தில் பெரும் மாற்ற மேற்பட்டுள்ளது ஏதோ அவஸ்தையில் சிக்கி அல்லலுறும் மனித உயிரின் வாசனைகள் பதிவாகியுள்ளன. எழுதுகோலின் அழைப்பு, வாசனை, அலைகள்.... போன்ற கதைகளில் இத்தகைய போக்கு உச்சநிலை அடைந்தது. வாழ்வின் வெறுமையும் ஏமாற்றமும் கசப்பும் துயரமும் நிரம்பி வழிய எதிலும் தன்னை இனங்காணவியலாத மனிதர்களின் சாயல்கள் கதைகளில் நிரம்ப வருகின்றன. 'கொந்தளிப்பு' கதை எழுதிய அதே கால கட்டத்தில் 'ஆத்மா ராம் சோயிராம்' எழுதியிருப்பது, சு.ரா. பற்றி எளிமையான மதிப்பீடுகளைத் தகர்க்கிறது. அவரது மன வோட்டத்தில் நிகழ்ந்துள்ள செயற்பாடுகளையும் தொழில்நுட்பத் திறனையும் புரிந்துகொள்ள ஏதுவாக அமைகின்றன.

1962 - ல் 'எங்கள் டீச்சர்' எழுதிய சு.ரா. 1996 - இல் 'நாடார் சார்' கதையை எழுதியிருப்பது எளிதில் புறக்கணிக்கக் கூடியதல்ல. காலத்தின் கோலங்கள் வாழ்க்கையின் மீது அழுத்தமான தடங்களைப் பதிக்கும் வேளையில், சு.ரா. எதைப்பற்றியும் கவலைப்படாமல் அவருக்குத் தோன்றியதைப் பதிவாக்கியுள்ளார். சு.ரா.விற்குப் பிம்பம் பற்றிய பிரேமை எதுவுமில்லை. சாதனையாளர்களின் வீழ்ச்சியும் உச்சமும் அவருக்குள் தோற்றுவித்துள்ள மாற்றங்கள், கதை விவரிப்பில் முக்கிய இடம் பெறுகின்றன. அவ்வளவே.

சு.ரா. என்ற படைப்பாளிக்கு வாழ்க்கைப் பரப்பு மீதே அக்கறை உள்ளது. சிறுகதை வடிவத்தை விட கதை சொல்லலுக்கே சு.ரா. கூடுதல் முக்கியத்துவம் தந்துள்ளார். இந்நிலையில் அவரால் எழுதப்பட்ட சராசரி கதைகளையும் மிகச் சாதாரண கதைகளையும் எப்படி எதிர்கொள்வது? இடைவிடாத உழைப்பும் வாசிப்பும் படைப்பாளிக்குத் தேவை என்பதை அவரது கதைகளின் வளர்ச்சிநிலை காட்டுகிறது. இது தேர்ந்த படைப்பாளிக்கு ஏற்படக்கூடிய அனுபவமாகும்.

வாழ்க்கை, மனித இருப்பு பெரும் விசாரணைகளைத் தூண்டுவது சு.ரா.வின் நோக்கமல்ல; தருக்க ரீதியில் வாசகனை அசை போட வைப்பது கதைகளின் இலக்காக இல்லை. ஒட்டுமொத்த வாசிப்பில் சு.ரா.வின் கதைகள் தரும் அனுபவம் என்று வரையறுப்பதும் இயலவில்லை. சில கதைகள் சிலருக்குப் பிடிக்கலாம். சில கதைகள் வேறு சிலருக்குப் பிடிக்கலாம். ஒரே அளவு கோலினால் சு.ரா.வின் கதைகளை அளவிட இயலாது. சு.ரா.வின் பன்முக அம்சங்கள் ஏற்றத் தாழ்வுடையன என்ற ரீதியில் அவரது படைப்புகளை அணுக வேண்டும். இல்லாவிடில் பலவீனமான சில கதைகள் நவீனவாசகனுக்கு அந்நியமானவையாகத் தோன்றும். இந்நிலையில் எழுத்தின் தரம் குறித்துத் தீவிரமான அக்கறையுடன் இயங்கும் சு.ரா.வின் கதைகள் புறக்கணிக்கப்படும் அபாயம் நேரிடலாம். அது இலக்கிய வளர்ச்சிக்குக் குந்தகமானது. சு.ரா.வின் பிரதிகள் எளிமையாக நம் கண் முன்னால் விரிந்து கிடக்கின்றன. அவற்றில் கவர்ச்சிகரமானதும் வெறுப்பூட்டுவதுமான அம்சங்கள் பொதிந்து உள்ளன. எந்நிலையிலும் / எத்தகைய பேரவலத்திலும் புவியில் மனித இருப்பினுக்கான சாத்தியப்பாடுகள்



படிப்பகம்

www.padippakam.com

குறித்து நேர்மறையான முறையில் கதைகள் மூலம் வலியுறுத்தும் சு.ரா.வின் உலகம் வாசகருக்கு மிகவும் நெருக்கமானது. அவ்வகையில் சு.ரா.வின் கதைகள் சுய பலத்தில் எழுந்து நிற்கின்றன: புதிய வாசகரைக் கோருகின்றன.

**வருகை (புதுக்கவிதைகள்)**

ஆசிரியர் : சந்திரா மனோகரன்
வெளியீடு : நிர்மல் பதிப்பகம்
ஆர். சி. 3, சம்பத்நகர்
ஈரோடு -638 011
விலை : ரூ. 21

## ஸ்வீட்லின் சாமுவேல்

மனிதனது சிந்தனையாற்றலைத் தூண்டி விடவும், தன்னைப் பற்றிய சுயசிந்தனையில் ஈடுபடவும், சமுதாயச் சீரழிவுகளை படம் பிடித்துக் காட்டவும், ஏற்றமிகு வாழ்வியல் கருத்துக்களைச் செவ்வனே வெளிப்படுத்தவும் உதவுவது ஆற்றல் மிக்கக் கலைவடிவம் 'கவிதை' யாகும்.

புகழ்பெற்ற மெக்ஸிகன் கவிஞர் ஆக்டேவியாபஸ் கவிதையைப் பற்றிக் கூறுகையில் .அனுபவங்களின் உடனடியான விளைவாக நான் கவிதை எழுதுவதில்லை. அது மிகவும் மோசமானது. அதனால்தான். பெரும்பாலான சமுதாயக் கவிதைகள் மோசமாயுள்ளன.. என்கிறார். "கவிதைக்கு ஓர் அனுபவம் ஜீரணிக்கப்பட வேண்டும். மறக்கப்பட வேண்டும். நினைக்கப் படவேண்டும். ண்டும் நினைக்கப் படவேண்டும். அது மிகவும் நிதானமான அணுகுமுறை. என்கிறார். எனவே, கவிதை என்பது சிந்தனையில் உதித்தவுடன் நொடியில் மலர்வதும், பின்னர் நொடியில், மறைவதுமாக இன்றி. செ க்கவும். நினைக்கவும் ண்டும் நினைக்கப்படவும் வேண்டும்.

கவிஞர் சந்திரா மனோகரன் அவர்களின் கவிதை வ களை உற்று நோக்கின். அவ ன் கவிப் புலமையின் தனித்தன்மை புலப்படும். அவர் தனது "வருகை" என்னும் கவிதை தொகுப்பில் ஆழமான நொடியில் புலராத. பொருள் செறிந்த கருத்துக்களை. சுவாசித்து சுவாசித்து ண்டு மொருமுறை நினைக்கத் தூண்டும் வகையில் தனக்கேயு ய தனிப்பாங்கினில் சிலாகித்துள்ளார். இக்கவி நூலானாது சுய சிந்தனையாளர்களுக்கும், சமுதாய நலன் விரும்பிகளுக்கும், வாழ்வியல் கருத்துக்களைத் தேடியலையும் இளைய சமுதாயத்தினருக்கும், கவிஉலகின் படிக்கெட்டில் ஏறத்துடிக்கும் இளங்கவிஞர்களுக்கும், ஓர் மிகச் சிறந்த கையேடு என்பதில் ஐயமில்லை.

"வருகை" என்னும் இக்கவிச் சோலையில் நுழையும்போது பல்வேறு வகையான காட்சிகளையும், கருத்துச் செறிமானம் மிக்க கவிதை வ களில் காதல், சோகம், மகிழ்ச்சி, புன்னகை, மௌனம் என்னும் பல்வேறு ரசங்களில், குறும்பாக்கள், உரைவீச்சுக்கள். ஹைக்கூ. போன்ற கவிதை வடிவங்களில் காணலாம்.

விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. என்கிறது பைபிள்.

"பீனிக்ஸ் பறவையின்
பயணம் முடிவதில்லை
என் பயணமும், என் முயற்சியும்,
என் ஓட்டமும்
தொடர்கிறது. பலனோ
தோல்வி - தொய்வு - வீழ்ச்சி:
ஓய்ந்தேன் - உறங்கினேன்,
தட்டி எழுப்பிற்று
நம்பிக்கை மீண்டும்



படிப்பகம்

www.padippakam.com

மீண்டும் முளைத்தன எனக்குப்
பீனிக்ஸ் இறக்கைகள்,
இனி வீழ்ந்தாலும்,
அழிந்தாலும்
பறப்பேன் பறப்பேன்
பறந்து கொண்டேயிருப்பேன்.
நெருப்புப் பறவையைப் போல
எனக்கும் இனி இலக்கு"

என்ற கவிதை வரிகள் நம்பிக்கையின் மகத்துவத்தை நன்கு உணர்த்துகிறதன்றோ!

சமுதாயத்தில் கண்ணுறும் சீரழிவுகளை சகிக்க இயலாத நிலையில், கவிதை உருவில் கவிஞருக்கு வடிகாலாகிறது.

"எதற்கெடுத்தாலும் ஊர்வலம்
எப்படி அதை ஒழிப்பது
அதற்கும் ஓர் ஊர்வலம்.

எனும் வரிகளும்

"பிணத்தை யார் புதைப்பது
கலவரத்தில்
நான்கு பிணங்கள்

எனும் வரிகளும் கவிஞர் சமுதாயத்தின் பால் கொண்டுள்ள பற்றிற்கும், சமுதாய சீர்கேடுகளை சாடும் முறைக்கும் சான்றாகிறது.

மனித வாழ்க்கையானது குறுகிய காலம்தான். அதற்குள் எத்தனை சுயநலம், வைராக்யம், பொறாமை, வஞ்சனை....

"நேற்றைய சவங்களை
இன்று சிலாகிப்பது
நாளைய சவங்கள்"

இக்கவிதை வரிகளை நம் மனதில் இருத்திக் கொண்டால் வீண் பிரச்னைகள் வெகுவாய் குறைந்து விடுமன்றோ? நாம் வாழும் நாட்கள் சொற்பம் என்றும், இவ்வுலக வாழ்க்கை அநித்தியம் என்றும் நாம் உணர்ந்தால், சமுதாய இன்னல்கள் எழ வாய்ப்பே இல்லை எனலாம்.

அதுமட்டுமன்றி, கவிஞர் தனது கவிதைத் தொகுப்பில், இயந்திரத்தன்மான அலுவலக நடைமுறையை

"அலுவலகத்தில் நெருப்பு
தீ அணைப்பான்
பூட்டிய அறைக்குள்"

என்னும் மூன்றே வரிகளில் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

முகம், இருள், நிறம், சருகுகள் இன்னபிற உரைவீச்சுக்கள், குறும்பாக்கள் கவிஞரின் கவிப்புலமையை வெளிப்படுத்துகின்றன.

"சிகரத்தின் நுனியில் ஒளிரும்
இலக்கின் இரகசியம் புரியுமா
வெற்றியன் ஏணிப்படிகளுக்கு
உறங்கும் உன் வாழ்வின்
தேடல்களுக்கு
விடை கிடைப்பது
ஏணியின் முதல்படியில்தான்"

எனும் கவிதை வரிகள் திசை கெட்டு திரியும் இளைய சமுதாயத்திற்கு நம்பிக்கை நங்கூரமாக விளங்குகிறது. இதே வரிசையில் நம்பிக்கையைப் பற்றிய அநேக உரைவீச்சுக்கள் இந்நூலில் அடங்கியுள்ளன.

மொத்தத்தில் .வருகை. என்னும் கவிதை நூல் மாலையானது பல வகை கவிப்பூக்களால், பல வண்ணங்களில் மிக எளிமையாக படித்ததும் உணரும் வகையில் தொடுக்கப்பட்டுள்ளது.

## தோற்றிருக்கலாம்

உன்னை விடு
என்னுடைய நகத்தை கூட
தினம்தினம்
புதிதாய்ப் பார்த்துணர்ந்த
நாட்கள் எங்கே
இன்று
என்னுடைய கைகளுக்கும்
உன்னுடைய தொடைகளுக்கும் கூட
வித்தியாசம் உணர முடியாத
பழைமையின் மரப்புத்தன்மை
அலுப்பாயிருக்கிற
இந்த
எந்திர மய வாழ்க்கை
தொடர்ந்திட
இனி என்ன
புதிதாக இருக்கப் போகிறது
மரணத்திலும் ....

பெ நாயகி





படிப்பகம்

www.padippakam.com

Estd : 1896

Phone : 04651 - 60061
61831

100 YEARS OF HEALTHY SERVICE
100
YEARS
1896-1996

# ஜெயானந்த வைத்யசாலை

களியக்காவிளை - 629 153
குமரி மாவட்டம்.

## AYURVEDA ORTHOPEDIC & GENERAL HOSPITAL

❖ X-RAY ❖ CLINICAL LAB ATTACHED

எல்லாவித
நோய்களுகளுக்கும் சித்த
ஆயுர்வேத முறையில்
சிகிச்சை அளிக்கப்படுகிறது.

ஜெயராம் வைத்தியர்
Dr. நீலா ஜெயராம்,
B.S., M.S.

## JEYANANDHA VAIDYASALAI

KALIAKKAVILAI - 629 153.



படிப்பகம்

www.padippakam.com

# என்ன செய்வது அப்பா?

அப்பா ...
கோபியோ சீனுவோ என்னை
அடித்தபோது
எந்தச் சிக்கல் கணக்கோ
என்னைச் சிரமப்படுத்தியபோது
உங்களிடம் ஓடிவந்து ...
முறையிட்டு
உங்கள் அரவணைப்பில்
ஆசுவாசமாய் ஒருங்கிய படி ...
தொட்டதற்கெல்லாம் மிரட்சியாகி
உங்களை ஒண்டிக்கொள்ளும்
பேதமை கூடிய அந்த
அறியாமையை
இன்னும் நான் அடக்கவே
இல்லை?

எதிர்காலம் பூச்சாண்டியாகி
என்னைப்பயமுறுத்திக்
கொண்டிருக்கிறது
இப்போது
நீங்கள் எதிர்கொண்ட ஒவ்வொரு
அனுபவமும்
குறி தவறிய அம்பாய்
உங்கள் இதயத்தைக் காயப்படுத்தி
உங்களைத் கையாலாகா தவராக்கி
நடைப்பிணமாய் மாற்றிய போது

நீங்களே ஒரு சிக்கல் கணக்காகி
விட்டபோது
எவரிடம் முறையிட...?
வேறு வழியில்லை அப்பா ...
இந்தக் கணக்கையும் நீங்கள்
தான் போட வேண்டும்.

வளர்ந்த பெண் வானுயர
வரதட்சணை
கண்முன் கலவரப்படுகிற போது
உழைப்பால் தேய்ந்த காய்களில்
காயங்கள்
பயமுறுத்துகிற போது
பாதியில் நிற்கும் வீடு
இறக்கைகள் அறுந்த பறவையாய்
வெலவெலக்கும் போது
இப்போது
இப்போது காலம் குதறிக்
கொண்டிருக்கும்
உங்கள் உடலுக்கு
பரிசோதனைகளும்
அறுவைச்சிகிச்சைகளுமே
அளவு கோலாகி
மருந்துவில்லைகளே சுவாசமாகி
உங்கள் ஒவ்வொரு அசைவிற்கும்
விலைகட்ட வேண்டி வந்தால்
என்ன செய்ய வேண்டும் அப்பா?

என்ன செய்தாலும்
காரண்டி கிடைக்காத போது
இருக்கும் இடம் விட்டு
அங்குலம் நகரவியலா
சிறைச்சாலைகள்
அடி அடிக்கு உள்ளிருக்கும்
சுழிகள்
என்னை விழுங்கிக்
கொண்டிருக்கும் போது

செய்ய வேண்டியது என்ன
வென்று
எப்போதும் போல்
எடுத்துச் சொல்ல வேண்டியது
நீங்களே ... ?

தெலுங்கில்
**சேஷபட்டர் வெங்கடரமணா**
தமிழில் **சாந்தாதத்**



படிப்பகம்

www.padippakam.com

## யோசி நீ கறுப்பா

இப்போதெல்லாம்
எந்த அலுவலகத்திலும்
வெள்ளிக்கிழமைப் பூசைகள்
தமுக்கோண்டு தாமரைப் பூவில்
காசு கொட்டும்
உள்ளங்கை விரித்த
ஒரு இலட்சுமி
ரெண்டு கண்ணாலும்
ரெண்டு பேரையும்
சைட் அடித்தபடி
ஒரு ஆனைமுகத்தான்
எப்போப் பார்த்தாலும்
வீணை வாசிக்கும் ஒரு சரஸ்வதி
(ஒண்ணுக்கு வந்தாக்கூட
விணையோடப் போவாங்களா)
வழக்கமான பூவன் பழங்கள்
தேங்காய்ச் சில்லுகள்
எங்குமே இருப்பதில்லை
இயேசு மாதா
மக்கா மதினா படங்கள்

ஆயுத பூஜை கொண்டாடும்
அலுவலகங்கள்
பக்ரீத் தில் ஆடோ
கிறிஸ்துமஸ்ஸில் "கேக்" கோ
வெட்டுவதில்லை
மனம் பெரிதான மைனாரிட்டிகள்
பெரிதாக இதை
பிரஸ்தாபிப்பதுமில்லை
அவைதான் வேற்று மதங்கள்
பெரும்பான்மையின்
காத்தவராயன்
சங்கிலி கறுப்பன்
மதுரை வீரன்
மாரி அம்மன்
அங்காள அம்மன் படங்கள்
வைப்பதில்லை ஏன்?
கருவாட்டுக் குழம்பும்
முருங்கைக்கீரையும்
அரிசி அடையும்
பிரசாதங்கள் ஆகாதா
நம்ம சாமிக்குப்
பிடிச்சதை தானே
நாம் படையல் போட முடியும்
யோசி நீ கறுப்பா.

அன்பாதவன்

## உழல

இப்படியே இனி
எதுவரை
இவ்விளங்காப்புதிர்?

இலையடி
நுரைக்கும் புழுக்கூடுகளாய்
மனசில் அரும்பும்
அதுதான் என்ன?

வெள்ளை மேகங்களை
நெருக்கி கறுக்கவரும்
ஈசானி மழை மேகங்களாய்
மூளைக்குள் விரிகிற
சூன்யப்புகை எங்கிருந்து?

நழுவும் இன்பம்
நங்கூரமிடும் துன்பம்
மழைகாண மணிவெடிப்பாய்
ஜீவனின் வரைபடம்
இன்னும் கீறி நீள

நாளும் நம்பிக்கையை
ஊதி ஊதி
நாளை நகர்த்தினாலும்
மனிதக்களம் துளையிட

எசதற்காகத்தானோ
இப்பயணம்?
இப்படியே இனி ...

பாரதி நிவேதன்

## முக்கியம்

இருக்கை விட்டு
எழுந்திருந்து
பேனாவைத் தேடி
பேனாவைத் திருகி
ஓர் கவிதை எழுது முன்
பவுன் நிறச் சிறகு குருவி ஒன்று
மாதுளை மர வேரின் ஓரம்
துணுக்கென
ஓர் சொட்டுமலம் கழிப்பது
ரசிக்கலாம்.

பா. சத்திய மோகன்



படிப்பகம்

www.padippakam.com

# மனத்தில் முத்து

ஆர். சூடாமணி

மேஜை மேலிருந்த பழுப்பு நிற செராமிக் குதிரைப் பொம்மை புன்னகை செய்து .ஹலோ!. என்று சொன்ன விநாடியில் அவள் குடலைப் பயம் கௌவியது.

"அம்மா, குதிர பேசுதும்மா!" அலறி அழ ஆரம்பித்தாள்.

மரகதம் ஓடி வந்து மகளை மார்புடன் அணைத்துக் கொண்டாள். மார்பின் சேலை மடிப்புகளுள் விம்மல்கள் அதிர்ந்தன.

"என் கண்ணே என் கண்ணே...."

தாய்க்கு மனம் விண்டு போயிற்று. தங்கப் பதுமை போன்ற மகள், அழகு மட்டுமா? அறிவுக்கென்ன குறைச்சல்? "கலைவாணி என்கிற பேர் எவ்வளவு பொருத்தம்! மேதை யாச்சே அவள்! கர்ப்பூரமாட்டம் கப்புன்னு புடிச்சுக்குவாளே எது ஒண்ணையும்!" என்று உறவும் உற்றாரும் பாராட்டியிருந்த அறிவுக்கூர்மை. இன்று இந்த அவலக் கோலம்.

"அம்மா குதிர என்னப் பார்த்து புஞ்சிரிப்பு சிரிக்குதும்மா! என்னண்டை பேசிச்சும்மா! பயமாயிருக்கும்மா!"

தாயின் பார்வை குதிரைப் பொம்மைக்கு மேல் சுவரில் தொங்கிய புகைப்படத்தில் சிரித்துக் கொண்டிருந்த பிஞ்சு அரும்பின் மீது சென்றது. இரண்டு வயது நிரம்பவில்லை. திருமணமாகி ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு கலைவாணியின் கருவறையிலிருந்து வெளிப்பட்ட பாலதேவன். இளஞ்சூரிய தகதகப்பாய் மின்னும் அழகு. இந்த செராமிக் குதிரையை அவனுக்காகப் பார்த்திபன் வாங்கிக் கொடுத்தபோது "ஏதானும் உடையாத மாதிரி பொம்மை வாங்கித் தரக்கூடாதா? முத்துப் பய குழந்தைதானே" கீழே போட்டுடிச் சுன்னா உடைஞ்சு போயிடாது? என்னதான் பிள்ளைன்னு ஆசை யிருந்தாலும் இப்படியா காசைக் கரியாக்குவாங்க?" என்று மரகதம் பெருமையோடு புகார் செய்தாள்.

ஆனால் முத்துப்பயல் குதிரைப் பொம்மையைக் கீழே போடவே இல்லை. அணைத்த அணைப்புக்குள் பாதுகாப்பாய் இறுக்கிக் கொண்டான். "என் குட்டிக் குதுல!. (என்னமோ இவன் பெரியமனுஷன் போல்தான்!) என்று சதா கொஞ்சுவான். அவனை அவள் குளிப்பாட்டும்போது அதன்மேலும் ஒரு "மக்" தண்ணீர் விடவேண்டும். பால் புகட்டும்போது முதலில் ஒரு மிடறு பாலை அதன் வாயில் வைக்க வேண்டும். அவன் தூங்கும்போது அதையும் பக்கத்தில் படுக்க வைக்க வேண்டும்.

"என் முத்துப்பயலாச்சே இவன்! என் செல்லக்குட்டி! என் வெல்லக் கட்டி!" என்று கலைவாணி குழந்தையைக் கொஞ்சுவாள்.

"அம்மா!"

"என் முத்துக்கண்ணா!"

"அம்மா!"

"என் கையில் முத்து. அவன் கையில் குதிர. அப்படித்தானேடா கண்ணு!" குழந்தையை முத்தமிடுவாள்.

"பீச்ல குதிரைச் சவாரி போகலாமா?"

"என் குட்டிக் குதுல!"

"குட்டிக் குதிர மேலத்தான் சவாரி பண்ணுவியா? அட போக்கிரிப் பயலே!" இன்னொரு முத்தம். "அது சரி முத்துக் கண்ணா; நீ பெரியவனானப்புறம்





படிப்பகம்

www.padippakam.com

என்னவாய் இருப்பே? டாக்டரா?"

குழந்தை சிப்பான். தலையாட்டுவான்.

"இல்லே, என்ஜினீயரா?"

அதற்கும் தலையாட்டுவான்.

"இல்லாட்டி சி.ஏ. படிப்பியா?"

குழந்தையின் வண்டுக் கண்கள் விரியும். சிரிப்பான். தலையாட்டுவான். "ஆமா" என்பான்.

"வேணாண்டா. எம்.சி.ஏ. படி. இன்னிக்கு கம்ப்யூட்டர் சயின்ஸுக்குத்தான் மதிப்பு இருபத்தொண்ணாம் நூற்றாண்டுல பேர் எடுக்கணுமில்ல? என்ன, கம்ப்யூட்டர் சயின்ஸ் படிக்கிறயா?"

"ம்" தலையாட்டுவான். அம்மாவுக்கு ஒரு முத்தம். பிறகு பொம்மைக் குதிரைக்கு. "குட்டிக் குதுலயும் பதிக்கும்."

"அடி சுட்டிப் பையா! அட என் முத்துக் கண்ணா!"

"அம்மா!" அம்மாவின் கழுத்தைக் கட்டிக் கொள்வான்.

"என் முத்துக் கண்ணா!"

"அம்மா!"

பெரியவனானப்புறம்.

பெரியவனாகவில்லை.

இரண்டே நாள் காய்ச்சலில். நிரந்தரக் குழந்தையாக முடிந்து போனான்.

கலைவாணியின் கற்பூர அறிவும் அணைந்தது.

மனச்சிதைவு என்றால் யாரையும் அடிக்கவில்லை. கடிக்கவில்லை. துணியைக் கிழித்துக் கொண்டு தெருவில் ஓடவில்லை. வெளித்தோற்றம் இயல்பாக இருந்தது. மேலோட்டமாய்ப் பார்க்கும்போது ஏதும் மாற்றமில்லை. மேஜையடியில் அமர்ந்து சுவல் சிரித்துக் கொண்டிருந்த பிஞ்சு மகனின் முகத்தை மார்பு பொங்க முக்த்தில் ஒருவிதப் பரவசத்துடன் நிமிர்ந்து பார்த்தவாறு நேரப் பிரக்ஞையின்றி மௌனத்தில் ஆழ்ந்திருப்பாள். வீட்டுக்கு வரும் விருந்தாளிகளோடு, அம்மாவின் அழைப்பின் பேரில் வெளியே வந்து, அமைதியாய் அமர்ந்திருப்பாள். அந்த அமைதி இயல்பு போலவே தோன்றும். அதிகம் பேசாதவர்கள் உலகில் எத்தனையோ பேர் இல்லையா என்ன?

"உன் வீட்டுக்காரர் என்னம்மா செய்யறார்?. என்று புதுமனிதர் யாராவது கேட்டால் "பாங்க் ஆபீசா" என்று ச யாய்ச் சொல்வாள். மூளை தெளிவாய்த்தானே இருக்கிறது? "ரெண்டு மாசம் முந்தி குழந்தைய சாகக் குடுத்தது லேர்ந்து ஒரு மாதி ஆய்ட்டா. என்று தாயார் சொல்லியிருந்ததை நம்புவது கஷ்டமாய்த்தானிருந்தது.

பல ன் உரையாடலிடையே திடீரென்று தன் மௌனத்தைக் கலைத்து "நேத்து பூரா ஒரே மழை" என்பாள்.

வியப்பாயிருக்கும். எதற்கு இந்த சம்பந்தமில்லாத தகவல்? ஆனால் தகவல் என்னமோ நிஜம்தான். முந்தைய நாள் மழை பெய்துதான் இருந்தது. புன்னகையோடு பதில் சொல்ல முடிந்தது.

"ஆமாம் ஆனா மழை இப்போ நமக்கு வேணுமேம்மா! தண்ணிப் பஞ்சம் வந்திடிச்சே! புழலேரியில் லெவல் பாதிக்குக் கீழே எறங்கிடிச்சாம். இந்த வருஷம் தண்ணிக்குத் திண்டாடப் போறோம். இப்பவே தெருக்கள்ல கலர் கலரா காலிக் குடங்க க்யூவாய் நிக்குது, தண்ணி லாரிக்காக.

"பாருங்க, அந்தக் கொட்டற மழையில நேத்து இவரு பாட்டுக்கு ஆபீசுக்குக் குழந்தைய எடுத்துக் கிட்டுப் போய்ட்டார், அதுக்குக் காய்ச்சல் வந்திடிச்சுன்னா?"

ஒரு திடுக்கிடல். லேசாக ஒதுங்கி உட்காரும் அவசரம். கடியாரத்தைப் பாக்கும் பாவனை.



படிப்பகம்

www.padippakam.com

"நேரமாகுது மரகதம்மா" நாங்க போய் வரோம். வேலைக்காரி இன்னிக்கு வரல்லே. நான் போய்த்தான் துணி துவைக்கணும். வரட்டுமாம்மா கலைவாணி?. வந்தவர்கள் ஓட்டமெடுப்பார்கள்.

"எம் புள்ளைக்கு காய்ச்சல் வந்திடிச்சுன்னா?"

பார்த்திபனுக்கு நன்கு பரிச்சயமான மனநல மருத்துவர் தயானந்திடம்தான் சிகிச்சை நடந்து கொண்டிருந்தது. பார்த்திபன் மரகதத்து வீட்டு மாப்பிள்ளை. சொந்த அண்ணன் மகன்தான். விதவையான மரகதத்துக்கு கலைவாணியைத் தவிர வேறு சந்ததி இல்லை. மகனுக்கு மகனாய், மருமகனுக்கு மருமகனாய், எல்லாமாய்த் துணை நிற்பவன் பார்த்திபன்தான். குழந்தை இறந்த துயரத்தையும் கலைவாணியின் அவலத்தைக் காணும் துன்பத்தையும் இருவரும் பகிர்ந்து கொண்டார்கள்.

ஆனால் இப்போது இந்த அதிர்ச்சி மற்ற யாவையும் தூக்கியடித்து விடுவதாய் இருக்கிறதே? இதுவரை இவள் இப்படிக் குமுறிக் குமுறி அழுததைப் பார்த்ததில்லை. தாயின் மார்பில் புதைந்த தலை எழுந்து சுவரில் தன் குழந்தையையும் அதன் கீழ் மேஜைமேல் அந்தக் குதிரையையும் மாறி மாறிப் பார்க்கிறது அழகிய முகம் வேதனைத் துடிப்பில் நடுங்குகிறது. கண்கள் நீரைக் கொட்டுகின்றன.

ஹலோ

"அம்மா அம்மா, பயமாயிருக்கும்மா...... குதிர பேசுதும்மா... ஹலோ சொல்லுதம்மா...."

மரகதம் கனத்து நெஞ்சுடன் பேரனின் படத்தைப் பார்த்தாள். காய்ச்சலில் படுப்பதற்கு ஒரு மாதம் முன்பு எடுத்த புகைப்படம். நூக்க மரச் சட்டத்துக்குள் சிரிக்கும் பிஞ்சுக் குழந்தை. நீலநிற ரோம்பர் பரும் சுவாரஸ்யமாய்க் கண் மலர்ந்திப் பார்க்கும் பிரகாச விழிகளும் ரோஜா நிறம் மின்னும் ஈர அரும்பு இதழ்களும் குண்டுக் கன்னத்தில் விழும் குழியும் கறுப்பு அலைகளாய்த் தலை கொள்ளாத முடியும்....

"ஐயோ ஐயோ, என்ன அழகு அக்கா உன் பேரன்! இதை அப்படியே கேமராவில் அள்ளிட வேணாம்?. ஊரிலிருந்து வந்திருந்த தம்பி சொன்ன வார்த்தைகள். மரகதத்துக்கு அப்போதே "பக்" கென்றிருந்தது. பச்சைக் குழந்தைக்குக் கண்ணேறு பட்டுவிடாதா? அதுவும் அவனுடன் வந்திருந்தாளே அவன் பொண்டாட்டி, மகா கொள்ளிக்கண்.

"படமெல்லாம் வேணாண்டா! அப்புறம் பிறந்தநாள் வருது. பார்த்துக்கலாம். என்று தடுக்கப் பார்த்தாள்.

"அப்ப என்னால வர முடியுதோ இல்லையோ! இந்தத் தங்கக் கட்டியைப் படம் பிடிச்சுக்காம போவேனா?.

எப்போதும் அவன் தோளில் தொங்கிக் கொண்டிருக்கும் கோனிகா காமிரா ஒரு துப்பாக்கி போலவா குழந்தையைக் குறி வைத்துச் "சுட்டது"?

ஊர் திரும்பிப் போனவன் பத்து நாட்களில் புகைப்படத்தை அஞ்சலில் அனுப்பினான். "எத்தனை அழகாயிருக்கு! சித்தப்பா. ஃபோட்டோ எடுக்கறதில் கில்லாடிதான்" என்று பார்த்திபன் மகிழ்ந்து. உடனே படத்தைப் பெரிது பண்ணிக் கண்ணாடியும் சட்டமும் போட்டு மாட்டிவிட்டான்.

இனி இருப்பதெல்லாம் இந்தப் படம் மட்டும்தான்.

ஆனால் அந்தத் துக்கத்தைக் கூடப் பின்தள்ளிவிட்டு மகளின் இந்தப் புதிய சிதைவு.

"குதிர பேசுதும்மா!"





படிப்பகம்

www.padippakam.com

இதுவரை உன்மத்தமாய் அமர்ந்திருப்பாள், அல்லது சம்பந்தமில்லாமல் ஏதாவது சொல்வாளே தவிர குதிரையும் யானையும் பேசுவதாய்ச் சொன்ன தில்லை. கோளாறு இன்னும் ஒரு படி மோசமாகிவிட்டதா? வைத்தியம் நடந்து கொண்டிருக்கும் போதேயா?

டாக்டர் இதுவரை அவளுட னான உரையாடல்கள் மூலமும் மருந்து மாத்திரைகளாலுமே சிகிச்சை அளித்து வருகிறார். மின் அதிர்வு வைத்தியம் தேவையென்று தாம் கருதவில்லை என்று கூறியிருந்தார். இப்போதைய சிகிச்சை முறையிலேயே குணப் படுத்திவிடுகிற நம்பிக்கை அவருக்கு இருந்தது.

அதெல்லாம் வீண்தானா? சிகிச்சையைத் தீவிரமாக்க வேண்டுமா? இவள் நிலை முன்பை விட சீர்கெட்டு...

எலெக்ட்ரிக் ஷாக் தர வேண்டுமா?

அடி என் கண்ணே, என் கலைவாணி...

"குதிர பேசுதும்மா! குதிர பேசக்கூடாது. குதிரயெல்லாம் மனுஷங்களாட்டம் எப்படிம்மா பேசும்? குதிர பேசுது. எனக்கு பயமாயிருக்கு....

திடீரென்று ஓர் ஒளிக்கீற்று பயாந்தாற்போன்று மூளை சிலிர்த்துக் கொண்டது. குதிரை பேசுவதாய்ச் சொன்னது புத்தி பேதலிப்பு என்றாலும், குதிரை பேசக்கூடாது என்று உணர்வது புத்தியின் தெளிவுதானே?

மரகதம் ஒரு புது நம்பிக்கை யோடு மகளின் கண்ணீர் பெருகும் முகத்தைப் பார்த்தாள். இது நல்ல அறிகுறியல்லாவா? பின்னடைவு போல் தோன்றுவது ஒருகால் முன்னேற்றத்தின் விடிவெள்ளியா? அப்படியும் இருக்குமா? அமெரிக்கா போய்ப் படித்துவிட்டு வந்த டாக்டரின் கணிப்பு தவறாகவா போகும்? மாலையில் பார்த்திபன் வீடு திரும்பியதுமே இவளை கிளினிக்குக்கு அழைத்துப் போக வேண்டும்.

"கலைவாணி, என் தங்கமே, உனக்கு ஒரு குறையும் வராது, எல்லாம் சரியாப் போயிடும்..." அழுகையில் குலுங்கும் முதுகைத் தடவிக் கொடுத்தாள். கண்ணீரைத் துடைத்தாள். உனக்கு எல்லாம் சரியாப் போயிடும் பாரேன்.....

டாக்டர் தயானந்தும் நம்பிக்கையளிக்கும் விதமாகவே பேசினார். ஒரு நடப்பு சரியில்லை என்று நோயாளி தானாகவே புரிந்துகொள்ள முடிந்தால் அறிவு முற்றுமாக அழிந்து போகவில்லை என்பது சாத்தியம்தானாம். அத்தகைய மூளைநோய் வகையை குணமாக்க அதிக வாய்ப்பு உண்டு என்று ஆறுதலளித்தார்.

விதவிதமான மாத்திரைகள் தொடர்ந்தன. கலைவாணியின் கண்களிலிருந்து மருட்சி குதிரைப் பொம்மையை உற்று உற்றுப் பார்த்தது. பார்வை மேலேறி, சுவர்ப் படத்திலிருந்த தன் குழந்தையை வெறித்தது.

ஆண்டவனையும் மருத்துவ ரையும் நம்பிக்கை அறாமல் பற்றிக்கொண்டு மகளுடன் கிளினிக் சென்று வந்துகொண்டிருந்த மரகதத்தின் துயரத்தில் அரணாக வேண்டுதல்கள். சமயபுரத்தாளே, என் மகளைக் குணமாக்கு, உன் சன்னிதிக்கு வந்து தலைமேல் தீச்சட்டி சுமக்கிறேன்...

ஏழுமலையானே, என் குழந்தையைக் குணமாக்கு, உன் மலைக்குப் படியேறி வந்து அங்கப்ரதட்சிணம் செய்கிறேன்...

வேளாங்கண்ணி ஆரோக்கிய மாதாவே....

ஏற்காடு கருமாரியம்மனே...

எந்தத் தெய்வம் அருள்


படிப்பகம்

www.padippakam.com

தந்தாலும் கையேந்தக் காத்திருந்தாள்.

மூட்டமிடும் இருள் திரள்கள். அதில் திட்டுத் திட்டாய் தலைதூக்கி முகத்திலடிக்கும் பய அதிர்வுகள். என் மகளுக்குக் குணாகுமா? ஆகும்தானே? முன்பளவு மோசமாயில்லையல்லாவ? வைத்தியம் பயன் தருகிறதல்லவா? நல்லபடியாகி மறுபடியும் எல்லாரைப்போல் குடித்தனம் நடத்தினால் அவளை உன் கோவிலுக்கு அவள் கணவனுடன் அழைத்து வருகிறேன் நடராஜ பெருமானே.... இன்னொரு குழந்தை பிறந்து விட்டால் இந்தக் குழந்தையின் நினைவை ஒரு முத்துப்போல் மனப் பேழையில் பத்திரப்படுத்திவிட்டு வாழ்க்கையை இயல்பாகத் தொடரலாம். அந்தப் பாக்கியம் என் கற்பூர கண்மணிக்கு கிடைக்குமா தெய்வங்களே?

இருளில் லேசாய் சாம்பல் பூத்தது. கருமைக்கும் வெளுப்புக்குமிடை நிறம் ஊசலாடி மெல்ல வெள்ளையின் பக்கம் சாய்ந்தது. விடியலின் மப்பான வெண்மை. முட்டி மோதி லேசாய்த் தலை நீட்டும் வெளிச்சக் கீற்று. மேக மூட்டம் கலைந்து கலைவாணியின் முகத்தில் சுவடு காட்டும் சூரிய ஒளி.

இவ்வளவு" தெளிவாக. மகிழ்ச்சியாக, அவளைப் பார்ப்பது நிஜம்தானா? தாய்க்கும் கணவனுக்கும் முதலில் நம்பக்கூட பயமாயிருந்தது. ஆனால் இது உண்மை. தவமிருந்து யாசித்துப் பெற்ற மாற்றம். "குதிர பேசுதும்மா! பயமாயிருக்கும்மா!" என்று அழுது துடித்த காட்சிக்கும் இப்போது இந்த முகத்தின் அமைதிக்கும் சம்பந்தமே இல்லையே! "இப்ப குதிரை பேசுதா கண்ணு?" என்றால் பிரமித்த மௌனத்தில் தலை இடவலமாய் அசைகிறது. டாக்டரின் சிகிச்சைக்குப் பயன் இருப்பதாகத்தான் தோன்றியது., இனி படிப்படியாக முழுக்குணம் ஆகிவிடும்...

சமயபுரத்தாளே! நன்றி. வந்து தீச்சட்டி சுமக்கிறேன்.

ஏழுமலையானே! நன்றி வந்து அங்கப்ரதட்சிணம் செய்கிறேன்.

கூத்தப்பெருமானே! நன்றி. உன் கோயிலுக்கு மகளையும் மருமகனையும் அழைத்து வருகிறேன். நாளை அவர்களுக்கு மகன் பிறந்தால் நடராஜன் என்று பெயர் வைக்கிறேன்.

அவளருகில் சிறிது நேரம் நின்று பூப்போல் அவள் தோளைத் தொட்டு ஆதரவாய் அழுக்கிக் கொடுத்தபோது மரகதத்தின் விரல்கள் நடுங்கின. பார்த்திபன் கண்ணீர் மல்க மனைவியைச் சிறிது நேரம் பார்த்து நின்றான்.

"அவளுக்குச் சரியாய்ட்டு வருது, இல்லே அத்தை?"

"ஆமாம்ப்பா" ஆயிட்டு வருது ஆகணும். ஆயிடும்.

இரவு எட்டு மணி

மரகதம் மருமகனுக்கு உணவு பரிமாறினாள். பிறகு ஒரு கிண்ணத்தில் பருப்புச் சோற்றை நெய்விட்டுச் சர்க்கரை தூவிப் பிசைந்தாள், இன்னொரு கிண்ணத்தில் குழம்புச்சோறு. அவற்றையும் கத்திரிக்காய் காரப் பொரியலையும் சிறு கப்பில் தயிரையும் ஒரு ஸ்பூனோடு தட்டில் வைத்து மகளிடம் எடுத்துப் போனாள். வாய் வாயாக ஊட்டி விட்டாள். வாயைத் துடைத்து தண்ணீர் அருந்தக் கொடுத்தாள். இதையெல்லாம் மகள் தானாகவும் செய்வாள்தான். ஆனால் ஒவ்வொரு க்வளத்துக்கும் யாராவது கூடவே இருந்து சொல்லிக் கொண்டிருக்க வேண்டும். சாப்பிட்டு முடிக்க ஒரு மணி நேரம் ஆகிவிடும். கலைவாணி அந்த மேஜையடியில் உட்காரு



படிப்பகம்

www.padippakam.com

முன் சாப்பாடு ஊட்டிவிடுவது நல்லது. அங்கு உட்கார்ந்து விட்டால் லேசில் எழுந்திருக்க மாட்டாள். சாப்பிட வாயைக் கூடத் திறக்க மாட்டாள். போகிறது எல்லாம் சரியானபின் தானாகச் செய்து கொள்ளட்டுமே! அந்த நாள் தொலைவில் இல்லை.."

மரகதம் திருப்தியுடன் உள்ளே போனாள்.

மேஜையருகில் நாற்காலியில் கலைவாணி மௌனமாய் அமர்ந்திருந்தாள். கண்கள் பரவசத்தில் அமிழ்ந்த நிலை. அந்தப் பரவசத்தின் இலக்கு சுவல் கண்ணாடி, சட்டத்துள் சிரித்துக் கொண்டிருந்தது.

முத்துக் கண்ணா!

அம்மா!

எனக்கு இப்போத்தாண்டா சந்தோஷமாயிருக்கு கண்ணா! இந்தக் குதிர பேசினப்ப பயந்தே போய்ட்டேன்.

அம்மா!

குதிரயெல்லாம் பேசக்கூடாதில்லையா? அது பேசின வரைக்கும் நீ பேசவே இல்லையேடா ராஜா! உன் குரலை கேக்காம நான். துடிச்சுப் போய்ட்டேண்டா! இப்ப அது பேசறதை நிறுத்தினப்புறம் தானே நீ முந்தி மாதி மறுபடியும் என் கூட பேசறே?

அம்மா!

இப்ப நான் எவ்வளவு சந்தோஷமாயிருக்கேன் தெரியுமா? நீ என்னோட பேசாட்டி எனக்குப் பைத்தியம் பிடிச்சுடும்டா முத்துக் கண்ணா! பேசுடா ராஜா!

அம்மா!

முத்துக் கண்ணா!

அம்மா!

என். முத்துக்கண்ணா!

அம்மா!

## நடுங்கும் பூமியின் குரல்

அலமாரியில்
அமர்ந்திருந்த பொம்மையின்
இமைகள் விரிந்து
நடுங்க ஆரம்பித்தன
கை கால்கள்

கீழே குதித்து
உடைந்து சிதறின
ஒன்றன் மேல் ஒன்றாய்
அடுக்கி வைத்த பானைகள்

சோம்பல் முறித்து
கொட்டாவி விடுவது போல்
வாய் பிளந்து
விரிசல் விட்டது
மதிந்தவர்

உட்கட்சி சண்டைபோல்
தமக்குள் முட்டி மோதி
காயம் பட்டு
கீழே விழுந்து உருண்டன
பாத்திரங்கள்

குழந்தைகளைச் சுமந்து
ஆடிய தொட்டில்கள்
அசைய மறுத்து
விரைத்து நின்றன

உறங்குபவர்களை
உலுக்கி எழுப்பி விட்டு
அஞ்சி நடுங்கி
ஆடிக் கொண்டிருந்தன
கட்டிலின் கால்கள்
தரையில் உறங்கியவர்களுக்கு
தெளிவாய்க் கேட்டது
ஊளையிட்டு அலறும்
பூமியின் குரல்.

இ. சாகுல் அமீது.



படிப்பகம்

www.padippakam.com

பொட்டல் வட்டாரத் திருமணச் சடங்குகள்

# இரண்டாம் நாள் நிகழ்ச்சி

பொன்னீலன்

**1. ஆலங்கால் நாட்டுதல்**

இரண்டாம் நாள் நடக்கும் முதல் நிகழ்ச்சி இது. மாப்பிள்ளை குளித்துப் புத்தாடை கட்டி, அலங்காரம் செய்து கொள்வார். ஊர் குடிமகன் கொண்டு வரும் புதுமை மாறாத ஆலங்கொம்பைப் பந்தலிலோ, அல்லது. வீட்டின் முன் அறையிலோ மணல் நிரப்பப்பட்ட ஓலைப் பெட்டியில் ஊர்த்தலைவர் தொட்டுக் கொடுக்க சொக்காரன் மார் எல்லோருமாகச் சேர்ந்து ஊன்றுவார்கள். குடிமகன் முழுத் தேங்காயை இரண்டாக உடைத்து, அதன் தண்ணியை அதில்வி லிடுவார்.

இவ்வாறு கால் நாட்டியதும் ஊருக்கு வெற்றிலை வைக்க வேண்டும் இத்தனைக் கட்டு வெற்றிலை, இத்தனை நாளி பாக்கு. இத்தனை பிடி (கைப்பிடி அளவு) புகையிலை (யாழ்பாணம் காய்ந்த புகையிலை) என்ற கணக்குப் படி மாப்பிள்ளை வீட்டார் ஊருக்குக் கொடுத்து விட வேண்டும். இதை ஊரார் பங்கு போட்டு எடுத்துக் கொள்வார்கள்.

மாப்பிள்ளை முகூர்த்தப் பாய் விரித்திருக்கும் அறையில் போய் கிழக்கு முகமாக நிற்பார். மாப்பிள்ளையின் தகப்பனார் அல்லது அவர் தகுதியிலுள்ள வேறொருவர் மணமாலையை எடுத்து மாப்பிள்ளை கழுத்தில் போடுவார். மாலையுடன் வெளியே ஆலங்கால் இருக்கும் இடத்தில் வருவார் மணமகன். அங்கு பெஞ்சுகளில், அல்லது நாற்காலிகளில் மாப்பிள்ளையின் தாய்மாமன்மார் உட்கார்ந்திருப்பார்கள்.. மாப்பிள்ளையின் தாய் தன் உடன்பிறந்தாரின் காலடிகளில் அரிசி வெற்றிலை, பாக்கு, பழம், வைக்கப்பட்ட பனை நார் பெட்டிகளை வைக்க, மணமகன் ஆலங்காலைத் தொட்டுக் கும்பிட்டு விட்டு, மாமன் மார் கால்களையும் தொட்டுக் கும்பிடுவார். மாமன்மார் மருமகனுக்குப் பொன்னோ பணமோ பரிசமாகக் கொடுப்பார்கள். வாங்கிக் கொண்டு மணமகன் ஆலங்கால் அருகே ஒரு இருக்கையில் கிழக்கு முகமாய் உட்காருவார். குடிமகன் ஒரு கிண்ணத்தில் தேங்காய்பால் கொண்டு வைப்பார். அதில் ஆலம் இலைகளைத் துண்டுத் துண்டாகக் கிழித்துப் போடுவார். சொக்காரன்மார் ஒவ்வொருவராக வந்து, கிண்ணத்திலிருக்கும் ஆல இலைத் துண்டுகளை இரண்டு கைகளாலும் எடுத்து, மாப்பிள்ளையின் முகத்தை மூன்று முறை சுற்றிவிட்டு, அந்த இலைத் துண்டுகளைத் திரும்பவும் பாலில் போட்டு விடுவார்கள். இதற்கு "அனந்தரம்" செய்தல் என்று பெயர். கடைசியில் மாப்பிள்ளையின் தகப்பனார் அல்லது அந்தத் தகுதியிலுள்ளவர் அனந்தரம் செய்வார். மாப்பிள்ளை ஊர் குடிமகன் குடை பிடிக்க, ஊர் வண்ணார் மாற்று விரிக்க, பெண் வீட்டுக்குப் புறப்படுவார். மாற்று விரிப்பின் நீள அளவு மாப்பிள்ளை வீட்டாரின் பொருளாதார வசதியைப் பொறுத்தது.

மாப்பிள்ளையோடு ஒரு தோழத்தானும் புறப்படுவார். இவர் பெரும்பாலும் மணமகனின் உடன் பிறந்தாள் புருஷனாக இருப்பார். மாப்பிளைக்கு அடுத்துப் போகிறவர் மாப்பிள்ளையின் உடன் பிறந்தாள், அல்லது அவள் தகுதியிலுள்ள பெண். அவர் கையில் ஒரு



படிப்பகம்

www.padippakam.com

பெட்டியிருக்கும். அதைப் பேழைப் பெட்டி என்பார்கள். தாலி, பட்டு, பெண்ணுக்குரிய இதர ஒப்பனைப் பொருள்கள் எல்லாம் அந்த பேழையில் தான் இருக்கும். இந்தப் பேழைப் பெட்டிக் காரர்தான் தாலிகட்டும் நேரத்தில் மாப்பிள்ளையின் கையிலிருந்து தாலியை வாங்கி அதைச் சரியாகப் பூட்டுகிறவர். இதற்குப் பெயர் பொன் பூட்டு. இதனால் அப் பெண்ணுக்குப் பொன் பூட்டுகிறவள் என்றும் பெயருண்டு.

**பெண்வீடு**

மாப்பிள்ளையும் அவர் ஆட்களும் பெண்ணின் ஊருக்குள் அனுமதியின்றி நுழைந்து விட முடியாது. ஊர் எல்லையில் அவர்கள் காத்து நிற்க வேண்டும். ஊர்த் தலைவருக்கு ஊர் நியதிப் படியுள்ள வெற்றிலை பாக்கு, புகையிலை இவற்றோடு ஊர்ப்பணமும் கொடுத்தனுப்ப' இதைத் தலைவர் பெற்றுக் கொண்டதும், ஊர்க் குடிமகன் முரசடித்து ஊர் கூப்பிடுவார். ஊரார் கூடி பெண் வீட்டிலும் ஆலங்கால் நாட்டுவார்கள். இப்போது மாப்பிள்ளையும் ஆட்களும் பெண் வீட்டில் திருமணம் நடக்கும் பந்தலின் முன்னே மேளத்தாளத்தோடு வருவார்கள்.

**எதிர்மாலை போடுதல்**

பெண்ணின் உடன் பிறந்தவர், அல்லது அந்தத்தகுதியிலுள்ளவர் ஒரு தாம்பாளத்தில் எதிர் மலை, சந்தனம், பன்னீர் எல்லாம் கொண்டு சொக்காரர்மார் உறவினர் சூழ மேள தாளத்தோடு மாப்பிள்ளையை எதிர் கொண்டு அழைக்க வருவார். மாப்பிளை பன்னீர் தெளித்து, சந்தனம் பூசி தன் தாம்பாளத்திலிருக்கும் மாலையை மாப்பிள்ளைக்கு போட்டு, மாப்பிள்ளை கழுத்தில் கிடக்கும் மாலையைக் கழட்டித் தன் தாம்பாளத்தில் வைத்து, மாப்பிள்ளையை அழைத்து கொண்டு வருவார். மாப்பிள்ளையின் மாலையைத் தாம்பாளத்தோடு பெண்ணிடம் கொடுத்து விட்டு அவர் திருமணத்திற்கென்று ஏற்றி வைத்திருக்கும் குத்து விளக்கைக் கொண்டு வந்து பந்தலில் ஒரு இடத்தில் வைப்பார். விளக்கின் அருகே மாப்பிள்ளையையும் தோழத் தானையும் விளக்கைப் பார்க்க கிழக்கு முகமாக உட்கார வைப்பார். மாப்பிள்ளை வீட்டை போலவே இங்கும் கால் நாட்டு சடங்கு நடைபெறும்..

**மாமன் கல்யாணம்**

மணவறை அருகே மாமன்மார் வரிசையாக உட்கார வைக்கப்படுவார்கள். முனை முறியாத மஞ்சள் கட்டப்பட்ட நூலை குடிமகன் மாமன்மாரின் வலது மணிக் கட்டில் கட்டுவார். இதற்குக் காப்பு கட்டுதல் என்று பெயர்.. அரிசி, மாமன்மாருக்குரிய ஆடைகள் எல்லாம் பெட்டிகளில் வைத்துப் பெண்ணின் தாயார் ஒவ்வொரு பெட்டியையும் தன் உடன் பிறந்தவர் ஒவ்வொருவர் காலடியிலும் வைப்பார். குடிமகன் மாமன் மாருக்கு காப்புக் கட்டி, அவர்களை ஒவ்வொருவராக ஒரு தட்டிலிருந்து அரிசி அள்ளச் செய்வார். அரிசி அள்ளியதும் அரிசி மேலே ஒரு தேங்காய் வைப்பார். இப்போது மாமன் அரிசியை ஒழுக விட வேண்டும். இவ்வாறு மூன்று தடவை செய்ய வேண்டும். ஒவ்வொரு மாமனும் இப்படிச் செய்ய வேண்டும்.

இப்பொழுது பெண்ணின் மதனிமார் பெண்ணை அலங்கரித்து அழைத்து வந்து மணமேடையில் உட்கார வைப்பார்கள், பெண்ணிற்கு குடிமகன் காப்புக் கட்டுவார், பெண்ணின் முன்னே தட்டத்திலி



படிப்பகம்

www.padippakam.com

ருங்குகம் அரிசியை பெண் அள்ள வேண்டும். கையில் அரிசியின் மேலே ஒரு தேங்காயைக் குடிமகன் வைப்பார். அந்த அரிசியைப் பெண் தட்டத்தில் ஒழுக விடுவார். இவ்வாறு பெண் மூன்று தடவை செய்ய வேண்டும். பிறகு பெண்ணின் சொக்காரன்மார் பெண்ணுக்கு அனந்தரம் செய்வார்கள். அப்புறம் பெண் எழுந்து மணமேடையைச் சுற்றி வந்து, ஆலங்காலைத் தொட்டுக் கும்பிடுவாள். பின் மாமன் மாரை வரிசையாகக் காலில் விழுந்து கும்பிடுவார்.

மாமன்மார் பெண்ணிற்குத் தங்கள் தகுதிக்குத் தக்க நகையோ, பணமோ பரிசம் போடுவர்ர்கள். பெண் வீட்டுக்குள்ளே போவார்.

**முகூர்த்தப்பட்டு கட்டுதல்**

பேழைப் பெட்டியுடன் உள்ளே வந்த பொன் பூட்டுக்காரி (மாப்பிள்ளையின் அக்கா அல்லது தங்கை)யும் அவர் உறவுக்காரப் பெண்களும் பெண்ணுக்குத் தாங்கள் கொண்டு வந்த ஆடைகளை உடுத்தி, அலங்காரம் பண்ணுவார்கள். மாப்பிள்ளையிடம் இருந்து வாங்கி வந்திருக்கும் மாலையைப் பெண்ணின் தகப்பனார் பெண் கழுத்தில் போடுவார். மாப்பிள்ளையின் தம்பி அல்லது தம்பிமுறை உள்ளவர் தட்டத்தில் வெற்றிலை, பாக்கு, பூ, இவைகளின் மேலே, தாலியை வைத்து, அதற்குச் சந்தனம், குங்குமம் பொட்டிட்டு, பந்தலில் இருக்கும் பெரியவர்களிடம் வாழ்த்துப் பெறுவர். பெரியவர்கள் தாலியைத் தொட்டு ஆசீர்வதிப்பார்கள். பூச்சொரிவதற்காக இளைஞர் ஒருவர் உதிரிப் பூக்களை விருந்தினர் களுக்கு கொஞ்சம் கொஞ்சம் கொடுப்பார்.

இதற்கிடையில் மாப்பிள்ளை முன் வைக்கப்பட்ட குத்து விளக்கை மணமகனுக்கு எதிர்மாலை போட்ட மைத்துனன் எடுத்து மணமேடையில் வைப்பார். பக்கத்தில் வாழை இலை போட்டு, அதில் நிறைநாழி, பழம், வெற்றிலை, பாக்கு, பூ, வைத்து மேடையைத் தாயார் படுத்துவார் குடிமகன். மணமகனும் அவர் கிடப்பக்கம் மணமகளுமாகக் கிழக்கு நோக்கி உட்காருவார்கள். தாம்பாளத்தில் அரிசி வைத்து அதில் இரண்டு கை நிறைய அள்ளச்சொல்லி, அந்த அரிசி மேலே தேங்காய் வைத்து, அரிசியை விரல்கள் வழியே கீழே ஒழுக விடச் சொல்லி மூன்று தரம் அரிசிச்சடங்கு மாப்பிள்ளை செய்வார். அதே மாதிரி பெண் செய்வார். கெட்டிமேளம் முழங்க, குடிமகன் தாலி எடுத்துக் கொடுக்க, மாப்பிள்ளை வாங்கி மணமகள் கழுத்தில் சேர்ப்பார். பொன்பூட்டுக் காரி தாலியைப் பிடித்துச் சரியான முறையில் பெண்ணின் கழுத்தில் பூட்டி விடுவார். உற்றாரும் உறவினரும் பூக்களை மணமக்கள் மீது சொரிவார்கள்.

பழைய நாட்களில் தாலி கட்டு சூரிய உதய நேரத்தில் தான் நடைபெறும். இன்று பெரும்பாலும் முற்பகலில் நடைபெறுகிறது. உதய நேரத்தில் அபூர்வமாகவே நடை பெறுகிறது.

இன்று திருமணச் சடங்கைப் பண்டாரங்கள் அல்லது குருக்கள் எனப்படும் சமூகப் பிரிவினர். அல்லது பயிற்சி பெற்ற சுய சாதியர், அல்லது அய்யர்கள் நடத்துகிறார்கள். சீர்திருத்தத் திருமணங்கள், இங்கே மிக மிக அபூர்வம். குருக்கள், புரோகிதர்கள் நுழைந்ததை ஒட்டி திருமணத்தில் மந்திரங்களும், ஓம குண்டமும் மேலும் பல சடங்குகளும் நுழைந்து விட்டன.

தாலிகட்டு முடிந்தும் மாப்பிள்ளை வீட்டார் அனந்தரம்





படிப்பகம்

www.padippakam.com

செய்வார்கள். பெண்ணின் தகப்பனார் பெண் கையை எடுத்து மாப்பிள்ளை கையில் வைத்து, இருவரையும் இணைப்பார். மாப்பிள்ளையின் சகோதரன் (பெரும்பாலும் தம்பி) மணமேடையிலிருக்கும் குத்துவிளக்கைத் தூக்கிக் கொண்டு முன்னே நடக்க, இணைக்கப்பட்ட கையுடன் மாப்பிள்ளையும் பெண்ணும் அவரைத் தொடர, மாப்பிள்ளை சகோதரியோ பேழைப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு அவர்களைத் தொடர, பின்னால் மாப்பிள்ளையின் இதர சகோதரர்கள், பெண்ணின் மதினிமார் போக.. ஊர் வலம்போல் மணமேடையை இவர்கள் மூன்று சுற்று சுற்றுவார்கள்.

பெரும்பாலும் குத்து விளக்கு கனத்துக் கிடக்கும். முங்க முங்க எண்ணெய் விட்டிருப்பார்கள். எண்ணெய் சிந்தாமல், உடம்பு கூனாமல் மணமகன் தம்பு விளக்கைத் தூக்கி மூன்று முறை சுற்றுவது சிரமம். அவரைக் கேலி செய்ய வென்றே முறைப் பெண்கள் சுற்றிலும் நின்று கொண்டிருப்பார்கள். பெரிய வேடிக்கை.

மூன்று சுற்று முடிந்ததும் மணமகனின் தம்பி விளக்கை மணமேடையில் வைப்பார். மணமக்கள் மணமேடையில் உட்காருவார்கள். பெண்ணின் தகப்பனார் சேர்ந்திருக்கும் அவர்களின் கைகளை பிரித்து விடுவார்கள்.

**தாரை வார்த்தல்**

பெண்ணின் கையை அடியிலும் மாப்பிள்ளை கையை மேலேயும் வைத்து, தேங்காய்ப் பாலைக் கைகளில் மூன்று நேரம் விட்டுத் தாரை வார்த்துக் கொடுப்பார். பெண்ணின் தகப்பனார். பின் மாப்பிள்ளைக் கையை கீழேயும் பெண் கையை மேலேயும் வைத்துத் திரும்பவும் தாரை வார்ப்பார். இதே போல் பெண்ணின் மாமன் மாரும் மணமக்களுக்குத் தாரை வார்த்துக் கொடுப்பார்கள்.

மணமேடையில் இருக்கும் எண்ணெய்க் கிண்ணத்தில் பெண்ணின் தகப்பனார் அவர் சக்திக்குத் தக்க மோதிரமும் சில நாணயங்களும் போடுவார். இதற்கு எண்ணெய்க் காசு என்று பெயர். இதைக் குடிமகன் எடுத்து விளக்குத் தூக்கியவரிடம் கொடுப்பார்.

மாப்பிள்ளை பெண்ணுக்கும், பெண் மாப்பிள்ளைக்கும் தலையில் மூன்று நேரம் எண்ணெய் தொட்டு வைக்கணும். பெண்ணின் சகோதரன் ஒரு தட்டத்தில் சோறும் அதில் மூன்று உத்த பழமும் ஒரு தம்ளரில் பாலும் கொண்டு வந்து, மூன்று தடவை மாப்பிள்ளைக்குப் பால் பழம் கொடுக்கணும் சாப்பிட்டு மாப்பிள்ளை வாய் கொப்பளித்தும் வெற்றிலை கொடுக்கணும்.

மாப்பிள்ளை சகோதரன் (விளக்கு தூக்கியவர்) குத்து விளக்கைத் திரும்பவும் எடுத்து கொண்டு பெண்ணையும் மாப்பிள்ளையையும் கூட்டிக் கிட்டு முகூர்த்தப் பாய் விரிக்கப்பட்டிருக்கும் அறைக்குப் போய், குத்துவிளக்கை வைப்பார், பெண்ணும் மாப்பிள்ளையும் முகூர்த்தப் பாயில் உட்காருவார்கள். பெண்ணின் மாமியார் வந்து மருகமளுக்குப் பாலும் பழமும் கொடுப்பார்.. பந்தலில் விருந்தினருக்குச் சைவச் சாப்பாடு தொடங்கும்.

விருந்து முடிந்ததும், மாப்பிள்ளை வீட்டார் பெண் வீட்டாரிடம் விடைபெற்றுப் போய் விடுவார்கள். நல்ல நேரம் பார்த்துப் பெண் வீட்டார் பெண்ணை மாப்பிள்ளையுடன் மாப்பிள்ளை வீட்டுக் வாழ விடுவார்கள்.. கொஞ்சம் பாத்திரங்கள், அரிசி, தேங்காய் வெற்றிலை பாக்கு



படிப்பகம்

www.padippakam.com

ஆகியவற்றுடன் முறுக்கு, முந்திரிக் கொத்து, உன்னியப்பம் போன்ற சில பண்டங்கள் வெற்றிலை பாக்கு, ஒரு குலை பழமும் கொடுத்தனுப்புவார்கள். இது பெண்ணின் மாமியாருக்கு அனுப்பப்படும் மடிப்பண்டம்.

பெண் புருசன் வீட்டுக்குப் போனதும், பெண்ணின் மாமியார் ஒரு கை விளக்கைக் கொண்டு வந்து தன் மருமகளை வாசலில் வரவேற்பார். மருமகள் அந்தக்கை விளக்கைச் கொழுத்தி இரண்டு கைகளிலும் வைத்துக் கொண்டு, வலது காலை எடுத்து வைத்து உள்ளே போக வேண்டும். பெண்ணும் மாப்பிள்ளையும் படுக்கும் அறையில் அந்த விளக்கைக் கொண்டு போய், அங்கு வைக்கப்பட்டிருக்கும் குத்து விளக்கை (தாலி கட்டும் போது மணமேடையிலிருந்த குத்து விளக்கு) பெண் ஏற்ற வேண்டும் மாமியார் பெண்ணுக்குப் பாலும் பழமும் கொடுப்பார். தன் பொருளாதார நிலைக்குத் தக்க நகையும் போடுவார்.

**வீடு காணுதல்**

அன்று மாலை பெண்ணின் தாயார் தன் உறவினர்களோடு மருமகன் வீட்டுக்குப் புறப்படுவார். பாத்திர பண்டங்கள், சீர் வரிசைகள், மகள் சமயலுக்குக் கொடுக்க வேண்டிய அரிசி, காய்கறிகள், மசலாச் சாமான்கள், முறுக்கு, முந்திரிக் கொத்து, பண்ட வகைகள், அன்று மாலையில் மாப்பிள்ளை விட்டில் மாப்பிள்ளை வீட்டுக்ரார்களுக்கும் தங்களுக்கும் சாப்பாடுக்குத் தேவையான எல்லாப் பொருட்களையுமே மாமியார் தான் கொண்டு போவார். இவர்கள் கொண்டு போகும் சாமான்கள்ளச் சமைத்துத்தான் வீடு காண வந்தவர்களுக்கும் மற்ற மாப்பிள்ளை வீட்டு உறவினர் களுக்கும் மாப்பிள்ளை வீட்டில் அன்று இரவுச் சாப்பாடு.

**சுருள்**

சாப்பாடு முடிந்ததும் சுருள் வைப்பு தொடங்கும், பெண்ணின் அத்தைமார், பிள்ளைகள், முறை மாப்பிள்ளைகள், சொக்காரன்மார் வீட்டு மாப்பிள்ளைகள். மாப்பிள் ளைகளின் சகோதரன்மார் ஆகியவர்களில் அப்போது அங்கே வந்திருப்பவர்கள் சுருளுக்கு உரிமைப்பட்டவர்கள். சுருள் பணத்தைப் பெண்ணின் தகப்பனார் தன் சக்திக்குத் தக்க எல்லோருக்கும் ஒரே மாதிரியாக வெற்றிலையில் வைத்து வழங்குவார். இதைத் தாம்பாளத் தில் ஏந்திமேலே ஒரு எலுமிச்சைப் பழமும் வைத்து, எதிர் மாலை போட்ட பெண்ணின் சகோதரன் எல்லோருக்கும் வழங்க வேண்டும். முதல் சுருள் பெண்ணின் அத்தை மகனுக்கு. அடுத்து அத்தான்மாருக்கு (அக்காளின் புருஷன்) பிறகு மாப்பிள்ளை வீட்டு மச்சான் உறவுக்காரர்களுக்கு. கடைசியில் மாப்பிள்ளைக்கு. இந்த பொதுச் சுருள் எல்லோருக்கும் போல மாப்பிள்ளைக்கும் உண்டு. மாப்பிள்ளைக் கென்று பெரிய அளவில் தனிசுருள் கடைசியில் கொடுக்கப்படும். நூற்றி ஒன்றோ, ஆயிரத்தி ஒன்றோ அதன் மடங்குகளோ, தன் வசதிக்குத்தக்க மாமனார் கொடுப்பார். மாப்பிள்ளைச் சுருளை மாமனார் தன் மகனிடம் கொடுக்க, அவர் அதை பெண்ணிடம் கொடுத்து, பெண் மாப்பிள் ளைக்குக் கொடுக்க வேண்டும்.

அதே மாதிரி வேட்டி சட்டைகள் மாப்பிள்ளைக்கும், அவர் அண்ணன் தம்பிகளுக்கும், அண்ணன் தம்பி உறவுச் சொக்காரன் மாருக்கும் கொடுக்கப்படும். எல்லாருக்கும் துணிகள் ஒரே மாதிரியாக இருக்கும். இக்காலத்தில்



படிப்பகம்

www.padippakam.com

வேட்டிக்குப் பதில் முழக்கால் சட்டைத் துணிகள் கொடுக்கிறார்கள். இதோடு திருமணச் சடங்கு முடிகிறது.

**ஏழாம் நாள் சடங்கு**

இதற்கு ஏழு கழித்தல் என்று பெயர் இது பெண் வீட்டில் நடக்கும். மாப்பிள்ளையின் சொக்காரன்மார் (ஆண்கள்) மட்டும் இந்த விருந்துக்கு அழைக்கப்படுவர். மாப்பிள்ளைக்கும் பெண்ணிக்கும் மாப்பிள்ளை வீட்டு மற்ற விருந்தினருக்கும் புதுத் துணிகள் பெண் வீட்டில் கொடுப்பார்கள் விருந்தினர்கள் எல்லோரும் எண்ணெய் தேய்ச்சுக் குளிப்பார்கள். புதுத் துணி உடுப்பார்கள் ஆடோ கோழியோ அடிச்சி எல்லோரும் சாப்பிடுவார்கள்.

**மறுவீடு**

திருமணம் முடிந்த பதினைந்தாம் நாள், பெண்ணின் தாயார், குடும்பத்துடனும் சொக்காரன் மாருடனும் மருமகன் வீட்டுக்குப் போகணும். முன் போல அ சி, காய்கறி மசாலா பண்ட வகைகள், சாப்பாட்டு இலை எல்லாம் கொண்டு போய், எல்லோருக்கும் சமையல் பண்ணிப் போடணும், பெண்ணிற்கும் மாப்பிள்ளைக்கும் அன்று புதுத் துணி எடுத்துக் கொடுக்கணும். அன்று மாப்பிள்ளைக்கு மட்டும் இரண்டாவது சுருள் வைக்கணும்

மறுவீடு காணாத மாமியார் மருமகன் வீட்டில் கை நனைக்க முடியாது

**படிகள்**

மணமக்களுக்கு ஆடிமாசம் மாசப் பிறப்புப்படி, ஆவணி மாசம் வருசப் பிறப்புப் படி, திருக்கார்த்திகைப் படி, தீபாவளிப்படி, பொங்கல் படி, ஆகிய படிகள் ஓராண்டுக்குக் கொடுக்கணும் முதல் பேறும் பெண் வீட்டார் பொறுப்பே. ●

## கவிதை

உங்களுக்கு
மனசு சரியில்லை
என்ன செய்வீர்கள்?

இடிந்து போய் மூலையில்
உட்கார்ந்து விடுவீர்கள்

அமைதியாகக் கொஞ்சநேரம்
கண்மூடி தியானிப்பீர்கள்

யார் எது கேட்டாலும்
மௌனம் சாதிப்பீர்கள்

மல்லாக்கப் படுத்துக் கொண்டு
பெருமூச்சு விடுவீர்கள்.

கதவை மூடிக் கொண்டு
சோகப்பாட்டுக் கேட்பீர்கள்

ஆருயிர் நட்புக்கு
போன் பண்ணுவீர்கள்.

கோயிலுக்குப் போய்
சாமி கும்பிடுவீர்கள்

உங்களுக்கு அடங்கியவர்களிடம்
உரக்க கத்துவீர்கள்
அதாவது
எரிந்து விழுவீர்கள்

ஓசியிலோ கைக்காசிலோ
ஒரு தம்மடிப்பீர்கள்

தனியாவோ கும்பலாகவோ
தண்ணியடிப்பீர்கள்

நாகரீகம் கருதி மேலும்
தொடரமுடியாது -இதை

காலாற நடந்து
பூவோடு பேசி
காற்றாகி மிதந்து
நிலா நனைய மூழ்கி
எழுதிப்பார்க்க முயன்றதுண்டா
ஒரு முறையேனும்?

**சகாரா**



படிப்பகம்

www.padippakam.com


*With Best compliments from*

# N. MAHALINGAM & COMPANY

468, Dr. Nanjappa Road, COIMBATORE - 641 018
Phone : 23057 / 58 / 59 Fax : 0422 - 235880
E. Mail : nmc@satyam.net.in
Website : WWW. nmandco. com

*Dealers For*

- BAJAJ TEMPO EXCEL RANCE OF VEHICLES
- BAJAJ TEMPO, TRAVELLERR TRACTORS
- KINETIC SCOTERS & LUNA MOPEDS
- KINETIC CHALLENQER MOTOR BIKES
- BPL, SONY, PANASONIC, WHIRLPOOL, PHILIPS, VIDECON, SHARP, L.G. DAEWOD, ALLWYN, T.V.. AUDIO AND HOME APPLICIANES
- KURLON COIR PRODUCTS, TITAN WATCHES
- BHARAT PETROLEUM PRODUCTS
- INDANE DOMESTIC GAS AND HOT PLATES
- PRINNCALE SAPORITI ITALIAN FURNITURES

**After Sales, Service Facilities can be availed in our well equipped Service centres**

* Branches at : Pollachi, Udumalpet, Erode, Ooty, Tirunelveli, Nagercoil, Tuticorin, Tirupur and Dharapuram




படிப்பகம்

www.padippakam.com

# மாமிசம்

காஞ்சனா தாமோதரன்

அவன் மாமிச உணவைப் பற்றி அதிகம் நினைத்ததில்லை பேரங்காடிகளில் தெளிவான ப்ளாஸ்டிக்கில் அழகாகச் சுற்றப் பட்டு சிவப்பாக அடுக்கி வைக்கப் பட்டிருக்கும். அல்லது, வட்டமாக இரண்டு ரொட்டித் துண்டுகளின் நடுவே தக்காளி, சீஸ் இத்தியாதி களுடன் வரும். ஆதிமனித முறையில் நவீனத் தொழில் நுட்பத் தோடு 'பார்பிக்யூ' செய்தால், அந்த பிரத்தியேகக் கங்கலின் வாசத்து டன் பொ ந்து கொண்டே, வேக வைத்த உருளைக் கிழங்குக் கும் மக்காச்சோளப் பொன்மணி களுக்கும் நடுவே அவன் தட்டில் விழும். அம்மா சமையல் என்றால் கெட்டியான மசாலக் குழம்பினுள் அங்கொன்றும் இங்கொன்றுமாய் ஒளிந்து கிடக்கும்.

அவனைப் பொறுத்த மட்டிலும் மாமிசத்தைப் பற்றி இதற்கு மேல் நினைத்துப் பார்த்த தில்லை. எல்லாம் ஒன்றுதான். உணவு, உடலுக்கான எரிபொருள். நாக்கில் ஒரு கணம் சுவை காட்டி, பிறகு வயிற்றின் அமிலங்களில் கரைந்து போவது.

அதற்காக, மாமிச உணவின் பின்னுள்ள சில கேள்விகளும் தெரியாமல் இருப்பவன் அல்ல அவன். முள்கரண்டியும் கத்தியுமாக ஒரு பிராணியின் உடற்பகுதியைக் கீறும் போது சில சமயங்களில் நினைத்துப் பார்ப்பான். உணவுச் சங்கிலியில் அந்தப் பிராணி எப்படி அவனுக்குக் கீழாகிப் போனது என்று முழுதாய்ப் புரியாது மிருக எலும்புக் கூழ், 'ஆன்டிபை யாட்டிக்' மருந்துகள், வளர்ச்சி 'ஹார்மோன்' கள் எல்லாம் திணிக்கப்பட்டு, பண்ணைகளில் உணவுக்காக வளர்க்கப்படும் பன்றி, கோழி ன், ஆடு மாடு பற்றியெல்லாம் அவனுக்கும் தெ யும், மாமிசம் சாப்பிடுவதை நிறுத்த வேண்டும் என்று நினைத்த தில்லை.

அந்தத் தேவதையைச் சந்திக்கும் வரை.

அப்போது கடற்கரை வெயிலில் நீட்டிப் படுத்துக் காய்ந்து கொண்டிருந்தான் ' உனக்குத்தான் இயற்கையே அழகான பொன்னிற 'டான்' தோலைக் கொடுத்திருக் கிறதே? நீயும் ஏன் எங்களைப் போல் வெயிலில் காய்கிறாய்?. அவன் வெள்ளைத்தோல் நண்பர்கள் பொறாமையுடன் அவனைக் கேட்கும் வழக்கமான கேள்வி நண்பர்களோடு சேர்த்து இப்படி வெயிலில் காய்வது பழக்கமாகியிருந்தது.

அன்றும் அப்படித்தான். ஆனால் சுற்றிலும் நண்பர்கள். யாரும் இல்லை. எல்லாரும் சம்சா கள் ஆகி-விட்டார்கள். வார இறுதியில் குழந்தைகளைப் பூங்காவுக்கு அழைத்துப் போவது. புல்வெட்டுவது, நாயைக் குளிப் பாட்டுவது இத்யாதி வேலை களைப் பார்க்கப் போயிருந்தார்கள். அவன் குழுவிலேயே அவன் மட்டும்தான் இன்னும் சுதந்திரமாக இருந்தான். வேறு வழியில்லை. லிஸ்ஸி அவனைக் கைவிட்டுப் போய் ஒரு மாதமாகிறது. உறவுகள் வினோதமானவை. அவள் கூட இருக்கும் வரை அவளில்லாமல் இருக்கமுடியாது என்று ஒரு மூர்க்கமான வெறியுடன் அவன் நம்பியது உண்மை. அவளுமே அப்படி நம்பியது போலத்தான் தெ கிறது. ஆனால், அவள் போன பிறகும் வாழ்வு இருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

கடற்கரையில் அதிகக் கூட்டமில்லாத இடமொன்றைக் கண்டுபிடித்தான். பாறைகளுக்கு நடுவே விரித்த துவர்த்தின் மேல் புத்தகத்துடன் சாய்ந்து கொண்டான். வெள்ளைக் கடற்புறாக்கள் மேலே வட்டமிட்டன. தெளிந்த நீலவானத்தை ஜெட் விமானத்தின் வெண்புகைக்கோடு இரண்டாகக் கிழித்திருந்தது. வாசிக்க ஆரம்பித்தான். அமேசான் நதிக்கரை மழைக்காடுகள் அழிவது பற்றியும், காற்று மண்டலத்தில் நச்சு வாயு கலப்பது பற்றியும், பல உயிரினங்கள் அழிவது பற்றியும் புத்தகம் பேசியது. குளிர்ந்த கோலாவை உறிஞ்சிக் கொண்டே வாசித்துக் கொண்டிருந்தவன் எப்போது தூங்கிப் போனானோ. முகத்தின் மேல் ஈரம் படவும் விழித்தான். ஒரு நாய் அவனை மகிழ்ச்சியுடன் நக்கிக் கொடுத்துக் கொண்டிருந்தது. பின்னால் தேவதை.

தூக்கம் முழுதும் கலையாத அந்தத் தருணத்தில், அவள் கடல் அலைகளிலிருந்து எழும் தேவதை போலத் தெரிந் தாள். இளங்கலைப் பருவத்தில் படித்த கிரேக்கப் பழங்கதைகள் மறந்து போனதால், தேவதையின் பெயர் சட்டென்று ஞாபகம் வரவில்லை. அந்த எரிச்சலில் தூக்கம் முற்றுமாய்க் கலைந்தது. நெஞ்சின் மேல் கடற்பாசி, இறந்த நண்டு, மீன், சிப்பி, எல்லாம் அடங்கிய ஈரக்கோடு ஒன்றை நாய் போட்டிருப்பது புரிந்தது. அவன் அதைத் தட்டி விட்டான். டீ-சர்ட்டில் கறையோடு கடலின் வாசமும் சேர்ந்து வீசியது. முகம் தானாகவே சுளித்துக் கொண்டது.

அவள் தன்னையும் நாயையும் மன்னிக்கும் படி கேட்டாள் நாயைச் செல்லமாகக் கடிந்து கொண்டாள் அந்த டீ-சர்ட்டைச் சலவை செய்வதற்கான செலவைத் தானே தந்து விடுவதாகச் சொன்னாள். அல்லது தான் தங்கியிருக்கும் வீடு அங்கிருந்து பத்து நிமிடம் என்றும் அங்கு வந்தால் அதைச் சில நிமிடங் களில் அலசி உலர்த்தி விடலாமே என்றும் சொன்னாள்.

அவன் தனது சாயங்காலத் திட்டம் பற்றி நினைத்துப் பார்த்தான். அம்மா அப்பாவோடு அவன் பிறந்த நாள் விருந்து சாப்பாடு, பிறகு, முகம் தெரியாத ஒரு பெண்ணுடன் ஏதோ படத்துக்குப் போக நண்பர்கள் செய்த ப்ளைன்ட் டேட் ஏற்பாடு. லிஸ்பி போனதிலிருந்து நண்பர்கள் அவனுக்காக மும்முரமாகப் பெண் தேட ஆரம்பித்திருக்கிறார்கள். சம்சார சாகரத்தில் நீந்தும் நண்பர்கள் அவனைப் போன்றவர்களுக்கு மிக ஆபத்தானவர்கள். ஒவ்வொரு நண்பருள்ளும் ஒரு கல்யாணத் தரகர் ஒளிந்து கொண்டு, அவன் மீது பாயத் தயாராக இருக்கிறார்.

தன் சாயங்காலத் திட்டத்தை விட, தேவதையுடன் கொஞ்ச நேரம் கழிப்பது இனிமையாக இருக்கும். அவளோடு பேசிக்கொண்டே நடந்தான். தேவதை பெயர் ஐலீன். நாய் பெயர் வின்ஸ்டன் சர்ச்சில்.

அவள் இங்கு வந்து சில வருடங்கள் ஆயிற்று. கால்நடை மருத்துவம் படிக்க வந்தவள் படிப்பை பாதியிலேயே நிறுத்தி விட்டாள். "வாயில்லாத பிராணிகளுக்கு நாம் செய்யும் கொடுமைகளைப் பார்த்த பிறகு அதன் பெயர் மருத்துவமே இல்லை என்பது புரிந்தது. நம் வசதிக்காக வளர்ப்பு நாய்கள் பிள்ளைகளை பெற முடியாமல் செய்து விடுகிறோமே. இது உயிரின ஃபாசிசம். நிச்சயமாக. அவள் குரலில் எது தர்மமென்று உறுதியாகப் புரிந்து கொண்ட





படிப்பகம்

www.padippakam.com

நம்பிக்கை இருந்தது. அதர்மம் இழைப்போரைக் கூறு போடும் கூர்மையான கோபம் இருந்தது. அது அவனுக்கு அழகாய்த் தெரிந்தது. அவளும்.

அவள் வீடு சின்னதாய், கடலிலிருந்து சில அடி அருகே இருந்தது. அவனிடம் ஒரு டீ-சர்ட்டைக் கொடுத்து விட்டு, கறை பட்டதை 'வாஷரில் போட்டாள். குளிர்ச்சியாக எலுமிச்சஞ்சாறை எடுத்துக் கொண்டு வந்தாள். அவனுக்கு எதிரே உட்கார்ந்து கொண்டாள். அவனுக்கு எல்லாமே கனவுபோல் தெரிந்தது. பிறந்த நாள் அலுப்பூட்டுவதாய் இருக்குமென்று நினைத்ததற்கு மாறாய் எல்லாமே நடந்து கொண்டிருந்தது.

வின்ஸ்டன் அவன் காலடியில் உட்கார்ந்து அவனையே பார்த்துக் கொண்டிருந்தது. "ஜலீன் தப்பாக நினைக்காதே உன் நாய்க்கு என்ன? ஏதோ ச யில்லாத ...

அவனைப் பேசி முடிக்க விடவில்லை அவள். முகத்தில் கசப்பும் கோபமும் சேர்ந்து தெரிந்தன. "அது வின்ஸ்டனின் தவறில்லை. அவர்கள் வின்ஸ்டனைச் சித்திரவதை செய்து குதறியெடுத்து விட்டார்கள்..

" சித்திரவதையா?. அவனுள் தார்மீகக் கோபம் பொங்கிற்று. இந்த அழகிய பெண், இந்த அறியா நாய்ப்பிறவி. .யார் அவர்கள்?.

அவள் ஒரு பெரிய நிறுவனத்தின் பெயரைச் சொன்னாள். அன்றாட வாழ்வில் பழகிப் போய்ச் சாதாரணமாகத் தெரியும் ஒரு பெயர். இப்போது அது ஒரு கொடூரப் பயங்கரமாய் அவர்களிடையே அந்தரத்தில் தொங்கியது.

அந்த நிறுவனம் புதிதாய் உற்பத்தி செய்தவொரு பொருளைப் பரிசோதனை செய்யப் பல நாய்களைப் பயன்படுத்தியிருக்கிறது. அவள் விரித்துச் சொன்னாள். அவன் திகைத்துப் போனான். இந்த அளவு கொடுமையா. எழுந்து சென்று. அவள் தோளைத் தட்டி அவளை ஆறுதல்படுத்த வேண்டுமென்று தோன்றியது அவனுக்கு. "என்னால் நம்ப முடியவில்லை, ஜலீன். யாராவது அப்படிச் செய்வீர்களா என்ன?'

"நம்பு," என்றாள் அவள். அவனைச் சில நிமிடங்கள் உன்னிப்பாகப் பார்த்தாள். 'வாஷர்' நிற்கும் சப்தம் ஈர டீ-சர்ட் காய்வதற்காக டிரையருக்கு மாற்றி விட்டு மீண்டும் அறைக்குள் வந்தாள். மூலையில் கிடந்த ஓர் அட்டைப் பெட்டிக்குள் குடைந்தாள். சில நிமிடங்களில், அவன் மடிமேல் பத்துப் பதினோரு கோப்புகள் கிடந்தன. மேல் கோப்பின் வெளியே அவள் சொன்ன நிறுவனத்தின் பெயர். அதனுள் நாளிதழிலிருந்து வெட்டியெடுத்த செய்திகள், அவர்கள் பரிசோதனைச் சாலைகளின் வரைபடங்கள், அவர்கள் உற்பத்திச் சாலைத் தொழிலாளர்களின் 'ஷிஃப்ட்' முறைகள்... இன்னும் நிறைய விவரங்கள் இருந்தன. அடியில் இருந்த கோப்புகள் எல்லாம் அழகு சாதன நிறுவனங்கள், தோல் பதனிடும் நிறுவனங்கள், மாமிசத் தயாரிப்பு நிறுவனங்கள், மருத்துவ ஆராச்சி நிலையங்கள் முதலியன பற்றியவை.

அவள் ஒரு பரிசோதனையின் பெயரைச் சொல்லி இது என்னவென்று தெரியுமா என்றாள். அவனுக்குத் தெரியவில்லை.

"முயல்குட்டிகளின் கண்ணுக்குள் ஊசியால் ரசாயனங்களை ஏற்றுவது. அவை எவ்வளவு தாங்கும் என்று புரிந்து கொள்ள. இது எந்த மனிதநேயக் காரணத்துக்காகச் செய்யப்படுகிறது. என்று நினைக்கிறாய்?.

அவனுக்குத் தெரியவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

மங்கிய கருக்கலில் கடலலைகளின் ஒலி நெருங்கிக் கேட்டது.

"மஸ்காரா பெண்கள் தங்கள் கண்ணிமைகளை நீளமாக்குவதற்காகப் பயன்படுத்தும் மஸ்காரா அவர்கள் கண்களைப் பாதித்து விடக்கூடாதே! ஆயிரக்கணக்கான முயல்களை இந்த பரிசோதனைக்காகச் சித்திரவதை செய்வது சரியா?. மஸ்காராவின் தூரிகை சிறிதும் தொடாத அவள் கண்ணிமைகள் கோபத்தில் படபடத்தன.

சில விளம்பரங்களில்'இதைப் பயன்படுத்துவதால் உங்களுக்கு தீமை ஏற்படாது என்று ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன. இது விலங்குகளின் மீது பரிசோதனை செய்யப்பட்ட பொருள் அல்ல' என்ற வாசகங்களைப் பார்த்திருக்கிறான். இன்னும் முயல், எலி மாதிரி மிருகங்களை உபயோகிக்கிறார்களா. என்ன? அவற்றின் திணத்திசுவைக் 'க்ளோன்' (மரபணுப் பிரதி)செய்து அதைத் தான் பயன்படுத்துகிறார்கள் என்று கேள்வி ... .

கேள்விப்பட்டதையெல்லாம் நம்புவாயா? அவள் குரலில் ஒரு முட்டாள் குழந்தையிடம் பேசும் பரிவு இருந்தது. ஒரு மணி நேரம் பேசினாள். வலி குறைப்பு மருந்துக்கு அடிமைப்பட்டுப் போகும் பரிசோதனை எலிகள், கால்களற்ற முயல்கள், இன்னும் எத்தனையோ. ஒரு நாளிரவு அவளும் அவளது குழுவைச் சார்ந்த ஆறு பேரும் பரிசோதனைச் சாலைக்குள் அத்துமீறிப் புகுந்து வின்ஸ்டனை மீட்டது பெரும் கதை. மிருகங்களுக்கு இழைக்கப்படும் பல்வேறு கொடூரங்களையும் பற்றித் தொடர்ந்தாள்.

அவள் சொல்வதைக் கேட்டு, தலையசைத்து, இடையிடையே சில 'பாவம்', உண்மையாகவா? போன்ற பொதுவான அனுதாபம் தெரிவிப்பது தவிர ஒன்றும் சொல்ல முடியவில்லை.

அவள் பேச்சின் இறுதியில் கேட்டாள்: 'ஐசக் பாஷிவிஸ் சிங்கர்' என்ன சென்னார் என்று தெரியுமா?

ஐசக் பாஷிவிஸ் சிங்கர் என்ன சொன்னாரென்று அவனுக்குத் துளியும் தெரிந்திருக்கவில்லை.

அவள் தன் முகத்தை அவனுக்கு மிக அருகே கொணர்ந்தாள். ஐசக் சிங்கரை விட அதிகத் தீவிரத்துடன் அவர் சொன்னதைச் சொன்னாள்: "மிருகங்களுக்கு எந்நாளும் ஆஷ்விட்ஸ்தான்"

'அவனுள்ளிருந்த மாமிச பட்சணி கொஞ்சம் அதிர்ந்தது. ஆஷ்விட்ஸில், யூதர்களை முகாம்களில் அடைத்து விஷவாயுவினால் ஒட்டுமொத்தமாக நாட்ஸிகள் கொன்றதற்கும், உணவுக்காக மிருகங்களைக் கொல்வதற்கும் அவ்வளவு ஒற்றுமைகளா. இவள் சொல்வதை ஒப்புக் கொள்ள முடியுமா... மிக அருகே தெரிந்த அவள் முகம் கேள்விகள் அனைத்தையும் மழுங்கடித்து. இவளைச் சாப்பிட அழைத்துச் செல்லலாமா என்ற கேள்வியே முக்கியமாகத் தெரிந்தது. என்ன சாப்பிடுவாள்.

"மன்னிக்க வேண்டும். நிறைய பேசி விட்டேன், என்னுடைய அலைவரிசையிலேயே பேசக் கூடிய இன்னொருவரைப் பார்த்ததும் வந்த உற்சாகம்.. அவள் முகத்தில் மெல்லிய புன்னகை.

'என் அலைவரிசையில் ....... வெறும் சொற்கள் ஒருவனுள் ஒளியூட்ட முடியும் என்று ஐந்து நிமிடங்களுக்கு முன் அவன் ஒப்புக் கொண்டிருக்க மாட்டான். இப்போது உலகம் மாறியிருந்தது.

"வெளியே சாப்பிடப் போகலாமா?. அவன் கேள்வியை



படிப்பகம்

www.padippakam.com

மீண்டும் கேட்டான். உணவகங் களின் பெயர்ப்பட்டியல் அவன் தலைக்குள் ஓடியிற்று. 'மரக்கறி உணவகமாக இருக்க வேண்டுமோ. மாமிசம் பொரிக்கும் மணம் காற்றில் கொஞ்சம் மிதந்தாலும் அவளுக்குப் பிடிக்காமல் போகலாம். சோயா சீஸ், பருப்பு சூப், பச்சைக் காய்கறிகள். "மிருகங்களுக்கு எந்நாளும் ஆஷ்விட்ஸ்தான்" நினைவுக்கு வந்தது. 'மாமிசம் இல்லாத இடத்துக்குத்தான்'., என்றாள்.

அவள் ஒன்றும் சொல்லாமல் அவனைப் பார்த்தாள்.

"நானும் மாமிசம் சாப்பிடுவதில்லை. அவனுக்குப் பொய் சரளமாக வந்து. 'இப்போது என்பதைச் சேர்ந்துக் கொண்டான். பொய் உண்மையாகியது

.நானும் ஒரு 'வீகன்' (Vegan)" என்றாள் அவள். வீகன்கள் மாமிசம், ன் முட்டை பால், சீஸ் எதுவுமே சாப்பிடுவதில்லை. மிருகங்களின் தோல், மயிர் முதலியவற்றிலிருந்து செய்யப்படும் உடை, பொருள் எதையும் பயன்படுத்துவதில்லை.

.இங்கேயே சாப்பிடலாமே. என்றவள் சுறுசுறுப்பாகச் சில பதார்த்தங்களைச் செய்தாள். சோயா பாலாடைக்கட்டியும் பூண்டும் எண்ணையில் பொரியும் வாசம். சாலடுக்கான பச்சைக் காய்கறிகளை அவனை நறுக்கச் சொன்னாள். பிறகு எலுமிச்சைச் சாறு பிழியச் சொன்னாள்.

பின்னணியில் கடலலைகள். எதிரே அவள். அவனுக்கு அன்றிரவு என்ன சாப்பிட்டோம் என்பது நினைவில் நிற்கவில்லை.

அடுத்த நாள் அலுவலகத்தைக் கூப்பிட்டு ப்ளூ காய்ச்சல் வந்திருப்பதாய் சொன்னான். அவள் வீட்டுக் கதவைத் தட்டும் போது தனக்குப் பைத்தியம் பிடித்திருப்பதாய் நினைத்துக் கொண்டான். கதவைத் திறந்தவள் முகத்தில் ஆச்சரியமோ, கூப்பிடமால் ஏன் வந்தாய் என்கிற எச்சலோ இல்லை. அவன் அவள் வீட்டிற்கு வந்தது மிகவும் இயற்கையான. மிகவும் இயல்பான ஒரு செயல் போல அவள் நடந்து கொண்டாள்.

என்ன நினைத்து வந்தோம் என்பது அவனுக்கே தெளிவாகத் தெ யவில்லை, திராட்சைப் பழங்களை ஒவ்வொன்றாய் அவனுக்கு ஊட்டிக் கொண்டே அவள் சொல்லப் போகும் முயல், எலி இன்ன பிற மிருகம் பற்றிய கதைகளைக் கேட்பதற்காக.

திராட்சைப்பழக்கனவு கனவாகவே நின்று விட்டது.

அரை மணி நேரம் கழித்து அவன் அவ்வூரின் மேல் தட்டு வர்க்கக் கடைவீதியில்; மிருக மயிரால் செய்யப்பட்ட 'ஃபர்கோட்' விற்பனை நிலையத்தின் முன்னால் நின்று கொண்டிருந்தான். .ஆர்பாட்டம் செய்யும் ஒரு சிறு கூட்டத்தின் பகுதியாய். அவன் தாங்கிப் பிடித்திருந்த அட்டை 'ஒரு பிணத்தை அணிவது எப்படியிருக்கிறது?' என்று வாசித்தது.. சொட்டும் இரத்தம் போன்ற எழுத்துகளில் அவனைச் சுற்றி நின்ற இருபது பெண்களும், ஐந்தாறு ஆண்களும் வெவ்வேறு கோஷங்கள் எழுப்பினார்கள்.

அது ஒரு வழக்கமான கலிஃபோர்னிய நாள். நீல வானப் பின்னணியில் ஈச்சமரங்கள் தலையாட்டின. யாருமே அவர்களைக் கண்டு கொண்டதாகத் தெ யவில்லை. பளபளக்கும் கண்ணாடிக்கு அந்தப்புறம் முறைக்கும் 'ஃபர்' நிலையத்து விற்பனையாளரைத் தவிர. ஒன்றும் புரியாத உலக மக்களுக்கு .. இருபத்து நான்கு மணி நேரத்துக்கு


படிப்பகம்

www.padippakam.com

முன் அவனுமே ஓர் அங்கத்தினராக இருந்த அந்த ஜனத்திரளுக்கு .. அவர்கள் போராட்டம் கண்ணுக்குத் தெரியாததில் ஆச்சரியமில்லை.

அவன் முற்றிலும் வினோதமாக உணர்ந்தான். ஆனாலும், தொடர்ந்து போராட்ட நடை போட்டான். அவளுக்காக, மேல் தட்டு வர்க்கத்தின் 'ஃபேர்' மோகத்துக்காக உயிரிழக்கும் அனைத்து மிருகங்களுக்காக. அவனுக்காவும் கூட அவனது பிரக்ஞை விரிவதை அவனால் உணர முடிந்தது. ஒரு புதிய தார்மீக விசை அவனுள் இயங்குவது புரிந்தது. ஆனால், கால் வலித்தது. கூட வேலை பார்ப்பவர்கள் யாரும் அவனைப் பார்த்து விடக் கூடாது என்கிற பயம் வேறு.

அவனுள் தன்னை நினைத்துக் கொஞ்சம் அதிர்ச்சி. வாழ்நாளில் பல ஆர்பாட்டங்களைப் பார்த்திருக்கிறான். மனித உரிமை, இனவுரிமை, பெண்ணுரிமை, மிருகவுரிமை, போர் எதிர்ப்பு கருச்சிதைவு எதிர்ப்பு உலகமய எதிர்ப்பு.. இன்னும் பல பேர்ராட்டங்கள். பார்ப்பதோடு சரி, அவை எப்போதுமே அவனைத் தொட்டதில்லை. அவனுக்கும் அவற்றிற்கும் நடுவே தொலைக் காட்சித் திரையின் பாதுகாப்பு எப்போதும்.

நடைபாதைக்கு அவன் பாதங்கள் சூடேற்றியதில்லை. காற்றுடன் அவன் கோஷங்கள் கலந்ததில்லை. கோஷ அட்டைக் கம்புகளின் சொரசொரப்பை அவன் உள்ளங்கைகள் உணர்ந்ததில்லை.

இதுநாள்வரை, எல்லோரையும் போல் லெதர், சுவேட் கணுக்கால், பூட்ஸ், என்றிருந்த மத்திய வர்க்கத்தவன் தான் அவன். இப்போது அவன் ஒவ்வொரு மிருகமும் சுயமரியாதையுடன் இறக்கும் உரிமைக்காப் போராடுபவன். இப்போது அவன் அவளைப் பற்றிய கனவுகளைத் தாங்கியவன் இப்போது அவன் அதிமனிதன்.

ஆர்ப்பாட்டம் சோர்ந்து அடங்கத் துவங்கிய சமயத்தில், ஒரு நீண்ட வெள்ளை லிமோஸின் கடைக்கு முன் வந்து நின்றது. ஒரு வயதான சீமாட்டி, இந்த வெயிலிலும், கணுக்கால் வரை நீளும் வெள்ளி நரி ஃபர் கோட்டின் அந்தஸ்து அவளுக்குத் தேவை போல. இதுதான் ஆர்பாட்டக் கூட்டம் எதிர்பார்த்த தருணம். உரத்த கோஷங்களுடன் அப் பெண்ணின் முன் பாய்ந்தது கூட்டம்.

அவனுள்ளும் ஏதோ புகுந்து கொண்டது. . கொலைகாரி. அவன் கத்தினான் .சித்திரவதைக்காரி!. .நாட்ஸி!. .ஃபாசிஸ்ட்!. கூட்டம் ஆர்ப்பரித்தது. கோஷ அட்டைகள் துள்ளித் துள்ளிக் குதித்தன. அவன் அப் அப்பெண்மணியை நெருங்கினான். அவள் பர்ஃயூமின் சுகந்தமும், அந்த ஃபர் கோட்டின் பாச்சான் உருண்டை வாசமும், முதுமையின் மணமும் சேர்ந்து வீசின. ஒரு நிமிடம் தயங்கினான். பிறகு அவள் கடைக்குள் போக விடாமல் வழி மறித்தான். லிமோஸினிலிருந்து இறங்கி வந்த வாட்டசாட்டமான காரோட்டியை அவன் கவனிக்க வில்லை.

கண்விழிக்கையில் அடுத்த நாள் காலை சன்னலுக்கு வெளியே கேட்கும் அலைகள் தலைக்குள்ளும் இடிப்பது போலிருந்தது. அலுவலகத்தைக் கூப்பிட்டான். தனக்குப் புற்றுநோய் வந்திருப்பதாகவும், இனி எப்போது வேலைக்கு வர முடியுமென்பது தெரியாதென்றும் முனகினான். மறுமுனையில் கேள்விகளுக்குப்



படிப்பகம்

www.padippakam.com

பதில் சொல்லாமல் தொலை பேசியைக் கீழே வைத்தான்.

அந்தக் காரோட்டி பழைய குத்துச் சண்டை வீரன் என்று அவள் கண்டுபிடித்திருந்தாள்.

தலையிலும் கழுத்திலு மாகப் பல குத்துக்கள். சரியாவதற்கு ஒரு வாரமாயிற்று. உயிரோடு இருப்பதே பெரிய அதிர்ஷ்டம், சந்தோஷப்படு என்றாள் அவள். வீங்கியிருந்த கன்னத்தில் மெல்ல முத்தமிட்டாள்.

தொடரும் நாட்கள் சந்தோஷமாகக் கழிந்தன. பிற வீகன்கள், விலங்கியல் பாடத் தவளை அறுப்பு எதிர்ப்பாளர்கள், பூனையின் நண்பர்கள், இன்னும் பல குழுக்கள் அடங்கிய கூட்டணிகளுடன் சேர்ந்து, அவனும் அவளும் பல நல்ல காரியங்கள் செய்தார்கள். தோல் பதனிடுபவர்கள், ஃபர் விற்பனையாளர்கள், கோழி, பன்றி, மாட்டுப் பண்ணையாளர்கள், மாமிசத் தயாரிப்பாளர்கள் எல்லோரையும் எதிர்த்துக் கோபக்காரக் கோஷங்கள் எழுப்பினார்கள். பேரங்காடிக் கண்ணாடிச் சுவர்களில், மேம்பாலச் சுவர்களில், சுரங்கப் பாதைச் சுவர்களில் எல்லாம் கோப வாசகங்களை வண்ண வண்ண ஸ்பரே பெயிண்ட் டினால் தீட்டினார்கள். ஒரு குக்கிராமத்தில் நடக்கவிருந்த சேவல் சண்டையைத் தடுத்து நிறுத்திச் சேவல்களை விடுவித்தார்கள். துரத்தி வந்த கிராமத்தாரை விடத் தங்களால் வேகமாக ஓட முடியுமென்பதை நிருபித்தார்கள்.

அவன் உலகம் மாறிப் போயிற்று. இதுவரை தொடர்பற்ற தீவாய் அவன் உணர்ந்தது மறைந்தது. தொடர்புகளின் மையத்தில் இருப்பது போன்ற உணர்வு. வாழ்வில் முதல் முறையாக, ஓர். இலட்சியப்பிடி கிடைத்த நிறைவு. எல்லாவற்றுக்கும் மேலாக, அவள், உடற்கவர்ச்சியின் இயல்பான ஈர்ப்பு இன்னும் இருந்தது. மிருகங்களுக்கான அவளது உழைப்பு, உலகத்தவறுகளைச் சரி செய்யும் துடிப்பு, உயர்ந்த அறநெறி எல்லாம் சேர்ந்து ஈர்ப்பை அதிகரித்தன. இது காதலா? லிஸ்ஸி அவனைக் கைவிட்ட பிறகு, அந்த வார்த்தை மேல் அவனுக்கிருந்த சந்தேகம் கொஞ்சம் தளர்ந்திருந்தது.

இது காதல்தான் என்று திட்டவட்டமாக அவனுக்குத் தெரிந்தது ஜெஃப்பைச் சந்தித்த போதுதான். ஜெஃப் இதுதான் நான் சொன்ன புது நண்பன் ஜெப்பின் கைகுலுக்கல் அழுத்தமாக இருந்தது. மிருகங்களை மீட்பதற்காக ஜெஃபும் அவளும் சேர்ந்து பல முறை போராடியவர்கள். அவள் ஜெப்பை அணைத்துக் கொண்டது சம்பிரதாய வரவேற்பு அணைப்பு போல் தெரியவில்லை. நட்புக்கு மேல் ஏதும் இருக்குமோ. ஜனநாயகம் இல்லாத தூர தேசத்து ஏரியின் இருண்ட ஆழத்துள் ஜெஃபைப் புதைக்க வேண்டும் போலிருந்தது. இவ்வளவு உடைமையுணர்வும் பொறாமையும் இருப்பதால், அவள் மீதுள்ள காதல் உண்மையாது தான்.

'இன்றிரவே முடித்து விடலாம்,. ஜெஃப்,'

எதை முடிப்பது. நினைவுகள் கலைந்து, அவன் நிமிர்ந்து பார்ததான். .அந்தப் பன்றிப் பண்ணை தெரியுமா? நாளைக் காலையில் அவ்வளவும் கசாப்புச் சாலைக்குப் போக வேண்டியவை. இன்றிரவே நாம் பன்றிகளை விரட்டி விடலாம். பண்ணைகளில் வளரும் வெள்ளைப் பன்றிகளை நினைத்துப் பார்த்தான். அவற்றின் வெவ்வேறு உடற்பகுதிகளின் வேறுபட்ட சுவை



படிப்பகம்

www.padippakam.com

ஞாபகத்துக்கு வந்தது. பசித்தது. மாமிசப்பசி, அடக்கினான். அவனது புதிய தார்மீகமும் மேம்பாடும் இந்த மாமிசப் பசியினுள் கரைவது போலிருந்தது.

அவள் பன்றித் திட்டத்தை விளக்க ஆரம்பித்தாள். ஜெஃப்பின் கார் காவல்துறைக்குத் தெ ந்தது. அது வேண்டாம். இவனது காரை எடுத்துக் கொண்டு போகலாம். பண்ணையைச் சுற்றியுள்ள கம்பி வேலியைக் கத்தரித்து உள்ளே நுழையலாம். மூன்று கட்டடங்களில் உள்ள பன்றிகளையும் வெளியே துரத்திய பிறகு, காருக்கு திரும்பி விட வேண்டும். நடுவே யாராவது வந்தாலும் காருக்குத் திரும்பி விட வேண்டும் நிலைமை மோசமானால் அவள் ஜெஃப்பைப் பார்த்தாள். ஜெஃப் தலையசைத்தாள்.

அவனுக்குக் கவலையாக இருந்தது. பண்ணைக் காவலர்கள் பெரிய துப்பாக்கிகள் வைத்திருக்கக் கூடும். அவனுக்குப் பன்றி மாமிசத்தின் ருசி தெரியும். ஆனால் பன்றிகளின் குணாதிசயங்கள் பற்றி ஒன்றுமே தெரியாது: கதவைத் திறந்து போ, என்றால் அவை போகுமா. தூக்கம் கெட்டுப் போவதால் எரிச்சல் பட்டு அவனைத் தாக்கினால் ... பன்றிகள் மனிதரைக் தாக்குமா என்ன... அதுவும், வேளாவேளைக்குக் குளித்து, சாப்பிட்டு குளிர்பதனக் கட்டடத்தில் உறங்கும் சொகுசுப் பன்றிகள் மனிதரைத் தாக்குமா. ஜெஃப் முன்னால் இந்தக் கேள்விகளை அவளிடம் கேட்க அவனுக்கு விருப்பமில்லை. தான் எதற்கும் தயார் என்றான்.

சில மணி நேரம் கழித்து, அடர்ந்த இருளில், பண்ணை வேலியின் கம்பியை அறுத்துக் கொண்டிருக்கையில், உண்மையி லேயே தான் இதற்குத் தயாரா என்று கேட்டுக் கொண்டான். இது பைத்தியக்காரத்தனம். சட்டத்துக்கு எதிரானது என்பதிருக்கட்டும். இது சரியா. புதிதாய் அவனுள் முளைத்திருந்த தார்மீக உணர்வு பதில் சொல்லவில்லை. கோபக்காரக் கோஷங்களைச் சுவர்களில் எழுதிப்புரட்சி செய்வதற்கும், இப்போது அவன் வேலியை முறித்துக் கொண்டிருப் பதற்கும் ஏதோ வித்தியாசம் இருக்கிறது. இந்தப் பன்றி வேளாண்மைக்காரன் நாள் முழுவதும் உழைத்துக் களைத்துத் தூங்கிக் கொண்டிருப்பான், மனைவி மக்களுடன் ....

ஆனால், பன்றிகளுக்கு நாளை நேரவிருக்கும் விதியைப் பற்றியும் நினைக்க வேண்டிருந்தது. காலையில் அவை 18- சக்கர நீள லா யில் ஏறிச் சில மைல்கள் பிரயாணம் செய்யும். நம்பிக்கை யுடன் அணி அணியாக மாமிசத் தயா ப்புசாலைக்குள் நடந்து போகும் ஓர் இயந்திரம் மயக்க ஊசி போடும், அரையிருளில், வெளுத்த மனிதன் உடல்கள் போல் கொக்கிகளில் நீளமாகத் தொங்கும் மயக்கநிலைப் பன்றிகள் வரிசையாக நகருகையில், அவற்றின் கழுத்தின் இன்னோர் இயந்திரத் தின் வாய் ஆழமாய்ப் பதியும். மூச்சுக் குழாயின் ஒரு வட்டப் பகுதியை நுட்பமாக அகற்றவும் பன்றிகள் சாகும். பிறகு, தீயில் வாட்டுவது. தோலு ப்பது போன்ற கசாப்பு வித்தைகள்.

சொகுசான வாழ்வு. இரத்தமும் வலியும் இல்லாத சாவு. பன்றியின் வாழ்க்கை அவனுடை யதை விட மேலானது தானே இல்லை, இல்லை, பன்றிகள் அடைபட்டுக் கிடக்கின்றன. இயல்பாக இறக்கும் உ மை அவற்றிக்கு கிடையாது. அவனும் அடைப்பட்டுதானே கிடக்கிறான். தன் சாவை நிர்ணயிக்கும் உரிமை

www.padippakam.com

அவனுக்கும் கிடையாதே. நினைப்பதை நிறுத்தினாதான் குழம்பிப் போயிருப்பதாகத் தெரிந்தது.

வேலியின் அறுந்த கம்பிவலையை விலக்கி உள்ளே நுழைந்தான். கட்டடம் இருட்டில் மூழ்கியிருந்தது அவன் வரவு பன்றிகளிடையே எந்த விதமான பாதிப்பையும் உண்டாக்கவில்லை. வெள்ளைக் குன்றுகளாய்த் தம் இடங்களில் படுத்துக் கிடந்தன. கதவுகளை 'விரியத் திறந்து போட்டு, .எழுந்து போங்கள்!. என்ற அவனது உற்சாக ஆணை அவற்றிற்குப் ` புரியவில்லை. கையிலிருந்த கழியால் சுவர்களின் மேல், தூண்களின் மேல் அடித்துச் சப்தம் போட்டான், -பன்றிகள் கலைந்து ஓட ஆரம்பித்தன, வெளியே ஏதோ பெரும் சப்தம், துப்பாக்கி வெடிப்பது போல். துப்பாக்கியேதான். காவல்காரர்கள். பன்றிகள் இன்னும் கொஞ்சம் கலங்கின.

அவனும் தான்.' அவன் தரையோடு தரையாகப் படுத்துக் கொண்டான். பன்றிகள் அவன் மேல் ஏறி ஓடிச் சிதறின.

எப்படியோ கட்டத்துக்கு வெளியே வந்தான். ஓடிக் கொண்டிருந்த அவளுடனும் ஜெஃப்புடனும் இணைந்து கொண்டான். காரில் ஏறிப் பறக்கும் போது பின்னால் ஓடி வரும் காவல்காரர்கள் தெரிந்தார் கள். காரின் எண்ணைத் தாள் ஒட்டி மறைத்தது எவ்வளவு நல்லது என்று நினைத்துக் கொண்டான்.

'இன்று நீ செய்தது பெரிய காரியம்' அவள் அவனிடம் சொன்னாள், 'இன்னும் செய்ய வேண்டியது எவ்வளவோ இருக்கிறது. அடுத்து யெல்லோ ஸ்டோன் காடுகளுக்குப் போகத் திட்டம்.'

"ஜலீன், எங்கு என்ன செய்யப் போகிறோம்.?

சிறிது நேர மௌனத்திற்குப் பின் அவள் சொன்னாள்: .நானும் ஜெஃப்பும் மட்டும் தான் போகிறோம்.. கொஞ்ச நேரம் கழித்துத் தொடர்ந்தாள்: அங்கு இரண்டு க்ரிஸ்ஸி கரடிகள் மக்களைப் பாடுபடுத்துகின்றன. ஒரு சுற்றுலாக்காரரின் குழந்தை யைத் தூக்கி எறிந்திருக்கின்றன. இன்னொரு நாயை தூக்கிக் கொண்டே போய்விட்டன. நாங்க காப்பாற்ற உதவி செய்யப் போகிறோம்.. கரடிகளை வனக்காவல் துறையிலிருந்து காப்பாற்ற உதவி' செய்யப் போகிறோம்.'

நாங்கள் அவளும் ஜெஃப்பும் அவனுக்கு அங்கே இடமில்லை.

அவன் குரலில் கசப்பும் காழ்ப்பும் இருந்தது: .நீயும் ஜெஃப்பும்...?.

"நீ நினைப்பது மாதிரி இல்லை. இது மிருகங்களைப் பற்றியது.

"நம்மை மாதிரியா?"

அவள் மெதுவாகத் தலையசைத்தாள் .இல்லை நம்மை மாதிரி இல்லை. நம் இந்தப் பூமியைப் பீடித்துப் பரவி அழிக்கும் ப்ளேக் நோய், மாதிரி, தெரியுமா

அவனுக்குக் கோபம் வந்தது. கொதித்துக் கொந்தளிக் கும் கோப வகை. இரவின் பெரும் பகுதியைக் கம்பிவேலி வெட்டுவதி லும் பன்றி விரட்டுவதிலும் கழித்திருக்கிறான். அவன் திடீரென்று உலகளாவிய ப்ளேகின் ஒரு பகுதியாகி விட்டதாக இவள் சொல்கிறாள். .இல்லை. ஜலீன், நான் ப்ளேக் என்று இது வரை எனக்குத் தெரியாது.

அவன் நினைப்பது முக்கிய மில்லை. .அவள் நினைத்த



படிப்பகம்

www.padippakam.com

காரியத்தில் அவன் பங்கு முடிந்து விட்டது. இனி அவள் நினைத்திருக்கும் காரியத்தில் அவனுக்கு இடமில்லை. எனவே விவாதம் செய்வதால் பயனில்லை - அவளின் ஒரு கணப் பார்வை சொல்லியது.

அவளையும் ஜெஃப்பையும் அவள் வீட்டில் இறக்கிய, பின் வீடு நோக்கிப் புறப்பட்டான், அவன் உட்புறங்கள் அனைத்தும் வெறுமையாகி, வெளிப்புறம் தீயில் வாட்டப்பட்டு, தோலுத்து யாருடைய தட்டிலோ விழுவதற்குத் தயாரானது போல உணர்ந்தான்.

லாஸ் ஆஞ்சலிஸ் நெடுஞ்சாலையில் காரைத் திருப்பியதும் பெரும் அதிர்ச்சி. போக்குவரத்து நின்றிருந்தது. சிவப்பும் நீலமுமாக விளக்குகள் சுழல, காவல் துறைக் கார்கள். சாலையை மறித்து அவனையும் சகாக்களையும் தேடுகிறார்களா. நெடுஞ்சாலையின் மறுபக்கத்துக்குக் காரை வளைத்து ஓட்டித் தப்பி விடலாமா என்று நினைக்கை யில், சாலையில் புரண்டு கிடந்த 18- சக்கர நீண்ட ட்ரக்கும், அதற்குப் பின்னால் ஒன்றை யொன்று மோதி நசுங்கி நிற்கும் பல கார்களும் தெரிந்தன. சாலை விபத்துதான் என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டான்.

எழுபது மைல் வேக்த்திலிருந்து ஐந்து மைலுக்குக் குறைத்து, நத்தையாய் ஊர்ந்து விபத்து நடந்த இடத்தை நெருங்கவும் திக் கென்றது. சுற்றிலும் வெள்ளைச் சிவப்புக் குன்றுகள். நசுங்கிய சதையும் தசையும் கொழுப்பும் இரத்தமுமாய்க் கார்ச் சக்கரத்தின் கீழ்ச் சாலை வழுக்கியது. பூதாகார ட்ரக்கின் 18 சக்கரங்களும் அரைத்த பன்றிகள். எங்கு பார்த்தாலும் நசுக்கப்பட்ட பன்றிகள்.

காரின் முகப்புக் கண்ணாடியில் தெளித்த சிவப்பைக் கார் வைப்பரினால் கழுவி எடுத்தான். அவனுள்ளிருந்த வெறுமை இன்னும் கொஞ்சம் ஆழமாகி அவனையே உறிஞ்சுவது போலிருந்தது. பேசாமல் காவல் துறையிடம் அடைக்கலமாகி, சிறையிலோ மனநலக் காப்பகத்திலோ கண் விழித்தால் என்ன.

அவளுக்கும் அவனுக்குமிடையே இருந்தது முடிவது இங்குதான் .. திரைந்து போன எதிர்பார்ப்புகள். சாலையில் இரத்தக்களறி

நேரம் கடந்தது. பிரக்ஞை இல்லாமலே காரோட்டிக் கொண்டு போனான். மெல்ல ஒரு கெட்ட கனவிலிருந்து விழிப்பது போலிருந்தது. உள்ளிருந்த வெறுமை விரிந்து, பெரும் இருள் குகையாகி அகலவாய் பிளந்தது. சாலையோர வழிகாட்டிப் பலவகை உணவு தங்குமிடம் இங்கே என்றது. மற்ற எல்லாம் மறந்து போயிற்று. வெறுமையை நிரப்புவதற்கான வழி தெளிவாய்த் தெரிந்தது. அவன் உரக்கச் சொன்னான்: மாமிசம். எல்லாம் வெறும் மாமிசம்..

---

## எடைக்கு எடை

" கவித்துவம் - 2 கிலோ

ரசனை - 100 கிராம்

லயிப்பு - 50 கிராம்

வாசிப்பு - 5 மில்லி கிராம்

தெனாவெட்டு - பூமி அளவு

கொண்டதாயிருக்கிறது - இன்றைய சூழல்.

விரிந்ததாயிருக்கிறது

பிரபஞ்சத்தின் மேல் கூந்தலில்

ராக்கோடியாய் கவித்தனத்துடன்

சுழலும் எழில் மிகு உலகம் ஒன்று.

பா. சத்தியமோகன்.



படிப்பகம்

www.padippakam.com



# புனர்

வே. சபாநாயகம்

1998 - மே மாதம் சென்னையிலிருந்து இரா. இரமேஷ் என்பவரை ஆசிரியராகக் கொண்டு 'புனர்' என்றொரு சிற்றிதழ் வெளிவந்தது. நல்ல வெள்ளைத்தாளில், டெம்மி அளவில்; கண்களுக்கு இதமான அச்சுடன் 16 பக்கங்களுடன் 8 ரூ. விலை வைத்து காலாண்டு இதழாகப் 'புனர்' வந்தது.

வழக்கமாகப் புதிய சிறு பத்திரிகைகளில் தென்படும் பத்திரிகையின் பிரகடன வாசகமோ, உள்ளேயும் பத்திரிகையின் நோக்கம் பற்றிய குறிப்போ ஏதும் இன்றி ஆரவாரமின்றி வெளியாயிற்று

முதல் இதழின் அட்டையில் Asia Photograph லிருந்து எடுக்கப் பட்ட Achal Kumar என்பவரது அழகிய இயற்கைக் காட்சியின் படம் அச்சிடப்பட்டிருந்தது. முடிச்சு முடிச்சான ஒரு பிரம்மாண்டமான மரத்தின் அடிப்பகுதி அதுவே ஒரு நவீன ஓவியமாய் முழுப்பக்கத்தையும் அடைத்திருந்தது.

முழுதும் கவிதைகளாகவே இருந்த இந்த இதழில் ஹவி, சித்ரா, விஸ்வாமித்திரன், இரா. இரமேஷ், செல்வம் ஆகியோர் கவிதைகள் எழுதி இருந்தார்கள். விஸ்வாமித்திரனின் 'நகுலனின் மூன்று கவிதைகள்' என்ற தலைப்பிலான கவிதைகளுள் 'நகுலனின் தேரை' என்ற கவிதை நகுலனின் பாணியிலேயே இருந்தது.

இருந்தார் நகுலன்
இருக்க வேண்டுமென்று
வேண்டுமென்று நகுலன்
இருந்தார் இருக்க
நகுலன் இருக்க
இருந்தார்
வேண்டுமென்று
நகுலன் இருந்தார்
இருக்க வேண்டு
மென்று.... (நவீனனுக்கு)

இந்தக் கவிதை(!) நிச்சயம் எழுதியவருக்கும் நகுலனுக்குமாவது புரிந்திருக்கலாம்!

விஸ்வாமித்திரன் இன்னொரு வித்தியாசமான கவிதையையும் இந்த இதழின் கடைசிப் பக்கங்களில் எழுதி இருந்தார். 5 பக்கங்களுக்கு நீண்டிருந்த இந்த 'தாந்திரப் பலகை - காமக்கூத்து' வேட்டுவனார் எழுதியது என்ற கவிதை நிறைய உட்பிரிவுகளுடன் இருந்தது. சிவஸ்துதி அனுபூதி - 1. ஞானமார்க்கம், அனுபூபதி -2. குலநாசம், அனுபந்தம் குற்றப் பத்திரிகை அனு பந்தம் -3 சம்போக பூஜை அனுபூதி - 6 இசை விருத்தம் என்று எண்ணிக்கையில் குழப்பங்களுடன் இருந்த கவிதை முழுவதுமே 'காமக்கூத்தாய்' தலைப்பை நியாயப் (!) படுத்தின.

ஆகஸ்ட் 98 ல் வந்த இரண்டாம் இதழின் அட்டையில் 1945 ஆகஸ்ட் 10 ஆம் தேதி அணுகுண்டு வெடித்ததில் பலியாகிக் கரிக் கட்டையாகியிருந்த ஒரு சிறுவனின் படைப்படத்தை, 'Front line' ல் இருந்து எடுத்துப் போட்டிருந்தார்கள்.

'விக்கிரமாதித்யனின் நீண்ட கவிதை ஒன்றும், விஸ்வாமித்திரன், இரா. இரமேஷ், மனேஷ் குமார், ரிஷி, செந்திலன், பொதிகைச் சித்தர், சித்ரா ஆகியோரது கவிதைகளும் இந்த இதழில் வந்திருந்தன. விஸ்வாமித்திரனின் இரண்டு கவிதைகளுள் ஒன்று, 'நாடக



படிப்பகம்

www.padippakam.com

கவிதை: வரிசை2' என்ற குறிப்புடன் 'நாளடைவில் மூழ்கப் போகும் இராமேஸ்வரம் பற்றி' என்ற தலைப்புடன் ஏதோ ஒரு சோதனை முயற்சிபோல வந்திருந்தது. வார்த்தைகளை நிறைய இடம் விட்டு, வரிக்கு 2, 3 வார்த்தைகளாய் கோர்த்து புதுமை (1) செய்திருந்தது கவிதையை ரசிக்க முடியாதபடி கவனச்சிதைவை உண்டாக்குவதாக இருந்தது. கடைசி அட்டைப்பக்கத்தில் சில சிறுபத்திரிகைகளின் பாணியில் - முழுப்பக்கத்தின் நடுவில் வரிக்கு ஒன்றிரண்டு வார்த்தைகளுடன் 5 வரிகளில் ஒரு சின்னக் கவிதை நகுலன் எழுதியது,

பூ
என்ன?
உச்சரிப்பின்
வேறுபாட்டில்
பல தலைப்புகளில்
இது செயல்படுவது' தரப்பட்டிருந்தது.

'புணரின்' கவிதைகள் பற்றிய தன் வாசகர் கடிதத்தில் 42 வது இதழில் கவிஞர் 'விக்கிரமாதித்தன்' கவிதைக்கான எந்த முயற்சியும் முதலில் வரவேற்க வேண்டியது. பிறகுதான் விமர்சனம் எல்லாம் என்று குறிப்பிட்டிருந்தார்.

நவம்பர் 98 ல் வந்த மூன்றாவது இதழ் அதிகப் பக்கங்களுடன் கனமாக வந்தது. அட்டையில் KEN Currie என்பவரின் 'BATTLE FIELD' என்று தலைப்பிடப்பட்ட ஓவியம் 'The British Council - Chennai' யிலிருந்து எடுத்துத் தரப்பட்டிருந்தது. போர்க்களத்தின் கோரத்தை நவீன ஓவிய பாணியில் அது சித்தரித்தது. இந்த ஓவியத்தின் விளக்கமாக உள்ளே 'Currie' யின் ஓவியங்கள் சம உலகைச் சூழ்ந்து கொண்டிருக்கும் 'இருண்ட காலங்களைப் பிரதிபலிக்கின்றன. வளைகுடாப் போர் குறித்த அவரது எதிர்வினைகளின் தாக்கமே அவருடைய பெரும் பாலான ஓவிய நிகழ்வுகள் சில ஓவியங்கள் ரஷ்ய மற்றும் முன்னாள் சோவியத் யூனியனின் கம்யூனிச அரசாங்க சிதைவு குறித்த சுய அனுபவம்பற்றின ஓவியங்கள் பதிலீட்டைக் காட்டுகின்றன.' என்று எழுதப்பட்டிருந்தது.

க.நா.சுவின் - 5.8.87 எழுதப்பட்டு இதுவரை பிரசுரமாகாத - கவிதை ஒன்று இந்த இதழில் வந்திருந்தது.

'ஒரு காலத்தில் கதைகள் கதைகளாக இருந்தன.' என்று தொடங்கிய அக்கவிதையின் ஒவ்வொரு பாரா ஆரம்பத்திலும் அதேவ களைச் சொல்லி, கடைசியில் 'இன்று / அவை சினிமாக் கவிதைகளாகி / விட்டன. கதை கதையாக இருக்கும் / காலம் இனிவராது / என்று தான் தோன்றுகிறது. என்று முடிந்திருந்தது. தொடர்ந்து விக்ரமாதித்யனின் இரண்டு கவிதைகள் அபிராஜிதா கவிதைகள் கலாப்பி யாவின் கவிதை ஒன்று, மற்றும் வடிவியின் இரண்டு கவிதைகள் இரா. இரமேஷ். கண்டராதித்தன் எஸ். செந்தில் குமார் ஆகியோரது கவிதைகளும் வந்திருந்தன. இந்த இதழிலும் விஸ்வாமித்திரன் 'வாக்கு மூலம்' என்றொரு வித்தியாசமான கவிதையை எழுதியிருந்தார். 'மின்சர்கியூட் போன்ற குறியீடுகள் கொண்ட சுயபு தலற்ற கவிதையாக அது இருந்தது.' பின் அட்டையில் பெயர் தெ யப்படாத 13 வயது இலங்கைச் சிறுமி - ஒருத்தியின் நம்பிக்கைச் சித்திரம். என்ற நெஞ்சைத் தொடும் எளிய கவிதை ஒன்று வந்திருந்தது. 'சரிநிகர்' என்ற இதழிலிருந்து எடுத்துத் தரப்பட்டிருந்தது

இதுவரை இல்லாமல் இந்த இதழில் நூல் விமர்சனம் ஒன்று' அ.மார்க்ஸ் எழுதிய நமது மருத்துவம் பிரச்சனைகள் என்ற



படிப்பகம்

www.padippakam.com

நூல்பற்றி இரா. இரமேஷ் எழுதியது வந்திருந்தது.

இரண்டாம் பக்கத்தில் வந்திருந்த பெட்டிச் செய்தி ஒன்று 'நவீனத்துவ தமிழின் தற்கால கவிதைச் செயல்பாடு மிகத் தேங்கிய காலப் பின்னணியில் - நமது மொழிப் பரப்பின் கூட்டமை / கட்டமைப்பு மறுவாசிப்புக்குப் பிம்ப நுகர்வுகளை மேலும் நகரச் செய்வதான வாழ்வியலின் நுண்ணழிவு சார்ந்த படைப்புகளை மற்றும் அல்லாத வடிவங்களில் 'புனர்' எதிர் விழைகிறது என்று கோரி இருந்தது.

மொழி பெயர்புகளும் 'புனரி'ல் வந்தன' ஜயந்த மகாபத்ர கவிதைகள் என்ற தலைப்புடன் மே. சு. இராமசுவாமி என்பவர் ஆங்கிலம் வழி தமிழில் ஆற்றின் அருகே நடந்த போது 'தன்னந்தனியாக என்ற இருகவிதைகள் தந்திருந்தார்.

பிப்ரவரி 99ல் வந்த 4வது இதழ் சிசு. செல்லப்பாவை நினைவு கூர்ந்து அவரது தோற்றம் மறைவுகளைக் குறிப்பிட்டு, பின் அட்டையில் அவரது படத்துடன் வந்திருந்தது.

ஹவியின் கவிதை ஒன்று அட்டையிலும் இன்னொன்று உள்ளேயும் வந்திருந்தன. கண்டராதித்தன், விக்ரமாதித்யன், உத்ராடன், பா. வெங்கடேன், போதி ஆகியோரது கவிதைகளுடன் 'கல்யாண்ஜியின் மூன்று கவிதைகளும் இந்த இதழைச் சிறப்பித்தன.

கவிதைகள் மற்றுமே கொண்டதாக வந்த 'புனர்' இந்த இதழில் கனமான சிந்தனை கொண்ட கட்டுரை ஒன்றையும் வெளியிட்டிருந்தது. 'தமிழ்கவிதை பிரதியின் 'நவீனத்துவச் செயல்பாடு' என்ற அந்தக் கட்டுரையை விஸ்வாமித்திரர் எழுதி இருந்தார். இக்கட்டுரை நகுலன், விக்ரமாதித்யன், பிரம்மராஜன் ஆகியோரது கவிதைகளில் 'நவீனத்துவத்தின் வெளிப்பாடுகளை பற்றியும் ஆய்ந்திருந்தது.

தோழர் பொதிய வெற்பனின் பொன்விழாவினை யொட்டி வெளிவரவிருந்த பொன்விழா மலரின் சிறப்பம் சங்கங்கள் பற்றிய குறிப்புகள் மூன்றாவது அட்டைப் பக்கத்தில் தரப்பட்டிருந்தன.

'புனர்' இதழுக்கு வரும் கடிதங்கள் நட்பின் சம்பிரதாயக் கைக் குலுக்கல்களாகவே இருக்கின்றன. படைப்பு ரீதியாக செயல்படும் விமர்சனங்கள் கிடைக்கப்பெற்றால் பிரசுரித்து கவிதை குறித்த உரையாடல் துவங்கலாம் என்று ஆசிரியர் கேட்டிருந்தார். அதன்படி விமர்சனங்கள் வந்தனவா, கவிதை குறித்த உரையாடல்கள் நடந்தனவா என்றறிய, 42 வது இதழுக்குப்பிறகு 'புனர்' வந்ததாகத் தெரியவில்லை.

தொடர்ந்து வந்திருக்குமானால் கதை, கட்டுரை, விமர்சனங்கள் ஆகிய பல தளங்களில் 'புனர்' துடம்பதித்திருக்கும் என்ற நம்பிக்கையை இந்த 4 வது இதழ் தந்தது.

---

பாட்டன்
எதுவும் சொத்துன்னு
சேர்த்துக்கல
அவனுக்கிருந்தது
தொழில் மட்டும் தான்
தப்பு அடிக்கிறதுலேயும்
கொரக்கூலி பொணத்த
அடிச்சி எரிக்கிறதுலேயும்
தேர்ந்த நிபுணத்துவம்
அத வெச்சி
பேரு வாங்கி வாழ்ந்து
போய்ட்டாரு

அப்பனோ
பேக்காலியாய்
ஏவலுக்கு இயங்கும்
செக்கு மாடாய்
வாயில்லா பூச்சியாய்
முதுமையும் வந்தாயிற்று,

நானோ
புதிய வாசல்களை
திறக்கும் சாவிகளோடு

. சிவ்குமார் முத்தய்யா



படிப்பகம்

www.padippakam.com

## கவிஞர் தேவமகள் விருது

2002 - ஆம் ஆண்டுகளுக்கான கவிதை நூல்களுக்குப் பரிசு வழங்கல்
(பெண்கவிஞர்களுக்கு இவ்வாண்டு முன்னுரிமை வழங்கப்படும்)

**"கவிச்சிறகு விருது"** பரிசு ரூ. **10,000/-** (ஒருவருக்கு மட்டும்)
(இது கவிஞரைப் பாராட்டும் நோக்கம் கொண்டது)

**"கவித் தூவி விருது"** பரிசு ரூ. **2000/-** (இருவருக்கு மட்டும்)
(இது இளம் கவிஞர்களை ஊக்குவிக்கும் நோக்கம் கொண்டது)

**"கவிச்சிறகு விருது"** பரிசு 20 ஆண்டுகளாக கவிதைப் படைப்பில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவராக இருத்தல் வேண்டும்.

**"கவித்தூவி விருது"** பரிசு இளைஞராய் இருத்தல் வேண்டும் (இரண்டு பரிசுகளில் ஒரு பரிசு கோவை மாவட்டத்தினருக்கு முன்னுரிமை கொடுத்தப் பரிசீலிக்கப்படும்.)

தகுதிகள். பொது
சொந்தப்படைப்பாக இருத்தல் வேண்டும்,
தேர்வுக்கு கடந்த 3 ஆண்டுகளுக்குள் அச்சிட்ட நூலாக இருத்த வேண்டும்
அனுப்புதல் தேர்வுக்கான 2 படிகள்
நூல் ஆசிரியர் / பதிப்பாளர் / ஆர்வலர் / வாசகர் அனுப்பலாம்.
நூல் பற்றிய தம் கருத்துகளையும் முன் மொழிவுகளாக அனுப்பலாம்
கவிஞர் பற்றி வாழ்க்கைக் குறிப்புகள் உடன் அனுப்புக

கடைசி நாள் : 31.12.2001
முகவரி : 99 ஆர்கஸ் நகர் பீளமேடு, கோவை - 641 004.
நடுவர் குழுவின் முடிவு இறுதியானது

கடந்த ஆண்டுகளில் கவிச்சிறகு விருது இரா. மீனாட்சி, புவியரசு, கலாப்பிரியா, கவித்தூவி விருது. கே. ஆர். பாபு, ப்ரதிபா ஜெயசந்திரன், நிஷா, இளமுருகு (பெருமாள் முருகன்) ஸ்ரீ பதி பத்மநாபா ஆகியோர் பெற்றுள்ளனர்.

## தாய் விரலின் திணறல்

அலுவலகத்திலிருந்து
பழைய கோப்புகளை திருத்தி
வைத்துக் கொண்டிருந்தேன் நான்

எல்லாவற்றிலுமுண்டு
கையொப்புகள்
எழுத்துகள்
ரூபப்படுத்தப்படுவதற்கு முன்புள்ள
லிபிகள் அது

சிலது பதியவில்லை முழுவதுமாக
சிலதில் யாரோ பலமாக
பிடித்ததின் வேதனைகள்
சிலது போதுமோ என
சந்தேகிக்கின்றன
சிலது வெட்கப்படுகின்றன
சிலது அவமானம் கொண்டு
கோபம்
சிலது விறைத்துக்
கொண்டிருந்ததின் லட்சணமுண்டு
தாய்விரலின் திணறல்

அவர் கையொப்பிலிருந்து
வெப்புறாளத்திலோ
சாவகாசத்திலோ
விரல் இழுத்தெடுத்ததுபோலே
அவரை இப்போது காலமும்
இழுத்தெடுத்திருக்க வேண்டும்.

அதுவழிக்கு தோட்டிலோ
கிணற்றின் அருகிலோ
உடுவேட்டியிலோ
அலக்கு கல்லிலோ
சோற்றுருளையிலோ
அந்தனம் கழுவியது போலே
ஏது தண்ணீரிலோ
அவரைக்கழுவியது?

மலையாளம்: **கல்பற்ற நாராயணன்**
தமிழில் : **என். டி. ராஜ்குமார்.**



படிப்பகம்

www.padippakam.com


MRF PRETREADS

India's most advanced Precured Retreading

ARC

# ARC Retreading Company Private Limited


*(ABT & SAKTHI GROUP)*

*We are the Franchisee of* **MRF**

*We retread all sizes of Types*

*in conventional & Precured*

***Registered Office:***
472, Dr. Nanjappa Road,
Coimbatore - 641 018
Phone: 234500 & 234600



***Branch Office:***
10-A/1, Tirvandrum High Road,
Palayamkottai
Tirunelveli - 627 002.
Phone: 502403




படிப்பகம்

www.padippakam.com



# பரிவும் பதற்றமும்

பாவண்ணன்

படிப்பவர்கள் மனத்தில் பெரும் வீச்சுடன் அனுபவம் வி வு கொள்ள வாய்ப்பளிப்பவையாக உள்ளவை சிறுகதைகள். சிறுகதைகள் வழியாக வாசகன் மனத்தில் தாவி விழுவது ஒரே ஒரு பொறிதான். அப்பொறியின் ஒளியையெற்று அவனுடைய மனஉலகம் தகதகக்கத் தொடங்குகிறது. பளிச்சிடும் சுட ல் மனத்தின் பாதாளத்தில் ஒடுங்கிக் கிடக்கும் சொந்த அனுபவங்கள் துலக்கம் பெறுகின்றன. சிறகு முளைத்த பறவைகள் போல மேலெழும்புகின்றன. திசைதோறும் தி யத் தொடங்குகின்றன. ஆழ்மனத்துச் சம்பவங்களை அசைபோடுதல் ஒரு வகையில் அவனது இருப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு இணையாகும். மொத்த உலகத்தை ஒரு விளிம்பில் நிறுத்தி எதிர் விளிம்பில் தன்னை நிறுத்தி ஒப்பிடத் தூண்டுகிறது. இந்த அசைபோடுதல். இதன் வழியாகவே உலகுக்கும் தனக்குமாக உறவு எடைபோடப் படுகிறது. இந்த உறவின் வலிமையாக ஒரே ஒரு பொறியின் வழியாக மனம்தாண்டி மனம் இடம் மாற்ற சிறு சிறுகதையாசி யனுக்கு மனித உறவு சார்ந்த அக்கறையும் பார்வையும், எழுத்து சார்ந்த தேரந்த பயிற்சியும் அவசியமாகும். மனித உறவின் நுட்பங்களுக்கெல்லாம் சாட்சியாக இன்று விளங்குபவை சிறுகதைகளே. இக்கதைகள் என்னும் ஊடகத்தின் துணையோடு மனம் என்னும் கண்காணாத் தீவின் சித்திரத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். மனித உறவு சார்ந்த ஆழமான ஈடுபாடுகளே எளிய படைப்பாளி களையும் பெ ப படைப்பாளி யையும் பி த்துக் காட்டும் அம்சமாகும். மனித உறவின் மேன்மையையும் கீழ்மைகளையும் இருளையும் ஒளியையும் துக்கத்தையும் பரவசத்தையும் மிகைபடாத வகையில் கதைகளில் முன்வைப்பது கடுமையான உ் ழைப்பைக் கோரும் பணியாகும். உலகின் தும் மனிதர்கள் தும் ப வு சுரக்காமல் இப்பணியைச் செய்வது இயலாத செயலாகும்.

ப வாலும் பதற்றத்தாலும் நிறைந்திருப்பது பிச்சமூர்த்தியின் கதையுலகம். வாழ்வின் சகல தளங்களிலும் புழங்கும் மனிதர்களையும் நிலவும் வாழ்வின் மேடுபள்ளங்களையும் சார்ந்து கவனித்ததன் பயனாக ஒரு பார்வையைச் சொந்தமானதாக மாற்றிக் கொண்டிருக்கிறது அவர் மனம். மனிதர்கள் வாழ்க்கை முறைகளைக் கவனித்து அறிந்து கொண்ட அறிவின் வீச்சினால் உருவானவை அல்ல அவர் கதைகள். மாறாக வாழ்வின் மேடு பள்ளங்களைக் கவனித்துக் கசிந்துருகிப் ப ற்றுப் பதறியதால் அவரைக் கரைத்துக் கொண்டு உருவானவை அவர் கதைகள். பாரதியின் பார்வையால் பாதிக்கப் பட்டு உருவான மணிக்கொடி எழுத்தாளர்களில் முக்கியமானவர் அவர்.

பிச்சமூர்த்தியின் முதல் சிறுகதைத் தொகுப்பு நாற்பதுகளில் வந்தது. அறுபதுகளில் ஆறாவது தொகுப்பு வெளியானது. 127 கதைகள் வந்துள்ளதாகத் தெ கிறது அவருடைய நூற்றாண்டையொட்டி அவருடைய எல்லாக்





படிப்பகம்

www.padippakam.com

கதைகளும் அடங்கிய பெருந் தொகுப்பு இரு பகுதிகளாக வந்துள்ளன. பதினெட்டாம் பெருக்கு, தாய், வானம்பாடி, மோகினி, கபோதி, கரும்பாயிரத்தின் கதை, அடகு, மாங்காய்த்தலை, வெள்ளம், பதினாறுகால் மண்டபம் ஆகியவற்றை முக்கியமான கதைகளாகக் குறிப்பிடலாம்.

அவர் கதைகளில் மனிதர் களின் துன்பத்தைக் கண்டு கரையாதவர்களே இல்லை. தம்மால் செய்ய ஏதுமில்லை என்ற நிலையில் உள்ளவர்கள் கூட கணநேரம் நின்று அரைப் பார்வையை வீசிவிட்டுச் செல்லவும் இரக்கத்துடன் மனம் துக்கமுறவும் செய்கிறார்கள். இந்தப் பரஸ்பரப் பரிவை வாழ்வின் சுதந்தரத்துக்கு ஒரு தீர்வாக முன்வைக்கிறார் பிச்சமூர்த்தி. சகல துன்பங்களும் நிராசைகளும், ஏக்கங்களும், வன்மங்களும், ஒரே தராசின் ஒரு தட்டை அழுத்திக் கொண்டிருக் கும்போது பரிவு என்னும் மயிலிறகை மறுதட்டில் நம்பிக்கை யோடும் மனவலியோடும் வைக்கிறார். எந்தக் காரணத்தைக் கொண்டும் இலக்கியத் தர்மத்தை மறக்கலாகாது என்று அவர் தம் நேர்காணலில் அழுத்தம் திருத்தமாகச் சொல்லும் அளவுக்கு அவர் நம்பிக்கை அவரைச் செயல்படத் தூண்டுகிறது. பரிவுணர்வை இலக்கியத் தர்மமாக எண்ணியிருக் கிறது அவர் மனம். போகிற பாதை தெரியும், போகிற இடம்தான் தெரியவில்லை என்று வெளிப்படும் வரிகளில் கூட (பாம்பின் கோபம்) தன் பாதையின் தேர்வின் நியாயம் தன்னுடைய பயணம் எதைநோக்கி என்று தனக்கே தெரியவிட்டாலும் கூட தன்னைச் சரியான இடத்துக்கே பாதை கொண்டு செலுத்தும் என்று ஆழமாக என்னும் அளவுக்கு அவரிடம் செயல்படுகிறது.

இயலாமையும் இல்லாமை யும் தினசரி வாழ்வில் உருவாக்கும் சங்கடங்கள் ஏராளம். பாலுக்குத் தவிக்கிற குழந்தைகளுக்கும் பசிக்குத் தவிக்கிற மனிதர்களுக்கும் நிரந்தரத் தீர்வுகளை வழங்கி ஆதரவுடன் அரவணைக்கும் நிலையில் சமூகம் இல்லை. சமூகத்தின் மீது கோபம் எழத்தான் செய்கிறது. அக்கோபத்தின் உச்சத்தில் பதற்றமெழவும் செய்கிறது. அதே தருணத்தில் மொத்தச் சமூகமும் ஒதுக்கிவிட்டுப் போகிற மனிதக்கூட்டமாக இல்லை. சங்கடங்களுக்குக் காரணங்களைக் கண்டு மனமுருகி ஆதரவுக் கரம் நீட்டும் பரிவுள்ள உயிர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். உலகம் மொத்தமும் வறண்டு விடாதபடி இந்தப் பரிவு உயிர்ப்பாற் றலைக் கொடுக்கிறது கோபத்தைக் கொட்டுவதா அல்லது பரிவைக் காட்டுவதா என்கிற தீர்மானங் களில் இரண்டாம் நிலையைத் தேர்ந்தெடுக்கிறார் பிச்சமூர்த்தி. இப்பரிவைப் பரிமாறிக் கொள்கிற கணத்தில் மனிதர்களுக்கு இடையே எந்தவிதமான ஏற்றத்தாழ்வும் இல்லை. ஒரே ஒரு கணம் மனிதகுலம் அதன் உச்சநிலையான பேரன்பு நிலையில் வீற்றிருந்து விட்டுச் சரிகிறது. பரிவென்பது ஒரு பனி ஏணி. ஏறி நின்ற கணத்துக்குப் பிறகு இன்னொரு பனி ஏணி கிட்டுகிற வரை பனிவெளியில் காத்து நிற்க வேண்டியதாக இருக்கிறது. அறிவினான் ஆகுவதுண்டோ பிறிதின்நோய் தன்நோய் போல் போற்றாக் கடை என்று குறள் எழுதிய வள்ளுவர் காலம் முதல் அமுதசுரபியின் மூலம் அன்னதானம் செய்த மணிமேகலைக் காலம் வரையில் வலியுறுத்தப்படும் பரிவுக் கருத்தாக்கத்தை மனம் நிறையச் சுமந்திருக்கிறார் பிச்சமூர்த்தி.



படிப்பகம்

www.padippakam.com

பிச்சமூர்த்தியின் முக்கியமான கதைகளில் முதலிடம் வகிப்பது தாய் சிறுகதை. கதையில் பசியில் அழும் கைக்குழந்தையை மடியில் வைத்தபடி பிரயாணம் செய்கிறாள் தாய் ஒருத்தி. மார்பில் பால் சுரக்கவில்லை. மேற்கொண்டு உறிஞ்சினால் ரத்தம் வந்துவிடும் அளவுக்கு வறண்ட மார்புகள். அதே ரயிலில் கக்குவான் இருமலால் அழுகிற இன்னொரு குழந்தைக் குப் பிராந்தியைப் புகட்டும் தந்தையை அதட்டி அந்தக் குழந்தையை வாங்கி ரத்தம் மட்டுமே சுரக்க வாய்ப்புள்ள மார்பில் புதைத்துக் கொள்கிறாள். கபோதி என்னும் இன்னொரு கதையில் பார்வையற்ற அனாதைப் பெண்ணை வளர்த்து வரும் சர்மா, அவளை சேட்ஜியோடு ஆசிரமத்துக்கு அனுப்ப முயற்சி எடுத்துவிட்டுப் பிறகு இறுதிக் கணத்தில் மனம் வராமல் பின்வாங்கி விடுகிறார். பல கதைகளில் இத்தகு பரிவு சுரக்கும் தருணங்களைப் பதிவு செய்கிறார் பிச்சமூர்த்தி. வெவ்வேறு பாத்திரங் களை அறிமுகப்படுத்துகிறார். சூழல்கள் மாறி மாறி அமை கின்றன. எதிர்கொள்ளும் தருணங் களும் வேறுவேறாக இருக்கின்றன. ஆனால் பொங்கி வழியும் இயலாமையையும் துக்கத்தையும் மீறிக் கொண்டு பரிவுணர்ச்சி பீறிட்டு விடுகிறது. உணர்வுகளின் வழியாக ஒரு மாயக்கரம் நீண்டு உயிர்களை அரவணைத்துக் கொள்கிற நுட்பமான சித்திரமாகக் காட்டுகிறார்.. பரிவு என்னும் உணர்ச்சி ஆயிரம் கைகள் கொண்ட அன்னை என்றும் அவள் கரங்களே உயிர்களைத் தக்க தருணத்தில் ஏந்திக் காப்பாற்றி விடுகின்றன என்றும் உருவகித்துக் கொள்ளலாம். உச்சத் தருணத்தில் நாடகத்தன்மையின் சிறுநிழல் கூடப்படாமல் காப்பாற்றி விடுவதில் பிச்சமூர்த்தியின் கலைவெற்றி முக்கியமானது. நம்பகத் தன்மையில் ஒரே ஒரு விழுக்காடு அளவு கூட குறைபடாத வகையில் கதைகளைப் பின்னி வைத்திருக்கிறார்.

பரிவின் சித்திரங்கள் காலம் காலமாக இலக்கிய வரலாற்றில் இடம்பெற்றபடியே வந்துள்ளன. தாகத்தால் நாவறண்டு தவிக்கும் இரண்டு மான்களின் சித்திரம் சங்கக் கவிதையில் இடம் பெற்றுள்ளது. கலங்கிப் போன தண்ணீர் சிறிதளவே பள்ளத்தில் தேங்கியுள்ள காட்சியைக் குறிப்பிடு கிறது ஒரு கவிதை. பெண்மான் குடித்து வேட்கை தணியட்டும் என்று நினைக்கிறது ஆண்மான். அதே சமயத்தில் தான் அருந் தாமல் தனியாக அருந்த அம்மான் சம்மதிக்காது என்று தெரிந்து வைத்திருக்கிறது. இதனால் கலங்கிய நீரிடையே வாயை வைத்துப் பருகுவது போலப் பாவனை செய்யத் தொடங்குகிறது. அந்த மானின் பரிவை யாரால் மறக்க முடியும்? இந்த இலக்கிய மரபின் தொடர்ச்சியாகவே பிச்சமூர்த்தியின் கதைகள் பரிவுணர்ச்சி பொலிகின்றது..

பிச்சமூர்த்தியின் இன்னொரு முகம் பதற்றம். பதற்றத்தின் பல தருணங்களை அவர் கதைகளில் காண நேர்கின்றன. நம்பமுடியாத சூழ்ச்சிகளாலும் தந்திரங்களாலும் சகஜ நிலையில் மனிதர்கள் ஈடுபடும் போது பதற்றம் உருவாகிறது. பதினெட்டாம் பெருக்கு என்னும் கதையில் ஒரு பெண்ணிடம் உறவு கொள்ள விழைந்து, விழைவின்படி நடந்து கொள்ளவும் இயலாமல் உதறவும் முடியாமல் தடுமாறும் போது பதற்றம் உருவாகிறது.





படிப்பகம்

www.padippakam.com

காவல் என்னும் மற்றொரு கதையில் உணவு விடுதியில் வேலை செய்ய நேர்ந்த விதவைத் தாய் சூழ்ந்திருப்பவர்களால் சூறையாடப்பட்டு விடுவாளோ என்கிற பதற்றம் தொடக்கம் முதல் இறுதி வரை நீடிக்கிறது.. காவல் இல்லாத குளத்தில் கண்டவர்கள் தூண்டில் போட்டுவிடுவார்கள் என்கிற உருவகக்காட்சி பதற்றத் தைப் பலமடங்காககப் பெருக வைத்துவிடுகிறது.

எந்த வகையிலான கதையாக இருந்தாலும் அவற்றில் குறுக்கிழையாகப் பதற்றம் ஓடிக்கொண்டே இருக்கிறது. ஒழுக்கம் சார்ந்த பிரக்ஞை ஒரு கிளறுகோலாக அவரது பதற்றத்தைத் தூண்டி அதிகரித்தபடி உள்ளது. ஒழுக்கம் சார்ந்த நம்பிக்கை அவருக்குள் ஏராளமாக இருந்திருக் கிறது. ஒழுக்கம் உயர்வானது. கண்ணைப் போன்றது. உயிரைவிட மேலானது. ஆதாயக் கணக்காகவோ இழப்புக் கணக்காகவோ மாறக் கூடாதது. அப்படிப்பட்ட வாழ்வில் மனிதர்கள் ஈடுபட்டு அறம் செழிக்க வாழ வேண்டும் என்கிற கனவு அவருக்குள் இருந்திருக்கலாம். ஆனால் எதார்த்தம் அப்படி இல்லை. தடம் புரள வைத்து விடுகிறது. தவறுகள் செய்யத் தோதாக எல்லாமும் எல்லா இடத்திலும் வாய்த்தே இருக்கின்றன. பட்டினி கிடக்க முடிவதில்லை. வயிற்றைக் கழுவ வேலை வேண்டும். நாலுபேர் முன்னிலையில் நாலு விதமான பேச்சுக்கும் அழைப்புக் குரலுக்கும் செவி கொடுக்க வேண்டித்தான் இருக்கிறது. வேளைகெட்ட வேலயில் உடல்பசி பதினெட்டாம் பெருக்குப் போலப் பொங்கி எழுகிறது. ஒழுக்கம் உயர்வானது என்கிற எண்ணம் எல்லாருடைய உள்ளங்களிலும் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் சுற்றிலும் பாசிபடர்ந்த வழுக்குப் பாறைகளே கிடக்கும்போது விழாமலும் பிசகாமலும் நடப்பதும் சிரமமாக இருக்கிறது. இந்தப் பதற்றத்தில் தவியாய்த் தவிக்கிறார்கள் பாத்திரங் கள். பெரும்பாலான தருணங்களில் பாத்திரங்களால் பாசிப்பாறை மீது கால்வைக்க முடிவதில்லை. பதற்றத்தில் கல்லை உதைத்து விட்டு கால் வலிக்க நின்று விடுகிறார்கள். அபூர்வமாக ஒருசிலர் இடம்பார்த்து நடந்து தப்பித்து நழுவி விடுகிறார்கள்.

பிச்சமூர்த்தியின் இன்னொரு முக்கியமான கதை பெரிய நாயகியின் உலா. கருவறையில் உள்ள பெரியநாயகி தோழிகள் புடைசூழ உலா வந்து உலகை அறிய நேர்வதுதான் கதை., அவளுக்கு இந்த உலகைப் பற்றிய பல ஆச்சரியங்கள் காத்திருக் கின்றன. தெய்வங்களால் உருவாக் கப்பட்ட ஆரம்ப நிலையில் உலகம் இல்லை. நிறைய மாற்றங்கள். எல்லாமே ஏமாற்றம் தருபவை. நிலைகுலைந்து போகும் பெரிய நாயகி மறுசிருஷ்டியில் சரிசெய்து கொள்ளலாம் என்று சொன்னபடி கருவறைக்குள் சென்று விடுகிறாள். இந்தப் பெரியநாயகி உண்மையில் பெரியநாயகியின் உருவில் உலாவரும் பிச்சமூர்த்திதான். அவர்தான் இங்கு நிலவும் மோசடிகளையும் சில்லறைத் தனங்களையும் ஏற்றத்தாழ்வு களையும் கண்டு நொந்து போகிறார். அப்போதும் பரிவுணர்ச்சி பொங்கி வர உலகைச் சரிசெய்து விட முடியும் என்று சொல்லிச் சிரிக்கிறார். இந்த நம்பிக்கையும் புன்னகையும் பிச்சமூர்த்தியின் ஆதாரக் குணங்கள்.



படிப்பகம்

www.padippakam.com

அவருடைய பதற்றங்களை அவருடைய பலவீனங்கள் என்கிற முடிவுக்கு நாம் அவசரப்பட்டு வந்துவிடக்கூடாது. வாழ்வில் தடுமாற்றத்தில் தலைகுப்புற விழ வைக்கும் தருணங்கள் இருக்கும் என்கிற ஞானம் இல்லாத கலைஞரல்ல. அவர். அவை சகஜமே என்கிற அளவுக்கு வாழ்வனுபவமும் தேர்ச்சியும் இருக்கும் கலைஞர்தான் அவர். மனித வாழ்வில் தடுமாறும் கணங்களை எதிர்கொள்ள உலகியல் வாழ்வில் ஒரு சாதாரணனுக்கு இருக்கும் வாய்ப்புகளை விட நீதித்துறை சார்ந்து தனது பணியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டவருக்கு அதிக அளவில் இருந்திருக்கக் கூடும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது., கலைப் படைப்பு என்பது நீதிமன்றமல்ல. கலைஞன் என்பவன் வழக்காடும் வழக்குரை ஞனுமல்ல என்கிற நிச்சயம் அவர் மனத்தில் பதிந்திருக்கும். அதனால்தான் ஒழுக்கத்தைப் பற்றிய பதற்றம் அவர் நெஞ்சைத் துடிக்க வைத்தாலும் அதை உரத்த குரலில் முன்வைப்பதில் தயக்கம் காட்டுகிறார். அடங்கிய முனகலாகக் காட்டிவிட்டுச் சங்கடத்துடன் மறைந்து விடுகிறார். இந்த முனகலைக் குறை கூறிப் பயனில்லை. இதை வைத்து அவரைத் தோல்வியுற் றவராகக் கருதக்கூடாது. அவர் எழுதத் தொடங்கிய காலகட்டத் தையும் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும் நாம். ஒழுக்கத்துக்கும் வாழ்வுக்குமான உறவின் மேன்மை வலியுறுத்தப் பட்டுக் கொண்டிருந்த ஒரு காலத்தில் கணநேரப் பிசகுகளைச் சொல்வது மட்டுமே அவருக்குச் சாத்தியமாகியிருக்கிறது என்று சொல்லலாம்.



## "அரைவட்டம் முழு வட்டமாகும்"

அது
ஆறு குடிசைகள் கொண்ட
அரைவட்டப் பகுதி

அந்தப்பக்கம்
அடிக்கடி
செல்பவனில்லையெனினும்
அறிவேன் அங்கு மலர்ந்திருக்கும்
ஓர் குப்பத்துக் காதலை.

பெற்றோர்அறியாது
அடைக்காத்து வரும்
அந்த காதலர்களை நெருக்கமாக
ஒரு முறை கண்டித்திருக்கிறேன்

வீட்டிற்கு தெரிந்தால்
என்னாகுமோ? ஏதாகுமோ என
எண்ணிக்கொண்டே
காலித்தவர்கள் - ஒரு நாள்
கையும் களவுகமாக பிடிபட்டனர்

அடுத்தவாரம்
அந்தப் பக்கம் போன போது

அது ஏழு குடிசைகள்
கொண்ட அரைவட்டப் பகுதியாக
ஆகிப்போயிருந்தது.

**அக்னிக் குமரன்.**

### திருத்தம்

இதழ் 30-ல் வெளியான 'பேத்தை', சிறுகதையின் ஆங்கில மூலம் ஏ.கே. அப்பாஸ், தமிழாக்கம் - ரோஸ் கேதன் பால், பிரேமலதா தினகர்லால்

ஆசிரியர்



படிப்பகம்

www.padippakam.com

# எழுதப்படாத சிலப்பதிகாரங்களுள் இங்கொன்று

பழமலய்

இந்த ஊரில் அன்று விளைந்த
நெல்லை
இவ்வளவு என்று சொல்ல முடியாது.
விதைகால் நெல்தான்.

இடைச்சி ஒருத்தி இருந்தாள்;
பாலையும் பாலால் ஆனவற்றையும்
பண்டமாற்று முறையில் விற்றாள்
பணமும் காசும் பெருகியதால்
பலவகை அணிகலன்கள் வாங்கினாள்.

கலன்களுள் ஒன்று குறைவதைப் பற்றிக்
கட்டிய கணவன் அய்யப்பட்டான்.
"எங்கே? யார்?. என்று
எடுத்த கொடுவாளுடன் துரத்தினான்.
பாறை இடுக்கில், குகையில் போய்ப்
பதுங்கினாள்.
இறந்து விடத் துணிந்து
இலைகளை வைத்து நசுக்கியவள் முன்னே
எதிர்ப்பட்டு நின்றாள்.
.நானும் பத்தினி,
என் தாயும் பத்தினின்னா
இந்தப் பாறையோட நான் மேலே
போவணும்!.

வளர்ந்த பாறையின் மேலேயும் ஏறி
வந்தவனைப் பார்த்தாள்
குதித்த காலடிச் சுவடுகள்
பாறையில் பதிந்தன!

.நானும் பத்தினி,
என் தாயும்பத்தினின்னா
இந்தக் குகைவாய் மூடிக்கிணும்!.

கொலைவாளொடு குறித்தவனைக்
கண்டதும்
குகையின்வாய் மூடித்தான்
கொண்டது!
அதட்டினான்; அழைத்தான்
தோன்றினாள்:
மகிடற் செற்ற மாயோளாய்!

அவன் தான் எருமை
அவள்தான் மாயோள்
பத்தினி பலியாக மாட்டாள்
பலி கொள்வாள்

............

பின் குறிப்பு :
ஆயந்தூர் - கூடலூரை அடுத்து
ஆர்க்காடு
கொல்லை வெளியில் நடந்து போய்
இடைச்சிக்கல் முன்நின்று
ஏறிட்டுப் பார்க்கலாம்
மாதரி தெரிவாள்
அய்யை தெரிவாள்
தலையில் கூடையைப் போல்
தனிக்கல் ஒன்று இருக்கிறது
அதன் நிழலில் இருந்து
எழுதப்படாத சிலப்பதிகாரங்களுள்
ஒன்றைக்
கிளிகள் தங்களுக்குள் பேசுகின்றன.
தேனீக்கள் கூடாகக் கட்டுகின்றன.

அழிக்க முடியாதது அது
எந்த ஆணாலும்


சதங்கை
விளம்பர விகிதம்

| | |
|---|---|
| முழுப்பக்கம் | ரூ. 1000 |
| அரைப்பக்கம் | ரூ. 500 |
| கால்பக்கம் | ரூ. 300 |

புத்தக விளம்பரங்களுக்கு
தள்ளுபடி சலுகை 50%
புத்தக வெளியீட்டார்கள் இதைப்
பயன்படுத்த வேண்டுகிறோம்.
- நிர்வாகி


முக்கிய அறிவிப்பு

சதங்கையின்
தொலைபேசி எண்
மூன்றாவது முறையாக
மாறியுள்ளது.
புதிய எண் :
04652 - 203713



படிப்பகம்

www.padippakam.com

## கவிதை

நகரின் அமைதிபற்றி
கற்பிதம் இருந்தது எனக்குகள்
பெரும்மழை, உக்கிரக் காற்று,
மரணம் துப்பும் வெயில் என்று
சின்னவயதில்,

இப்போது எல்லாம் மாறிவிட்டது
கொலை, கொள்ளை
பாலியல் வன்முறை, தற்கொலை
எல்லாவற்றுக்கும் காரணிகளாய்
ஒரு பட்டியல் மனிதர்கள்.

இதை அறிந்து கொள்ள
வயதாக வேண்டியிருந்தது
அந்தப் பட்டியலில்
எனக்கு அறிமுகமானவர்க்ள்,
பரிச்சயமானவர்கள்
நெருங்கியவர்கள் என்று சிலர்
பக்கத்து நாற்காலியில்
உட்கார்ந்திருக்கும் நபரை
நண்பராகத்தான் வரித்துக்
கொண்டிந்தேன்
பட்டியலில் அவர் பெயரும்
ஒன்று என்பதால்
என் உடம்பின் நடுக்கத்தைத்
தவிர்க்க முடியவில்லை.
அவர் வாயிலிருந்து வெளிவரும்
எந்தவொரு சொல்லுக்கும்
உடனடி செயல்கள் இருப்பது
தெரிகிறது.
தீக்குச்சிக்காகக் காத்திருக்கும்
பட்டாசு போல்
நகரின் ஏதாவது மூலையில்
புகை இருந்து
கொண்டேயிருக்கிறது.

சுப்ரபாரதிமணியன்

## "நானும் உன் தலையும்"

ஒரு முறை நானிருந்தேன்
உன் கபாலத்தின் பெருவெளியில்

என்னைச்சுமக்க முடியாது
தள்ளாடியது உன் தலை
இருப்பது நான்தானென அறியாது...

எதனாலடிப்பது
எப்படித்தவிர்ப்பது
எதிரேயில்லாத உடனுறையும்
எதிரியை ... ?

இலைகளோடு புழுமென்ற
வெள்ளாடு
வாயைப்பிளந்து கோணி
வரப்புகளிலும் மரங்களிலும்
முகம் தேய்த்து நெளிவது போல்;
மின் கம்பங்களில், மார்பகங்களில்,
சப்பாத்திக்கள்ளி வேலிகளில்
அலைநுனிகளில்
பனையோலைக்கருக்குகளில்
மட்டுமல்லாமல்
எங்கெல்லாமோ மோதினாய்
உன் தலையை உள்ளிருக்கும்
எனையுதற

எனக்கு
வாகனங்கள், ஊடகங்கள்
தேவையில்லை
எனவே
வழிந்து வந்து விட்டேன் ...

நகைப்புடன் பார்த்து ரசிக்கிறேன்
இப்போது
மலைகளின் உச்சியிலிருந்து,
காலியான சங்கு ஓட்டினை
உறையுளென சுமந்துதிரியும்
கடற்கரையோர குறு நண்டினம்
போன்ற
உன் நடைய்யயும்
நடை சுமக்கும் தலையையும்

இலக்குமிகுமாரன்
ஞான திரவியம்



படிப்பகம்

www.padippakam.com

# முறிந்து போனவை

உன் பிரார்த்தனையின் மீட்டல்கள்
நம் ப்ரிய இறைவனைச் சேரவில்லை.

கந்தகபூமி வயலைப் போல
உன் படுக்கை விரிந்து கிடக்கிறது
முதிர்ந்த சோளத்தட்டை
தானியங்கள் உதிர்த்து
ஆடுதல் போல
நீ துவள்கின்றாய் - கால் முறிந்தது!
உன் வேதனை ஒலிகளில்
சுவர்களும் நெளிகின்றன
தூக்கம் கெடுகிறோம்!

உன் ஆசைகள் நிராசைகளாகி விட்டன.
இறுதி நாள்களின் சித்தமொன்று
உன் மனத்தில் இருந்தது.

இயல்பாய்க் சோறுண்டு
தெம்புடன் நடமாடி
மூத்திரமோ மலமோ பாய்தனில் கழியாமல்
எவரொருவரின் முணுமுணுப்பும்
வேதனையில் எழுந்திடாமல்
போய்விட வேண்டும் அல்லாவிடம்
என்றிருந்தாய்!
உன் "துஆ" வின் உடுக்கத்தில்
தொழுகைப் பாயும் இளகியது.

இப்போதோ
"கொஞ்சம் பாத்து நடந்தேனில்லையே
பாவிமட்ட" என
உன்னையே நொந்து
எத்தனை முறை அழுது தீர்த்து விட்டாய்?
அம்மா! நீ அறிவாயோ
உன் நம்பிக்கைகளின்
கால்களும் கழன்று போனதை?

பீமா



படிப்பகம்

www.padippakam.com

# அதிர்வுகள்

கிருஷ்ணன் கோபால்

சுசீலன் இராத்திரி உணவை முடித்துவிட்டு நிம்மதியாகப் படுத்துக் கொண்டான். நடுச்சாமம்... திடீரென்று விழிப்புத்தட்டிய போது நாய்களின் கோரஸ் ஓலம் வெளியெங்கும் நிரம்பி காதில் உறைத்தது. அவனுக்கு விழிப்பு தட்டிய போது நாய்கள் முழங்க ஆரம்பித்திருக்கவில்லை. மாறாக அவன் விழிப்புக்கு முன்னரே நாய்களின் சந்தோச ஓலம் கேட்டுக் கொண்டிருந்தது என்பதுதான் உண்மை. அல்லது அவன் நாய்களின் ஓலம் கேட்டும் விழித்திருக்கலாம். நாய்களின் குரல் நெஞ்சில் ஆயிரம் அதிர்வுகளை ட்டியது. கண்களை மூடினான் ஆனால் தூக்கம் மட்டும் வரவேயில்லை.

பக்கத்தில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த இளைய தம்பி, அவனருகில் தூங்கிக் கொண்டிருக்கும் அம்மா, அரங்கு அறையில் உறங்கிக் கொண்டிருக்கும் தங்கைகள், அப்பா சீட்டாட்டம் முடித்து இன்னும் படுக்கையில் வரவில்லை என்பதனை அவரிடமிருந்து கர்ண கொடூரமான முறையில் எழும்பும் குறட்டை ஒலி வராததை வைத்து அவன் திரும்பிப் பார்க்காமலே நினைவுகளாலே சரிபார்த்துக் கொண்டான்.

ஏதோ ஒரு கணத்தில் ... ஆழ்ந்து தூங்கும் பொழுதேனும் ஆழ்ந்த சிந்தனையின் வியப்பில் தோன்றிய பிம்பம் ஒன்று உருவத் தோடோ அல்லது அருபமாகவோ, நிஜத்தில் எப்போதோ சில சந்தர்ப்ப வேளையில் நடந்து விட்டதின் பாதிப்பின் தொடர்ச்சியாக, கனவில் பயங்கரமான பிம்மபம் சூல்கொண்டு திரளும் தருணத்தை மனது எதிர்பாத்ததின் நீட்சியாய் வாழ்க்கையில் அவன் சந்தித்திராத ஒரு மரணபயத்தை நடுசாமப் பொழுதில் நடுக்கம் கொண்டு வரவேற்றதை உணர்ந்தான். வாழ்க்கையில் இது வரையிலும் சந்தித்திராத மரணபயம் என்பது மிகைப்படுத்தப் பட்டதொன்று என்றாலும் அவனால் அதை அப்படித்தான் நம்ப முடியும். உணரமுடியும் அடிக்கடி உணர முடியாத மரணபயத்தின் உணர்வுகள் தோன்றி மறைந்த சுவடு அடிமனதில் லேசாக சில்லிட்டாலும் இன்று இருக்கும் மரணபயம் எந்தவகையில் சேர்த்தி என்பது தீர்மானிக்க முடியாதது தான். இப்படிப்பட்ட மரணபயம் அல்லவா இன்று அவனை துரதிஷ்டவசமாக ஆக்கிரமித்துள்ளது. வெளியெங்கும் நாய்களின் ஓலம், உள்ளில் குஜராத்தில் ஏற்பட்ட பூமி அதிர்ச்சியின் கோலங்களை பேப்பரில் பார்தத்ததில் பாதிப்பு ஏற்படுத்தியிருந்த வடு கீறியிருந்த புண் பொருக்காதவற்குள் அப்பா, புகைத்து கொண்டிருந்த நெருப்பில் பெட்ரோலை ஊற்றிய வராய், மும்பையிலும், சென்னையிலும் அடுத்து இங்கும் நிலம் நடுங்கப் போவதாகவும், நிலம் நடுங்கப் போவது உண்மைதான் என எண்ணிக் கொள்ளும் அளவுக்கு, மிகைப்படுத்தப்பட்ட அவன் பேச்சு சாமர்த்தியம் இந்த அழிவின் பயங்கரத்தை பூமி அதிர்ச்சி புகைப்படங்களின் உபாயத்தின் துணையோடு, இரண்டரை மணி நேரமாய் கண் காது மூக்கு (வைத்துப் பேசியவர். இதிலிருந்து எவரும் தப்பிக்க முடியாது என்று கடைசியாக ஒரு



படிப்பகம்

www.padippakam.com

குண்டத் தூக்கிப் போட்டார். இன்று பார்த்து அவர் இங்கு இல்லாதது அவர் மீது அவனுக்கு ஆத்திரம் ஆத்திரமாகத்தான் வந்தது. அம்மாவை 'செத்தப் பிரேதமே' என ஏதோ கோபத்தில் திட்டித் தீர்த்த மன உறுத்தலின் ஆற்றாமை அனைத்தும் சேர்ந்து மனதின் வலைப்பின்னலில் தீவிரமாக அலைக்கழித்துக் கொண்டிருக்கிறது.

என்றும் இல்லாத திருநாளாய் இன்று என்ன வந்தது? கேட்காத ஓசையெல்லாம் கேட்கணும் போல் தோன்றியது. அவ்வப்போது கேட்கும் நாய்களின் ஓலத்தை உன்னிப்பாக கேட்கப்போய் அந்த அதிர்வு, தலையின் பின் பகுதியின் இடது புறத்தினைத் தாக்கியது. அதைத்தவிர பல்லிகளின் மூச்சுக் கொட்டுதல், பூச்சிகளின் ரீங்ரீங் சப்தம் எங்கிருந்துதான் வருகிறதோ தெரியவில்லை. தொடர்ச்சியான அதிர்வையும் தவிர்த்து இவற்றின் இடைவெளியை நிரப்பும் இருட்டின் கனத்த மௌனம் ஒரு மயான அமைதி கொண்டிருந்தும் கூட ஏதோ ஒன்று மனதை அரித்து தின்று கொண்டிருந்தும். நில நடுக்கம் வருவதற்கு அறிகுறியாக மனதின் மூலையில் உருவான சூடான சப்தம் தீவிரமாகிக் கொண்டிருக்க மல்லாந்துக் கிடந்தான். கண்ணில் தூக்கம் கவிய மறுக்கிறது. குஜராத்தில் ஏற்பட்ட பாதிப்பினை அவன் மீது ஏற்றிப் பார்க்கிறான். அரசு குடியிருப்பு வாரியம் கட்டிக் கொடுத்த வீடுகளுக்கு 2 ரிக்டார் அளவே பதிவானால் போதும். சில அதிர்வு ஒன்றே போதும் ஒட்டுமொத்த வீடுகளும் சிதிலமாகி உயிர்கள் அனாதையாகிவிடும். அதிலும், இரவு நேரத்தில் ஏற்படும் அதிர்வின் பின் விளைவு கொடுமையானதாக இருக்கும். ஒரு குஞ்சுகுறுமான் கூட மிஞ்சாது. அள்ளிக்கொண்டு போய்விடும்.

படுக்கையைவிட்டு சிரத்தையோடு எழுந்து இருந்தான். பகுதி பாழி திறந்திட்டிருந்த ஜன்னல் வழியே தெருவிளக்கிலிருந்து கசியும் வெள்ளை ஒளியானது ஜன்னல் கம்பியை நீட்சியடையச் செய்ததி லிருந்து அதன் நீளத்தில் இரு மடங்கு சுவரில் சாய்வாகப் பதிவா கியிருந்தது. சூட்சுமம் அடங்கிய அதன் பருமன் அந்த நேரத்திற் கிருந்த நடுக்கத்தை இரட்டிப் பாக்கியதில் அதன் பணியை அது சிறப்பாகவே செய்திருந்தது. சட்டென்று இமையை அழுத்த மூடிக் கொண்டான். தலையணையில் முகம் புதைத்து பயத்தின் நிழலை துரத்துவதற்கான மார்க்கமாக நிறைந்திருப்பான் போலும்... இருள் மண்டிக்கிடந்த மனதில், அந்த காரத்தில் மினுமினுக்கும் நட்சத்திரப் புள்ளியைப் போல் அல்லாத மொண்ணையான கலர் புள்ளிகள் குறுக்கும் நெடுகிலும் ஓடிந்து ஓடியது. மனம் நிம்மதியை முழுதும் இழந்துவிட்டிருந்தது. தன் அரவம் தனக்கே கேட்காத பாவனையில் ஒருக்களித்துப் புரண்டான் பிறகு மல்லாந்த தேகத்தோடு கண்களை அறை முழுவதும் சுழலவிட்டான். பக்க வாட்டில் திரும்புகையில் ஒரு சிகப்பு (இண்டிகேட்டர்) பயத்தின் நெடி தேக்கிய தேகத்தோடு அறை நிரம்பிய குருதியை இறைத்துக் கொண்டிருந்தது. அதிர்வின் இன்னொரு முடிச்சு அவிழ்த்து விட்டதின் தீவிரம் அதிலிருந்து நிழலாடியது. தலைக்கு மேலே பேயாட்டம் போட்ட மின்விசிறி தன் இருப்பிலிருந்து நெகிழ்ந்து விழும் அபாயம் இருப்பதாகக் கண்களைப் பொத்திக் கொண்டான். படா ரென்று சிந்தனையில் மின்னியது. வாமன அவதாரம் எடுத்திருக்கும்



படிப்பகம்

www.padippakam.com

ஆளுயர கண்ணாடி பதிக்கப் பட்டிருக்கும் பீரோ, கண் திறக்கப் பார்த்தான். மங்கலான வெளிச்சத்தில் அதன் இருப்பில் நின்றிருந்தது.

அடுத்த சில கணத்தில் பூமி அதிர்ச்சி நிகழப்போவதாக உள்ளுணர்வு கூறியதும் தூங்கிக் கொண்டிருப்பவர்களை எல்லோரையும் காப்பாற்றிக் கொள்ள ஆயத்தமாகி கூப்பாடு போட்டு எழுப்பிவிட தீர்மானித்தான். சப்தம் வெளி வரவில்லை. வெளியில் நிற்பது திருடன்தான் என உறுதியானதும் அமுங்கிப் போய்விடும் சப்தம் போல், மனதுக்குள் இறுகிவிட்டது. சப்தம். எவரையும் எழுப்பிவிட துணியவில்லை. சட்டென்று ஏற்படும் அதிர்வுகளைத் துல்லியமாக உணரும் தருணம் நெருக்கடி நேரங்களில் மிகுதியான வாய்த்திருந்தது. காத்திருந்தது ஏதும் நிகழாமல் போகவே ஆயாசத்திற்கு உள்ளாகி, ஓசைப் படாமல் கதைவைத் திற்து வெளியேறினாள். நீர்கோடு தரையை ஈரப்படுத்திக் கொண்டிருந்தது. வீட்டை ஒட்டி நிற்கும் பலா மரத்திலிருந்து விழும் பழுத்த இலைகளின் மரணமும், தூரத்தில் கேட்கும் பஸ்சின் இரைச்சல் போல்ட், கொஞ்சம் கிட்டத்தில் கிடந்த கடல் இடி முழக்கம் வேறு எழுப்பியது. பக்கவாட்டில் வி ந்து, கிடந்த அந்தரத்தில் நட்சத்திரங்கள் ஒளியிறைத்துக் கிடப்பதன் அர்த்தத்தின் முடிச்சு அனர்த்தத் தின் குறியீட்டை உணர்த்தியது. மழை வருவதற்கு முன் உடலில் ஏற்படும் சிறுமாற்றமான புழுக்கம் சேர்ந்து இருப்பது எரிச்சலை ஏற்படுத்தியது.

அனேகமாக அவன் கதவைத் திறந்து வெளியேவரும் அனக்கம் கேட்டு யாரேனும் மூத்திரம் அடக்கி வைத்திருப்பவர்கள் வந்திருப் பார்கள். இன்று யாரும் அவனைத் தொடர்ந்து வெளியேறியிருக்கவில்லை.

மரங்களும் செடிகளும் தென்றலை உமிழ நடுஇரவு நேரம் மட்டும் தடை போடப்பட்ட ரகசியத்தின் சூட்சமம். மனிதர் களுக்கு தெ ந்துவிட்டாற்போல் தென்னையின் பூமிபார்த்த மடலும் சிறு செடிகளும் லேசாக குழைந் தாடியது.

அடுத்து உள்ள அன்டி ஆபிசிலிருந்து 'ணங்' என்ற ஒரு மணி ஓசை கேட்டு எழுந்த அதிர்ச்சி திகிலைக் கொடுத்தாலும் அப்போதைய நான் உன்னோடவே இருக்கிறேன் என்ற ஆதரவான குரலை நினைத்து சிறு சந்தோசம் நெளிந்து நெடுநேரம் நீடிக்கவில்லை. பயம் கவ்விய அந்த இருட்டைத் துளைத்து கண்களை மேய விட்டதில் தூரத்தில் தெ யும் தெருவிளக்கின் ரகசிய வெளிச்சம் பட்டு அசாதரணமாக தலை அசைத்துக் கொண்டிருக்கும் சிறு வேப்பமரம் இங்கிருந்து பார்க்கும் போது கரும்பூதம் ஒன்று தன் கொடுமையான முகத்தில் கூடுதலான இருளை அப்பிக் கொண்டு தலையசைப்பதாய் காட்சியளித்தது.

இந்த பூமி மயானம் ஆகி விட்டபின் இந்த மரங்கள் மட்டும் யாருக்கு அள்ளிக் கொடுக்க நின்று கொண்டிருக்கும்? பகல் வேளையில் மரத்தினை சந்தோசம் பொங்க கட்டிப்பிடித்து முத்தமிட வேண்டும் என மானசீகமாக நினைத்துக் கொண்டான். அழிவிலும் கூட எல்லோரும் பிழைத்தோடுவோம் என்கிற நம்பிக்கை வேரோடியிருந்தது. இருப்பினும் பூமி அதிர்சியிலிருந்து எல்லோரையும் காப்பாற்றியாக வேண்டுமே என்கிற கவலை மட்டுமே உடலையும் உயிரையும் ஒருசேர பிடித்திருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

வெளியில் நிற்கும் போது அதிர்வு ஏற்பட்டால், ஒரு செகண்டிலிருந்து ஐந்து செகன்ட் வரையிலும் நீடித்தால் எப்படியாகிலும் தப்பித்துக் கொள்ளலாம். தலைக்கு மேலே வானத்தைத் தவிர வேறு எந்த ஒரு விதானமும் இல்லாதது நிம்மதியாக இருந்தது. அப்பா, அம்மா, தம்பி, தங்கைகள், எல்லோரும் ஒரு கணம் நினைவில் வந்து போனார்கள். நாய்களின் ஓலம் திரும்பவும் அடிவயிற்றைக் கலக்கியது. குனிந்து சிறு கல்லெடுத்து எறிந்து விரட்டுதவற் கூட திராணியில்லாதவனாய் காலால் துழாவி தேடியும் ஒன்றும் தட்டுப்படவில்லை. அந்த நேரத்தில் சிறு ஓட்டுத் துண்டு கூட எங்கோ ஓடி ஒழிந்து கொண்டது போலும். தொலைவில் பார்த்துக் கொண்டிருந்த பூதமரம் அடலோடு பெயர்ந்து துரத்தியவாறு பக்கத்தில் வந்து விட்டதை உணர்ந்தவன் சடாரென்று வாசலை மிதித்து கதவை தாழ்ப்பாள் போட்டான். கொஞ்சம் வேகமாகவே கதவை சாத்தும் போது உண்டான சப்தம் கேட்டு தெளிய ஆரம்பித்த தம்பி நல்லகாலம் விழித்துவிடவில்லை... பூதமரம் ஜன்னலுக்கு வெளியே நின்று உற்றுப் பார்ப்பதன் பிரமையில் பீதியின் அளவு கணிசமாக அளவு உயர்ந்திருந்தது. படபடப்போடு எழுந்து மின் விசிறியை வேகமாக சுழலவிட்டான். மின்விசிறி ஓடும் வேகத்தில் காற்றை காற்றை உள்ளிழுக்கும் ஓசையில் வெளியிலிருந்து வரும் சப்தத்தை விழுங்கிவிடும் என்று நம்பினான் சிகப்பு வெளிச்சத்தை தடை செய்தான். தொண்டை வறண்டு கிடந்தது. மூடி வைத்திருந்த செம்பின் இடம் நோக்கி கையை துழாவி பார்த்தான். கை தட்டுப்பட்டு விழுந்து மூடியோடு ... செம்பின் சிறிய நகர்வினால் கரகரப்பு ஏற்பட்டது. ஏதோ பொல்லாத தவறை செய்துவிட்ட முகபாவனையில் நொந்து கொண்டான். செம்பை இருப்பிடத்தினருகில் வைத்தவன், போர்வையை அடி முதல் தலைவரையிலும் இழுத்து விட்டான்.

பேய்யர்கள், காமுகர்கள், திருடர்கள் எல்லோரையும் மண்மூடிப் போகச் செய்யும் பூமி அதிர்ச்சி வந்து உயிர் மொத்தத்தையும் பறித்துக் கொண்டு போகட்டும் போல் இருந்தது.

இது ஏற்கெனவே அழிஞ்ச தட்சணா பூமிடே ... இப்ப ஒன்னும் இதுக்கு அழிவு வராதுடே. என யாரோ கூறிய வாசகம் நினைவிருந்தும் கூட பயம் கொழுகொம்பில் பரவிக் கொண்டிருந்தது. வீட்டில் எல்லோரும் இப்படிப்பட்ட மன நெருக்குதலுக்கு உள்ளாகாமல் நிம்மதியாக தூங்கிக் கொண்டிருக்கிறார்களோ? அல்லது யாரேனும் அவனுக்குத் தெரியாமல் கண்களை மூடிக்கொண்டு குமைத்து கொண்டிருக்கிறார்களோ என்னவோ .. எல்லோருக்கும் விடியட்டும் விடியும் பொழுது எல்லோரு உயிரோடு இருந்தால், தங்கையிடமோ தம்பிகளிடமோ அப்பாவிடமோ அம்மாவிடமோ முகம் மலர்த்தி அக்கறையோடும் உள்ளன்போடும் பழகிக் கொள்ள வேண்டும். மனதில் மண்டிக்கிடந்த இருளுக்கு முலாம் பூசிப் பார்த்தான்.

மீண்டும் நாய்கள் ஒரே சுருதியில் ஓலமிட்டும் துன்பத்தை கூவி அழைத்தவிதம் உயிர்கள் அனைத்தும் சமாதியாகிவிடும் என உறுதிமொழி எடுப்பது போல் இருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

# அடர்ந்து இருள் சூழ்ந்து...

நந்தன்

கடுமையான புயல் ஒன்று அந்த ஊரைத் தாக்கியிருந்தது. இடைவிடாத இரண்டு வார மழை. பலத்த சூறைக் காற்று. கடலின் கொந்தளித்த சீற்றம். ஊர் சின்னாபின்னமாகியிருந்தது.

இரண்டு நாட்களாத்தான் மழைவிட்டு வெள்ளமும் மெள்ள மெள்ளமாய் வடியத் தொடங்கியிருந்தது. கூரையிலும் கோட்டை மதில்களிலும் தஞ்சம் பெற்று நின்றிருந்த மக்கள் கொஞ்சம் கொஞ்சமாய் தரையில் கால் பதிக்க ஆரம்பித்திருந்தனர். வெள்ளத்தினாலான பாதிப்பு அது வடியும் தருவாயில் தான் முழுசாய் அறியப்படுமல்லவா... குழந்தைகள் பெண்கள் மற்றும் ஆண்களின் சடலங்களும் அங்கங்கு ஒதுங்கிக் கிடந்தன. ஏராளமான கால் நடைகள் வயிறு உப்பிய நிலையில் பிணமாகியிருந்தன. ஊரெங்கும் பிணங்களின் அழுகல் வாடை கொஞ்சம் கொஞ்சமாய் பரவ ஆரம்பித்திருந்தது. பயிர்கள் நீரில் மூழ்கி எதற்கும் பயனற்றதாய் ஆகிப் போயிருந்தது.

பசி, தன் கோரக் கரங்களால் மக்களை அழுத்த ஆரம்பித்திருந்தது.

இயற்கையின் இந்த ருத்ர தாண்டவத்தை தலைவர் நேரில் வந்து பார்வையிட்டார். மக்களின் தேவைகளைப் புரிந்துகொண்டு உடனடியான மீட்புப் பணிக்கு உத்தர விட்டார். மீட்புப்படைகள் மிறங்கியது. பணிகள் துரிதப் பட்டன. அதைவிட அவசரமாய், வீடிழந்து சொந்த பந்தமிழந்து நிர்கதியாய் நின்ற மக்களுக்கு உணவுப் பொட்டலம் வழங்குமாறு தலைவரால் உத்தரவு பிறப்பிக்கப் பட்டது.

ஒரு பொது இடத்தில் உணவு தயார் செய்யப்பட்டு பெரிய பெரிய வாகனங்கள் உணவுப் பொட்டலங்களைத் தாங்கி வந்தன. உணவு விநியோகத்தை நேரில் பார்வையிட்டு மக்களின் பசியாறுதலை கண்ணாரக் காண வேண்டும் என்கிற ஆசையில் தலைவர் நேரில் வந்தார்.

ஒரு இடத்தில் உணவு விநியோகத்தை நேரில் பார்வையிட்டுக் கொண்டிருந்தவருக்கு பலத்த அதிர்ச்சி.

ஜனங்கள் ஒருவர் மேல் ஒருவர் மிதித்து ஏறி, தனக்குக் கிடைக்காமல் போய்விடக்கூடாது என்கிற பரபரப்பில் அந்தச் சூழலை குரூரமயமாக்கிக் கொண்டிருந்தார்கள். உணவுப் பொட்டலங்கள் தான் வண்டியினுள் மலைபோல் குவித்து வைக்கப்பட்டிருக்கிறதே. தனக்குக் கிடைக்காமலா போய்விடும்! அல்லது தான் பறக்கும் பரபரப்பில், தனக்குக் கிடைக்க வேண்டுமென்கிற வெறியில், தன் சக மனிதன் ஒருவனின் பங்கு தன்னால் களவாடப்படுகிறதே. அவனும் தன்னைப் போல் தானே பசியோடிருப்பான். இது மாதிரியான எண்ணங்கள் யாருக்கும் தோன்றியதாய்த் தெரியவில்லை.

இது பற்றி எண்ணிய தலைவர் ரொம்பவும் விசனப் பட்டார்.

இத்தனை சுயநலமிகளா என் மக்கள்! தான்.. தனது... தன் சுற்றம். என்பதில் இத்தனை வலுவான பிடிமானம் கொண்டவர்களா இவர்கள்...? அல்லது வயிறு பசித்தவன் இப்படி வன்மமாய் மாறிவிடுவது தான் உலகத்து



படிப்பகம்

www.padippakam.com

இயல்பா... எது நிஜம்? தலைவர் ரொம்பவும் வேதனைப்பட்டுச் சிந்தித்தார். சக மனிதனை மிதித்துக் கொண்டு ஏறி உணவுப் பொட்டலம் வாங்கி, பின் அடுத்தவன் மீது தாவிக்குதிக்கும் தன் மக்களின் செயல் அவரை அதீதமாய்க் களேபரப்படுத்தி விட்டது.

இதற்கு ஏதாகிலும் ஒரு தீர்வு காண வேண்டும் என்று அவர் மனசு அவசரப்பட்டது. ஏதானும் ஒரு தீர்வு இயற்கையில் இல்லாமலா போய்விடும். அல்லது தன் அமைச்சரவை ஆழ்ந்து ஆய்வு செய்து இதற்கொரு தீர்வினைச் சொல்லிடாமலா போகும்...?

தலைவர் உடனே தன் அமைச்சரவையைக் கூட்டினார்.

இன்று காலை தான் பார்த்த நிகழ்வை விரிவாய் விளக்கிய தலைவர் மேலும் சொன்னார். .நான் விவரித்த இந்தச் சுயநலம் இந்தச் சம்பவத்தோடு மறைந்து போகும் ஒரு விஷயமல்ல. ஏராளமாய்ப் பொட்டலம் வழங்க நம் நிதி நிலைமை தயாராயிருந்த இந்த நிலையிலேயே இந்தக் கூத்து என்றால், பஞ்சமும் பசியும் இங்கு வலுவாய்க் காலூன்றி விட்டதாகிய ஒரு நிலையை யோசித்துப் பாருங்கள். அந்த நிலையிலும் கூட, இருக்கும் பொருட்களை தங்களுக்குள் பகிர்ந்துகொள்ளும் ஒரு பழக்கம் நம் மக்களுக்கு வர வேண்டாமா? தடியெடுத்தவன் தண்டல்காரன் என்று ஆகி விட்டால், வலியவர்கள் மட்டுமே வாழத் தகுதி படைத்தவர்கள் என்கிற நிலை உருவாகி விட்டால் எளியவர்கள் எங்கே செல்வது? மனிதன் சாவது என்பதை விட மனிதம் சாவதென்பது என்னால் ஜீரணிக்க இயலாததாயிருக்கிறது. ஏதோ நான்கு வரிகளில் நான் என் எண்ணத்தைக் கொட்டிவிட்டேனென்றாலும் இவை ஆழமான பொருள் பொதிந்தது அமைச்சர்களே.. என் அடிவயிற்று ஆதங்கம் இவை. இதற்கு சரியானதொரு தீர்வினைச் சொல்லவே நான் உங்களை அழைத்திருக்கிறேன். "தலைவர் சொல்லிவிட்டு மௌனமானார். அவர் நெஞ்சத்தில் ஆழ்ந்து பரவியிருந்த வேதனை அவர் விழிகளில் விரவியிருந்தது.

சில நிமிஷ மௌன நகர்வுகளுக்கு பிறகு அமைச்சர் அன்பு எழுந்து நின்று பேச ஆரம்பித்தார். .தலைவரே... நாம் நம் மக்களுக்கு சுயநலம் பற்றிய பிரக்ஞையை ஏற்படுத்தவில்லை. சுயநலமின்மையின் விழுமியத்தையும் உணர்த்தவில்லை என்றே தோன்றுகிறது. பரஸ்பர உயிர்களிடத்து செலுத்தும் அன்புதான் மனிதப்பிறவியின் ஆதார ஸ்ருதி என்பது அவர்களுக்குத் தெளிவிக்கப்படவில்லை. முதலில் இது பற்றிய சிந்தனைகளை அவர்கள் உள்வாங்கிக் கொள்ள வேண்டும். எளியவர்களின் மீது ஏறிப் பயணிப்பதென்பது "எத்தகைய கீழ்மையான ஒரு மனோபாவம் என்பது தர்க்கவாத விளக்கங்களோடு அவர்களுக்கு புரியவைக்கப்பட வேண்டும். ஆனால் இது ஓரிரவில் நிகழத்தக்க மாற்றமில்லை. நமது நம்பிக்கையிழக்காத தொடர்ந்த பிரச்சாரம் தான் இதற்கு ஒரே தீர்வு என்பது என் தாழ்மையான அபிப்ராயம்.

அமைச்சர் அன்பின் பேச்சுக்குப் பின் கூட்டத்தில் நெடியதொரு சலசலப்பு. அவரின் கூற்றை பலரும் ஏற்காதது போன்றதொரு தோற்றம் தான் அங்கு உருவாகிக் கொண்டிருந்தது. அனைத்தையும் கவனித்துக் கொண்டிருப்பது போல் தோன்றினாலும் தலைவரின் பார்வை எங்கோ நிலைகுத்தியிருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

மயிலே மயிலே... இறகு இடு. என்னும் சாத்வீகக் கூற்றெல்லாம் செல்லுபடியாகாத நிலை இன்று. என்று அதிரடியாய்த் தன் பேச்சை ஆரம்பித்தார் அமைச்சர் லா. அவர் பேச ஆரம்பித்த உடனேயே அனைவரும் செவி விரைத்து நிமிர்ந்து உட்கார்ந்தனர்.

சட்டம் வேண்டும் தலைவரே... நுண்ணியமாய் ஆராய்ந்து தீட்டப்படும் சட்டம் நம்மிடையே வேண்டும். மனிதர்கள் பரஸ்பர உயிர்களிடத்தில் அன்பு செலுத்துதல் வேண்டும் என்பது சட்டமாக வேண்டும். வலியோன் எளியோன் யார் யாரென்பது நுணுக்கமாய் ஆராய்ந்து வரைய றுக்கப்பட்டு, அவரவர்களுக்கு என்னென்ன உ மை ஏதேது கடமை என்பது தீர்மானிக்கப்பட வேண்டும். இதனை றுவோர் கடுமையாய் துண்டிக்கப்பட வேண்டும். இரும்புக்கர அடக்குமு றையினால் மட்டுமே நீதிகள் நிலை நாட்டப்பட முடியும். அதற்கென்று சட்டம் வடிக்க ஒரு குழு அமையுங்கள். சுயநலமற்ற நேர்மை யாளர்கள் அதில் உறுப்பினர்களா யிருந்து இந்த ஊ ன் தலை விதியை அவர்கள் தீர்மானம் செய்யட்டும். அது... அது ஒன்று மட்டுமே தீர்வு. படபடவென்று பேசி முடித்த அமைச்சர் 'லா' 'வெடுக்'கென்று உட்கார்ந்து கொண்டார்.

ஆனால் அவருக்கு பலத்த எதிர்ப்பு இருந்தது. கடுமையான சட்டங்களும் இரும்புக்கர அடக்கு முறைகளும் மனித சுதந்திரத்தை பாதித்து விடுமென்று பலரும் நம்பினர். சட்டங்கள் வழியினைக் காண்பிக்க மட்டுமேயன்றி அவ்வழியில் மக்களை இழுத்துச் செல்ல அல்ல'லென்று பெரும்பா லோனோர் அபிப்ராயம் கொண்டி ருந்தனர். எட்ட நின்று அதோ அது நல்ல வழி. இது தீயது என்று காண்பித்து விட்டு மௌனமாய் நின்று கொள்வது மட்டுமே சட்டத்தின் வேலை என்று ஒரு சிலர் கருத்துச் சொல்லினர். அழைத்துப் போவதற்கு தானய்யா நிர்வாகம். என்று அமைச்சர் லா கடுமையாய் வாதிட்டார். நிர்வாகம் அடக்கு முறை செய்யக்கூடாது. அது தனிமனித சுதந்திரத்தை பாதிக்கும். என்று கூட்டம் அவருக்கு எதிர்வாதம் செய்தது. மசிற பாதிக்கும். என்று கோபத்துடன் அமைச்சர் லா வார்த்தை சிதற. தலைவர் இடையில் புகுந்து அவரைக் கண்டித்தார். நாகரீகமான வார்த்தைகள் மட்டுமே இங்கு உபயோகப்படுத்தப்பட வேண்டும் என்று கண்டிப்போடு கூறினார்.

இந்தக் களேபரம் ஓயுமுன் பின்வ சையிலிருந்து தொண்டுகிழமான அமைச்சர் ஆனந்தம் உரத்துக் கத்தினார். என்னைப் பேச விடுங்கள் தலைவரே.... ரொம்ப நாட்களாகவே என்னையும் என் கருத்துக் களையும் முடிக்க வைத்திருக் கிறீர்கள் இன்றாவது என்னைப் பேச...... அவர் முடிக்குமுன் தலைவர் அவருக்கு இசைவு தர. அமைச்சர் ஆனந்தம் தொடர்ந்து பேசினார்.

நான் நீண்ட நாட்களாகவே சொல்லி வருகிறேன். கடவுள் என்று ஒருவர் இருக்கிறார். அவர்தான் இவ்வுலகைப் படைத்தார். அவரே இப்பரந்த உலகத்தை ரட்சித்து வருகிறார். அவர் பற்றின பிரச்சாரம் தான் இதற்கு முற்றான தீர்வு. என்று ஆனந்தம் பேச்சை ஆரம்பிக்கை யிலேயே அமைச்சர்களிடத் திலிருந்து வலுவான கூச்சல் எழும்பியது.



படிப்பகம்

www.padippakam.com

அமைச்சர் ஆனந்தம் இந்தக் கருத்தை ரொம்ப நாட்களாகவே சொல்லி வருகிறார். .ஏதோ ஒரு சக்தி நம்மை இயக்கி வருகிறது. அதுதான் நம்மைப் படைத்திருக்க வேண்டும். அதுதான் நம்மைக் காத்து, பின் நம் பாவ புண்ணியங் களுக்கு ஏற்ப நம்மை அழிக்கிறது.. என்னும் அனுமானம் நெடுநாட் களாய் அமைச்சரவையில் அவர் எடுத்துச் சொல்லி வரும் ஒரு விஷயம்.

ஆனால் இதனை அமைச்சர் களில் இருவர் கடுமையாய் எதிர்த்தனர். ஒருவர் அமைச்சர் ஞானம் மற்றொருவர் அறிவு .

.அவரவர்களின் நியாய அநியாயச் செயல்கள் தான் அவரவர்களின் வாழ்வு முறையைத் தீர்மானிக்கின்றன. மறு வாழ்வைத் தருகின்றன. நமது இந்த மனித வாழ்க்கையில் நம் கையிலுள் ளவை ஒரு பகுதி. நம்மால் இயலாதவை மற்றொரு பகுதி. இந்த மற்றொரு பகுதி நம் பூர்வீக வாசனைகளின் படிமானம். நம் சக்திக்கு அப்பாற்பட்ட இதனை கடவுள் என்ற குறியீட்டின் மூலம் குறித்துக் கொள்ளலாமே தவிர, மற்றபடி கடவுள் என்னும் அரூப சக்தி ஒன்று உண்டு என்பது அமைச்சர் ஆனந்தத்தின் கற்பனை மட்டுமே. மேலும், கடவுள் தான் அனைத்துச் செயலுக்கும் காரண கார்த்தா வென்றாகி விட்டால் மனித இயக்கம் ஸ்தம்பித்து விடும். நம் கையிலுள்ள ஒரு பகுதியால் முனைந்து முதிர்ச்சி பெற்று மனிதன் முழுமை பெற வேண்டும். இந்த முழுமை நோக்கியே பயணமே மனித வாழ்க்கையின் குறிக்கோள். இந்த முழுமை நோக்கிய பயணத்திற்கு கடவுள் என்னும் குறியீடு உதவி வேண்டுமானால் செய்யுலாமே தவிர, அது உண்மை என்று நம்பி மனிதன் தன்னை மழுங்கடித்துக் கொள்ளக்கூடாது., அமைச்சர் ஞானம் தன் வாதத்தால் ஆனந்தத் தைத் திணறடிக்க, அறிவு வேறு மாதிரியாய் மடக்கினார்.

.ஒரு வெங்காயமும் கிடையாதுங்க. கடவுளும் கிடையாது. வாசனையும் கிடையாது. நாத்தமும் கிடையாது. பிரத்யட்சமாய் உள்ளது மட்டுமே நிஜம். அரூபமான சக்தியும் கிடையாது. செயலும் கிடையாது. ஒன்றும் ஒன்றும் இரண்டு என்னும் எளிய கணக்குத்தான் இவ்வுலகம். காண்பது நிஜம். காணாதது பொய். இவர்களின் கருத்து மக்களை முடமாக்கி விடும்.

வாதங்கள் வலுவாய் இருக்க, ஞானத்தின் பக்கமும் அறிவின் பக்கமும் சிலபலர் சாய, ஆனந்தம் தனித்து விடப்பட முன்பொரு நாள் அமைச்சரவைக் கூட்டத்தில் எழுந்த இந்தச் சர்ச்சை அத்தோடு முடித்து வைக்கப் பட்டது. வலுவான காரணகாரிய விளக்கங்கள் இல்லாததால் ஆனந்தத்தின் கடவுள் பற்றிய இந்தக் கோட்பாடு மக்களுக்குப் பிரச்சாரம் செய்யப்படாமல் அமைச்சரவைக்குள்ளேயே முடக்கப்பட்டது.

.அதை இப்போது எதற்குச் சொல்ல வருகிறார்கள் ஆனந்தம்?. என்று தலைவர் அன்பாய்க் கேட்க, .காரணம் இருக்கிறது தலைவரே...... என்றபடி அவர் சொல்ல ஆரம்பித்தார்.

.கடவுள் பற்றிய இந்த அனுமானம் சர்ச்சை நிரம்பிய தாகவே இருக்கட்டும். அது .அறிவு. சொல்வது போல் பொய்யான தாகவோ அல்லது ஞானம் சொல்வது போல் கற்பனையான தாகவோ இருந்து விட்டுப்



படிப்பகம்

www.padippakam.com

போகட்டும். ஆனால் அது பற்றியசெய்தியை இப்போது மக்களுக்குப் பரப்புவதில் ஒரு நன்மை இருக்கிறது.

ஏற்கனவே இந்த உலகத்து மக்கள் மனதில் ஒரு குழப்பம் இருக்கிறது. தாங்கள் துல்லியமாய் கணக்கிட்டு செய்யும் சில செயல்கள், இலக்கு தப்பி தப்பிதமாய் நிகழ்ந்து விடுவது குறித்து அவர்கள் மனதில் ஒரு சலனமும் அமைதியின்மையும் இருக்கிறது. மக்களின் இந்த அமைதியின்மை தான் நமக்கு ஆதாரம். அது தான் நாம் கவண் எய்தும் திக்கு. நீ செய்யும் நியாய அநியாயங்கள் கடவுள் என்னும் ஒருவனால் துல்லியமாய் தணிக்கை செய்யப்பட்டு அதற்கேற்ற பலாபலன்கள் தான் உனது இந்நாளைய செயல்களுக்கு இறுதிப் பயனாய் விளைகின்றது என்று அவர்களிடம் சொல்வோம். நீ தவறு செய்தால் அந்தத் தணிக்கை அதிகா யான கடவுள் உன்னைத் தண்டிப்பார் என்று பிரச்சாரம் செய்வோம். சக உயிர்களிடத்தில் அன்பு செலுத்தா விட்டால் உனக்கு பரவுலகான கடவுள்களின் சுகவுலகு இல்லை என்று அவர்களுக்கு ஒரு நம்பிக்கை ஏற்படுத்துவோம். அன்பின் வழியிலும் சட்டம் வடித்து அதிகாரத்தின் மூலமும் உயிர்களிடத்தினுள் பரஸ்பர சிநேகத்தை வலுப்படுத்துவதில் இத்தனை இடையூறுகளும் ஐயங்களும் இருக்கும்போது, ஒரு பொய்யான நம்பிக்கையின் மூலம் இதனைச் செயலாக்க முடியும் என்றால் அதிலென்ன தவறு? விழுமியமான பலனைத் தரும் ஒரு நம்பிக்கை, பொய்யானதாக இருந்தால் அதனால் யாருக் கென்ன நஷ்டம்...?.

ஆனந்தத்தின் இந்த வாதம் கேட்டதும் கூட்டம் நிசப்தமானது.

ஞானம். இந்தப் பொய்யான நம்பிக்கை நன்மை விளைவிக்கும் என்றால் அந்தப் பொய்மை மக்கள் மத்தியில் புழங்கிப் விட்டுப் போவதில் எனக்கு அட்டியில்லை. ஆனால், கூடவே என்னுள் வேறொரு ஐயமும் எழுகிறது. சராசரி மனிதனொருவன் இந்தப் பொய்மை நம்பிக்கை மூலம்தான் பரஸ்பர உயிர்களிடத்து சிநேகத்தை கைக்கொள்வான் என்னும் நிலையில் அவனுக்கு இது போதுமானது.. ஆனால் இந்தச் சிநேக தாத்பர்யத்தின் அவசியத்தை உளமாற ஒருவன் பு ந்து கொண்டு செயலாற்ற விழையும்போது, அவனிடமிருந்து இந்தப் பொய்மை நம்பிக்கை கழன்று போக வேண்டாமா? அப்போதுதானே அவன் முழுமையடைந்த மனிதனாகிறான்! அந்த முழுமை நோக்கிய பயணத்திற்கு இந்தப் பிரச்சாரம் ஊறு விளைவித்து விடக்கூடாதே என்னும் கவலை என் நெஞ்சாழத் தில் எழுகிறது. என்றார்..

ஆனால் அமைச்சர் அறிவு தடலடியாய் ஓங்கிக் குரலுயர்த்திப் பேசினார். .பொய் பரப்புவதில் எனக்கு முற்றாய் உடன்பாடில்லை. றி, அப்படிப் பரப்புவது தான், சக உயிர்களிடத்திடையேயான சிநேகத்தை வலுப்படுத்தும் ஒரு செயல்பாடு என்பது இந்த அமைச்சரவைக் கூட்டத்தின் ஒரு முடிவாக ஆகும் பட்சத்தில் அது என் சம்மதம் றி நடைபெறட்டும். தலைவர் அனுமதியுடன் நான் வெளிநடப்புச் செய்ய விழைகிறேன்., என்று உரக்கப் பேசி விட்டு அமர்ந்து கொண்டார்.

அதன் பிறகு அங்கு சிற்சில விவாதங்கள் நடைபெற்றன. நிறைகுறைகள் அலசப்பட்டன. பிறகு தலைவர், இறுதி அறிக்கை





படிப்பகம்

www.padippakam.com

தயார் செய்து அதனைப் படித்தார்.

கடவுள் என்று ஒருவர் இருக்கிறார் அல்லது இல்லை என்பது கேள்விக்குரிய ஒரு விஷயமாகவே இருந்து விட்டுப் போகட்டும். ஆனால் ஏனைய முறைகளால் கற்பிக்கப்பட முடியாத இந்த மனித நேயம் கடவுள் என்னும் கற்பிதத்தால் சாத்தியப் படும் என்னும் பட்சத்தில் அதுவே நாம் விழைவது. நமது அத்தியா வசிய அவசரத்தேவை, மனிதனின் மனதில் முகிழ்க்க வேண்டிய சக உயிர்களிடத்திலான பிரேமை. பரஸ்பர உயிர்களிடத்தில் அவனுக் கிருக்க வேண்டிய நேச உணர்வு. ஞானத்தின் கூற்றுப்போல், மனிதன் முழுமையடைய வேண்டு மென்றால், அது அவரது நம்பிக் கையான அவரவர்களின் வாசனை களினால் நிகழ்ந்து விட்டுப் போகட்டும்.. நமது சராசரி மனிதனுடைய மனதின் முதிர்ச்சி யைக் கருத்தில் கொண்டு இங்கு ஆனந்தத்தின் கூற்று அமல் செய்யப்படுகிறது. இந்த நம்பிக்கைக்கு மதம் என்று பெயரிடப்படுகிறது. நாம் விழைவது மனித நேயம். அது அந்த கடவுள் எனும் அரூப சக்தியினால் கற்பனையினால் பொய்மையின்றால் சாத்தியபடட்டும். நம் தேசத்தில் மதம் என்னும் அமைப்பு பிரச்சாரம் செய்யப் படட்டும் .

அமைச்சர்களின் கரவொலிக் கிடையிலும், அமைச்சர் அறிவின் வெளி நடப்புக்கிடையிலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அன்றைய அமைச்சரவைக் கூட்டத்துக் வழக்கத்திற்கும் முன்னதாகவே தலைவர் ஆஜராகி விட்டார். தலைவரின் கட்டுக் கடங்காத இந்த ஆவலுக்கு ஒரு காரணமும் இருந்தது. அந்த தேசத்தில் மதம் என்னும் கோட்பாடும் கடவுள் பற்றிய சித்தாந்தமும் ஸ்தாபிக்கப்பட்டு சில மாதங்கள் ஆகியிருந்தன.

அதன் விளைவுகளை, விளைவுகளின் நிறைகுறைகளை ஆராய்ந்து அறிக்கை தரச்சொல்லி தலைவர், அமைச்சர் ஒருவருக்கு உத்தரவு பிறப்பித்திருந்தார். அதன் நிமித்தம் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டம் அது என்பதுதான் தலைவரின் அதீத ஆர்வத்துக்கு காரணமாயிருந்தது.

.மகத்தான வெற்றி தலைவரே. என்று அமைச்சர் தன் பேச்சை ஆரம்பிக்க, தலைவர் அந்தப் பீடிகையில் அவ்வளவாய் திருப்தி கொண்டதாய்த் தெரிய வில்லை. காரணம் சொல்லு மய்யா என்கிற பாவனை அவர் முகத்தில் தொக்கி நின்றது.

.நம் தேசத்தில் மதம் வலுவாய்க் காலூன்றி விட்டது தலைவரே. கடவுள் பற்றிய பிரச்சாரம் ஜனங்கள் மனதில் ஒரு அதிர்வை உண்டு பண்ணி யிருக்கிறது. இந்த இரு நம்பிக்கை களும் இனி அவர்களின் மனதிலி ருந்து அகல்வதற்கு வாய்ப்பே இல்லை. ஆனால் அவர்களுக்கு அடிப்படையாய் சில சந்தேகங்கள் இருக்கின்றன. நம்மை மீறிய சக்தி, நமக்கு நல்லது நல்கும் சக்தி என்னும் பட்சத்தில், கடவுள் என்பது எப்படியிருக்கும் என்று தெரிந்து கொள்ள அவர்களுக்கு ஒரு வித ஆற்றாமை. நான் வெளி யைக் காண்பித்து, இந்த அண்டவெளியை விடப்பெரியது எது? அதுதான் கடவுள், நம்புங்கள் என்றேன். அவர்கள் என்னைப் பார்த்து பேந்தப் பேந்த விழித்தார்கள். உடனே நான், அது போகட்டும். நமது செயல்கள் எத்தனை அற்பமானதாக இருந்தாலும், உள்ளுக்குள்ளிருந்து ஒரு குரல் இது தப்பிதமானது,



படிப்பகம்

www.padippakam.com

இது நேர்மையானது என்று அனவரதமும் நம்மை தைரியத்தோடு எச்சரித்துக் கொண்டிருக்குமே... மனசாட்சி எனும் ஒரு வஸ்து, அதைக் கூட கடவுள் எனும் பெயரால் கட்டலாம் என்றேன். இத்தனை எளிமையாய்ச் சொன்ன பிறகும் கூட அவர்கள் ஏதோ புரிபடாத குழப்பத்தில் தவிப்பது மாதிரிதான் தவிக்கிறார்கள் ..

அப்போது தலைவர் அவசரமாய் குறுக்கிட்டார். அமைச்சர் தம்பி.... திசையும் வெளியும் உள்ளுக்குள்ளிருந்து உரத்துக் குரல் கொடுக்கும் மனசாட்சியும் பிரும்மாண்டமானதும் வீரியம் மிகுந்ததும் தான் என்றாலும், மனதில் பதித்துக் கொள்ள ஒரு உருவு வேண்டாமா....? ஏதுமற்றதை எப்படி எண்ணத்தில் கொணர்வது? அவர்களின் குழ்ப்பம் நியாயமானது தான். நமது கடவுள் என்னும் கற்பிதத்துக்கு நாம்தான் உருவம் கொடுக்க வேண்டும். மற்ற அமைச்சர்கள் இது சம்பந்தமாய் தங்கள் கருத்துக்களைக் கூறலாம்.

தலைவர் சொல்லி முடித்தது தான் தாமதம். ஆணுருவு, பெண்ணுருவு, இரண்டும் பகுதி பகுதியாய் நிற்கும் ஒரு புது உருவு, குழந்தை, மிருகம், பறவை, மனித உடலுடன் கூடிய மிருகத் தலை என்று பலப்பல விதமாய் கடவுளின் உருவகங்கள் அமைச்சர் குழுவால் முன்மொழியப்பட்டன. ஒவ்வொரு கற்பனைக்கும் ஒவ்வொரு காரணமும் சொல்லப்பட்டது.

இத்தனை ஆலோசனைகள் கேட்டு தலைவர் மிரண்டு போனார். இறுதியில், உருவம் என்பது ஒரு குறியீடு தான். அதை யார் யார் எப்படி எப்படி விரும்புகிறார்களோ அப்படியே உருவகித்துக் கொள்ளலாம். கடவுள் என்பது பேராற்றல் கொண்ட ஒரு சக்தி என்பதால், அது பக்தன் விரும்பும் வடிவத்தை எடுத்துக் கொள்ளும். என்று அன்றைய குழப்பத்தினை தலைவர் தீர்த்து வைத்தார்.

தலைவரின் இந்த அறிவிப்புக்குப் பிறகு அந்த தேசத்தில் பல்வேறு கடவுளர்கள் தோன்றினார்கள். கடவுளுக்கு மதிப்புச் செலுத்தும் நோக்கு, வழிபாடு என்பதாய் வழங்கலாயிற்று. வழிபாடும், முறைகள் பிரிதாகப் பிரிதாக பல்வேறு குழுக்களை உற்பத்தி செய்தது. ஆரம்பத்தில் சாத்வீகமாய் நடந்து வந்த கடவுள் வழிபாடு நாளாவட்டத்தில் மனிதர்களின் குணநலன்களுக்கேற்ப பல்வேறு பரிமாணங்களை எட்டியது. அந்தப் பரிமாண வளர்ச்சி உயிர்க்கொலை வரை பாவியது. பல்வேறு தேவதைகளை திருப்தி செய்யும் நோக்கில் வளர்க்கப்பட்ட வேள்விகளில் கால்நடைகளைப் பலியிடும் போக்கு அதிகரித்தது.

இதையெல்லாம் கண்டு மனம் வெதும்பிய ஒரு சிந்தனையாளர் அந்த தேசத்தில் தோன்றினார். ஆதி என்ற பெயரைக் கொண்ட அவர், கடவுள் என்னும் ஒரு கற்பிதம் இவ்வுலகுக்கு உபயோகமானது இல்லை என்னும் ஒரு கோட்பாட்டை வலியுறுத்தி வந்தார். இவ்வுலகில் உயிர்களைக் காட்டிலும் மேன்மையான விஷயம் வேறொன்றில்லை. மனிதன் தனக்குள் அனவரததமும் நிகழ்த்திக் கொள்ளும் தேடலும் அது விளைக்கும் அனுபவங்களுமே இந்த உலகம் இயங்குதலுக்குரிய ஆத்மா என்று ஆதி உரத்துச் சொன்னார். கடவுளை அகற்றுவதன் மூலம் சடங்கு சம்பிரதாயம் முதலியவற்றை அக்ற்றி விட்டதாகவும், அதற்குப் பதிலாய் கடுமையான விரதங்களை மேற்கொண்டு அவன் தன்னைத்





படிப்பகம்

www.padippakam.com

தானே தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும், ஆதி புதிய தத்துவ நோக்கை அந்த தேசத்தில் அறிமுகம் செய்வித்தார்.

ஆனால் ஆதியின் கோட்பாட்டுக்கு ஆரம்பத்தில் இருந்த செல்வாக்கு பின்னாளில் கொஞ்சம் கொஞ்சமாக மங்க ஆரம்பித்தது.

அது கண்ட கௌதமன் என்கிற சிந்தனையாளர், ஆதி யின் கோட்பாட்டில் சிறியதாய் ஒரு மாற்றம் செய்து தன் சிந்தனையை முன் வைத்தார். கடுமையான விரதங்களுக்கு பதிலாய் தியானம் என்னும் உள்முக ஆய்வை அவர் அறிமுகம் செய்வித்தார். ஆனால் கௌதமனின் கூற்றுக்கு ஆரம்பத்தில் இருந்த வரவேற்பு, அவரின் மறைவுக்குப் பின் கொஞ்சம் கொஞ்சமாய் தன் நிறமிழந்தது. கடவுள் வேண்டாம் என்று சொன்ன கௌதமனையே, அவரின் வழித்தோன்றல்கள் கடவுளாய் பாவித்து வழிபடும் அவலம் நிகழந்தது.

ஒரு நாள் தலைவர் சுப்பர மஞ்சத்தில் ஓய்வாயிருந்த நேரத்தில் அவரைச் சந்திக்க ஒரு பார்வையாளர் வந்திருப்பதாய் அவருக்குச் செய்தி சொல்லப் பட்டது. பொதுவாய் தலைவர் இது மாதிரியான ஓய்வு நேரங்களில் யாரையும் சந்திக்க விரும்ப மாட்டார். ஆனால் வந்தவர், தான் கடல் கடந்து வந்திருப்பதாயும், கடவுள் கோட்பாடு பற்றிப் பேச விழைவதாயும் செய்தி தெரிவித்த போது, தலைவர் அதீத ஆவலால் உந்தப்பட்டு வேகமாய் ஓடி வந்தார்.

வந்தவரின் வெண்நிறத் தோலும், பூனை விழிகளும், செம்பட்டை முடிகளும் தலைவரை ஆச்சரியத்திலாழ்த்தின. அதை விட, அவர் சொன்ன விஷயம் தலைவரின் ஆர்வத்தை இரட்டிப் பாக்கியது.

வந்தவர், தங்கள் தேசத்தில் கடவுள் என்னும் ஒரு அதீத சக்தியின் தூதுவர். தங்களோடு வாழ்ந்து வந்ததாகவும், சில வருடங்களுக்கு முன்பு தான் அவர் மறைந்து போனதாகவும் செய்தி சொன்னார்.

தலைவர் ஒரு கணம் வலிதாய் அதிர்ந்து போனார்.

.நான் எங்கள் மதம் பற்றிய புரிதலை இந்த தேசத்து மக்களுக்கு எடுத்துச் சொல்ல வந்துள்ளேன். அதற்குத் தங்களது அனுமதி வேண்டும். என்று, வந்தவர் தலைவரிடம் கோரிக்கை வைக்க, தலைவர் சிறிது குழம்பிய நிலையில் அவர்களது மதத்தின் நோக்கம் என்னவென்பதாய் அழுத்திக் கேட்டார்.

.மனித நேயம்.... பரஸ்பர உயிர்களுக்கிடையேயான சிநேகத்தை வலுப்படுத்துதல். என்று அவர் சொல்லி முடித்தது தான் தாமதம். தலைவர் அதி வேகமாய் அவருக்கு ஒப்புதல் வழங்கினார்.

சில நாட்கள் கழிந்த பின், நீண்டு அடர்ந்த தாடியோடு சிலவும், தூய வெண்ணிற உடையில் சிலரும், தலைக்கும் தாடிக்குமாய் அழுத்திக் கட்டிய தலைப்பாகையோடு சிலரும் என்று வித்தியாசமான சில பலர் தலைவரைச் சந்தித்தனர். ஒவ்வொருவரும் மதம் மற்றும் கடவுள் பற்றின கோட்பாடுகளுக்கு வேறு வேறு விளக்கங்கள் சொல்லி அதைப் பரப்ப விழைவதாய் சொன்னது தலைவரை ஆச்சரியத்திலாழ்த்திற்று. ஆனால் எல்லோருமே மனிதநேயமும் சக உயிர்களிடத்தில் பிரேமை வளர்த்தலுமே தங்கள் பிரச்சாரத்தின் அடிநாதம் என்று சொல்ல,. தலைவர் யாருக்கும்



படிப்பகம்

www.padippakam.com

தடை சொல்லவில்லை.

சில வருடங்கள் கழியக் கழிய, தலைவர் தன் அமைச்சரவைச் சகாக்களிடத்தில் ஒரு வித மாற்றம் ஏற்பட்டு வருவதை உணர்ந்தார். அந்த மாற்றம், அவர்கள் உருவத்திலும், உடையிலும், பல்வேறு விதமான அணிகலன்களிலும் தெரிய ஆரம்பித்தது. அது கண்டு வெகுவாய் ஆச்சரியம் கொண்ட தலைவர், .என்னய்யா இது கோலம்....? சிலர் சிகையிலும், சிலர் கழுத்திலும், சிலர் நெற்றியிலும், சிலர் உடையிலும் என்று வித்தியாசமாய்ச் சில மாறுதல்களைச் செய்து கொண்டு இருக்கிறீர்கள். எதன் பொருட்டு இது? . என்று வினவ, அவர்களின் பதில் தலைவருக்குச் சிரிப்பினை வரவழைத்தது.

.கடவுளை அடையும் வழி தலைவரே.... என்று அவர்கள் ஒரு சேர கோரஸாய் குரலுயர்த்தினர்.

.அப்படியென்றால் உங்கள் மாதிரி மாற்றங்களைச் செய்து கொள்ளாதவன் கடவுளை அடைய மாட்டானா...?. என்று தலைவர் கேட்டார்.

.இல்லையில்லை... கடவுள் அளவு கடந்த கருணையாளரா யிற்றே. அவனும் அவரை வழி பட்டால் நிச்சயம் அவரை அடைய முடியும். என்று எல்லோரிடத்திலு மிருந்து ஒருமித்த குரலில் பதில் வந்தது.

.அப்போ இந்த வேஷம் என்னத்துக்கு?. என்ற தலைவரின் கேள்வி அவர்களை யோசிக்க வைத்தது. ஒருவரையொருவர் அர்த்தபாவத்துடன் பார்த்துக் கொண்டனர். பின், .இது எங்கள் மதத் தலைவரின் கட்டளை் என்றனர்,

.அது யாரய்யா புதிதாய் ஒரு ஆள், மதத்தலைவர்...?.

.அவுர் தான் எங்களை கடவுளின் சம்பத்துக்கு அழைத்துச் செல்லத் தயாராயிருப்பவர்..

.மற்றவர்களெல்லாரும்....

.கிட்டத்தட்ட எல்லா மக்களுமே இதனை அடியொற்றி....

.ஓஹோ... நம் தேசத்தின் மக்கள் எல்லோருமே உங்களைப் போல் ஏதாவதொரு வேஷதாரியாக மாறிவிட்டார்களா?.

.ஆம் தலைவரே.

.ஆமாம்... இது மாதிரியான புற வேஷங்கள் புனைந்து கொள்வதில் உங்களுக்கு எப்படி இத்தனை ஈடுபாடு வந்தது?.

.அதுதான் தலைவரே... கடவுளுக்குச் சமீபத்தில் எங்களைச் சீக்கிரமாய் இட்டுச் செல்லும்..

.இது யார் சொன்னது? இதுவும் அந்த மதத் தலைவரா?.

.ஆமாம் தலைவரே. கடவுளின் விருப்பத்து பிறழ்ந்து நடந்தால் அவர் எங்களை தண்டித்து விடுவாரோ என்னும் அச்சமும் எங்கள் மனசின் அடியாழத்தில் இருக்கிறது.

தலைவர் யோசித்தார். ஏதோ தவறு நடந்து வருவதாய் அவருக்குத் தோன்றியது. அதன் முழுப் பரிமாணமும் அப்போது அவருக்குப் புரிபடவில்லை. சரி... மனிதநேயம் என்ற அஸ்திவாரத்தில் எழுப்பப்பட்ட விதிகள் தானே இவை.. போகட்டும், என்றபடி தலைவர் தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டார்.

ஆனால் அடுத்த சில திங்கள்களில் நிகழ்ந்த நிகழ்வுகள், தலைவருக்கு மேலும் சில வாசல்களைத் திறந்து விட்டன.

அன்று தலைவரைக்காண அமைச்சர் ஒருவர் தன் பரிவாரங்களோடு வந்திருப்பதாய் தலைவருக்குச் செய்தி சொல்லப்பட்டது. அதென்ன புதுச்சொல்... பரிவாரம் என்பதில் குழப்பத்தினூடே தலைவர் அவருக்கு அனுமதி •



படிப்பகம்

www.padippakam.com

கொடுத்தார். ஏழெட்டு பேர் புடை சூழ வந்த அமைச்சர், தலைவருக்கு மாலை அணிவித்து ஒரு பொன்னாடையையும் போர்த்தினார். இந்த புதுப்பழக்கம் ஆச்சரியம் தந்து தலைவர் பிரமை நீங்காது நின்றிருந்த வேளையில் தான் அமைச்சர், தான் நேரடியாய் விஷயத்துக்கு வர விரும்புவதாகச் சொல்லி விட்டுப் பேச ஆரம்பித்தார்.

.தலைவரே.. நம் தேசத்து ஜனத்தொகையில் முப்பது சதவீதம் பேர் எங்கள் ஆட்கள்தான். ஆனால் அவர்களெல்லோருக்கும் பிரதிநிதியாக இதுநாள் வரை நான் ஒருவன் மட்டுமே இருந்து வந்திருக்கிறேன். பத்து சதம் பதினைந்து சதம் உள்ள மக்களுக்கெல்லாம் இரண்டு பேரும் மூன்று பேரும் பிரதிநிதியாக இருக்கிறார்கள். அதனால் எங்கள் ஆட்களில் மேலும் இருவருக்கு நீங்கள் அமைச்சர் பதவி தர வேண்டும்...

தலைவருக்கு ஒரு நிமிஷம் ஏதும் புரியவில்லை. .என்னைய்யா.. பிரதிநிதி.. எங்கள் ஆட்கள்.... சதவிகிதக் கணக்கு..? எதைச் சொல்ல வருகிறீர்கள்...?.

.தலைவரே ... எங்கள் மதத்தைச் சார்ந்தவர்களைத் தான் சொல்ல வருகிறேன்....

தலைவருக்குச் சட்டென்று கோபம் வந்தது.

.உங்கள் மதத்துக்காரனுக்கு ரெண்டு அமைச்சர் பதவி கொடுப்பதனால் என்ன லாபமென்று நினைக்கிறீர்கள்?.

.எங்கள் ஆட்களுக்கு, இந்த தேசத்தில் தாங்களும் மதிக்கப்படுகிறோம் என்ற ஒரு திருப்தி இருக்கும். பய உணர்வு நீங்கும். தவிர, எங்கள் மதம் வளர்வதற்கு....

.தூத்தேரி.. வாயை மூடுங்கள். நீங்கள் அமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது இந்த தேசத்தின் அத்தனை ஜனங்களுக்கும் பிரதிநிதியாகத்தான் என்பதை நினைவில் கொள்ளுங்கள். தானே ஒரு குழுவை அமைத்துக் கொண்டு, யாரோ நாலு பேரைக் கூட்டி வந்து, இவர்களுக்கு மட்டுமேயான பிரதிநிதி நான் என்று சொல்ல எப்படி உங்களுக்கு புத்தி பேதலித்தது....?.

தலைவர் உச்சமாய் இரைந்து கொண்டிருந்தார். அமைச்சர் தலைவரைச் சமாதானப் படுத்தும் முயற்சியில் .தலைவரே.. அப்படியில்லை... அதற்கில்லை.... என்றபடி அவரைத் தணிவிக்க பிரம்மப்பிரயத்தனம் செய்தார்.

தலைவர் தீர்க்கமாய், .குழு மனப்பான்மை கொண்ட நீங்கள் இனி அமைச்சராய் இருக்கத் தகுதியற்றவர். உமது அமைச்சர் பதவி இன்றிலிருந்து உம்மிடமிருந்து களையப்படுகிறது. நீங்கள் போகலாம். என்றார்.

தலைவர் விருட்டென்று உள்ளே போக, வந்திருந்த குழு இறுக்கமான முகங்களுடன் வெளியேறியது.

தலைவர் இரண்டு நாட்களாய் சரியாகச் சாப்பிடவில்லை என்பது அவரின் உதவியாளருக்கு பெரும் வருத்தத்தைத் தந்தது. அவர் எவ்வளவோ வற்புறுத்தியும் தலைவர் சரியாய் உணவு உட்கொள்ளவில்லை. தலைவர் உண்ணவில்லை என்பதாலான அவரின் உடல் வருத்தத்தைக் காட்டிலும் தலைவரின் மனவருத்தமே உதவியாளருக்கு பெரிதான துக்கத்தைத் தந்தது.

தவறி விட்டேன். நான் தவறி விட்டேன்.. என்பதையே தலைவர் விடாமல் ஸ்மரனை செய்து கொண்டிருந்தார்.

.நண்பா எத்தகையா க்ஷணம் பார்த்தாயா.. பரஸ்பர உயிர்களிடத்தில் சிநேகம் வளர்க்க உருவாக்கப்



படிப்பகம்

www.padippakam.com


**அயல்நாட்டு அன்பர்களுக்கு ஒரு வேண்டுகோள்**

சதங்கைக்கான படைப்புகள், சந்தா, விளம்பரம் முதலியவைகளுக்குக் கீழ் குறிப்பிடும் முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம்.

**M. SIVAGNANAM**
A- 14-08, Plam Court
Jalan Berhala, Brick Field
50470 Kualalumpur.
msgnanam @ tm. Net my.


பட்ட மதம் என்று அவர்களிடத்தில் பேதம் வளர்த்திருக்கிறது. எப்பேர்ப்பட்ட கொடுமை இது! இது எதனாலாயிருக்கும் என்று ஏதும் உனக்குப் பு படுகிறதா? என்று தலைவர் கேட்டார்.

அதற்கு அவரின் உதவியாளர் பரம பவ்யத்துடன் பதில் சொல்ல ஆரம்பித்தார். .தலைவரே... இதன் ஆணிவேர் சுயநலம் என்பதாக மட்டுமே நான் கருதுகிறேன். மொத்தச் சமூகத்தைப் பார்க்கையில் தன் மதமும், தன் மதத்தைப் பார்க்கையில் தன் குடும்பமும், தன் குடும்பத்தைப் பார்க்கையில் தான் மட்டுமேயும் பிரதானமானதாக இவர்கள் பார்வையில் இருக்கிறது. தன் மதம் என்னும் இவர்களின் மொத்தப் பார்வை கூட சுயநலத்தின் ஒரு படிமம் தான். அந்தச் சுயத்தின் அழிவு மட்டுமே இவர்களைப் பொதுமையாய் சிந்திக்கச் செய்யும்.

மேலும், மதங்களில் தன்னை அறியும் ஆன்மீகத்தை எளிமைப்படுத்த வேண்டி சில சடங்குகளை விதிக்கப் போக, இவர்கள் அந்தச் சடங்குகளை வலுவாகப் பிடித்துக்கொண்டு ஆன் கத்தை விட்டுவிட்டார்கள். இத்தகைய உள்முகத் தேடலை உதறித் தள்ளிய போக்குதான் இவர்களின் சுயநலத்தை இன்னமும் ஆழமாய் இவர்களிடம் பிரதானப்படுத்துகிறது.

.உன் பார்வை எனக்குப் பு கிறது நண்பா. அது நோக்கிய பயணத்திற்கான பாதை என்று உனக்கு ஏதாவது புலப்படுகிறதா?.

.இல்லை தலைவரே... இப்போதைக்கு எனக்குத் தெ ய வில்லை. எனக்கு அது அடர்ந்து இருள் சூழ்ந்த காடாகத்தான் இப்போதைக்குத் தென்படுகிறது. ஆனால் அப்பாதை முழுமையாய் அடைபட்டு விட்டது என்று சொல்ல எனக்குத் தை யமெழவில்லை. எட்டி நிற்கும் கோடியில் இன்னமும் ஒரு சிறு ஒளி இருப்பதாகத்தான் எனக்குப்படுகிறது.

.எதை வைத்துச் சொல்கிறாய்...?.

.உலகமும் அதிலுள்ள உயிர்களும் சந்தோஷமயமானவை தலைவரே. தற்போது அதன்மேலே படிந்திருக்கும் திரை, மாயைதான். மாயை என்றாவது ஒருநாள் விலகித்தானே ஆக வேண்டும்..

தலைவர் தன் உதவியாளருடன் பேசிக்கொண்டிருக்கும் போது ஒரு அவசரமான செய்தியுடன் காவலாளி உள்ளே வந்தார். .தலைவரே நம் வீட்டுக்கு சில கஜ தூரத்தில் பெரும் கலவரம் ஒன்று நடந்து கொண்டிருக்கிறது. இது வரை ஏழு உயிர்கள் கலவரத்தில் பலியாகி விட்டதாய் தகவல் வந்துள்ளது..

செய்தியைக் கேட்டவுடன்





படிப்பகம்

www.padippakam.com

தலைவர் பதட்டமாகி கலவரத் துக்கான காரணம் கேட்டார்.

.சில நாட்கள் முன்பு தங்களால் பதவி பறிக்கப்பட்ட அமைச்சர், தனது எதிர்ப்பைத் தெரிவிக்கும் நோக்கத்தில் தனது மதத்தினரை முடுக்கிவிட்டு மிகப் பெரும் ஊர்வலம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்திருக்கிறார். அதற்கு எதிர்ப்பாய் இன்னொரு அமைச்சர் பதில் ஊர்வலம் ஒன்று ஏற்பாடு செய்யவே, இரண்டு குழுக்களுக்கும் கைகலப்பு ஏற்பட்டு இரு தரப்பிலும் உயிர்ச்சேதம் நிகழ்ந்திருப்பதாய் செய்திகள் தெரிவிக்கின்றன. என்று சொல்லிவிட்டு காவலாளி அங்கிருந்து அகன்றார்.

தலைவர் காவல்படைகளை முடுக்கிவிட்டு விட்டு, சம்பவ இடத்துக்கு விரைந்தார்.

போகிற போக்கில், பதில் ஊர்வலம் நடத்திய அமைச்சர் யாரென்று வினவ, அவருக்குப் பலத்த அதிர்ச்சியாயிருந்தது. .உங்களால் நான்கு அமைச்சர் பதவி பெற்ற மதத்துக்காரர் அவர். நீங்கள் இருக்கும் வரைக்கும் அவரின் மதம் நல்ல ஏற்றம் பெற்று வளருமென்று அந்த அமைச்சர் நம்புகிறாராம். என்ற செய்தியைக் கேள்விப்பட்ட தலைவர், அதில் பொதிந்திருந்த நோக்கம் கண்டு விதிர்த்துப் போனார்.

இறந்து போன ஏழு உடல்களும் தலைவர் இல்லத்தில் வரிசையாய் கிடத்தப்பட்டிருந்தன. தலைவர் அதீதமான துயரத்திலாழ்ந்திருந்தார்.

இரண்டு மதக் தலைவர்கள் வந்திருப்பதாயும், இறந்து போன தங்கள் மதத்து நபர்களின் உடல்களை தங்களிடம் ஒப்படைக்கக் கோரி அவர்கள் விண்ணப்பம் செய்வதாயும், தலைவரின் உதவியாளர் வந்து செய்தி சொன்னார்.

காரணம் கேட்கக் கூட இயலாத நிலையில் தலைவரின் மனம் இடிந்து போயிருந்தது.

தங்கள் மத சம்பிரதாயப்படி, சில சடங்குகள் செய்த பின், ஒருவருக்கு உடல்களைப் புதைக்க வேண்டுமாம், மற்றொருவருக்கு இறந்துபோன உடல்களைச் சிதையிலிட்டு எரிக்க வேண்டுமாம்

தலைவரின் காதில் தகவல் கிசுகிசுக்கப்பட்டது.

நிஷ்டூரமாய் முகத்தைத் திருப்பிய தலைவர், .ஏழு உடல்களையும் மின்சார யந்திரத்தில் வைத்து அரசாங்கத்தின் சார்பில் எரித்து விடுங்கள். என்று கோபமாய் ஆணை பிறப்பித்துவிட்டு விடு விடுவென்று வீட்டுக்குள் நடந்தார்.

## இளம் ஓவியர்கள் பார்வைக்கு

**சதுக்கை**யில் இளம் ஓவியர்கள் வரைந்து அனுப்பும் கோட்டுப் படங்கள் (Line Drawing) வரவேற்கப்படுகின்றன. கதை, கட்டுரை, கவிதைகளுக்கு ஏற்ற படங்கள் இடம்பெறும். வளரும் ஓவியர்கள் இதனைப் பயன்படுத்திக் கொள்ள அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

– நிர்வாகி



படிப்பகம்

www.padippakam.com

## ஆசிரியர் பக்கம்

அன்பானவர்களே.

வணக்கம்.

உங்கள் அனைவருக்கும் எங்கள் புத்தாண்டு பொங்கல் நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் நாங்கள் மிக்க மகிழ்ச்சி அடைகிறோம்.

இந்த இதழில் ஐந்து சிறுகதைப் படைப்பாளிகள் பதினேழு கவிஞர்கள் மூன்று கட்டுரையாளர்களின் பேனா முனைகள் இடம் பெற்றுள்ளன சதங்கையின் சர்குலேஷன் . ஏறுமுகமாக இருக்கிறது. படைப்புகள் அனைத்தும் சமூக நோக்கில் பன் முகத்தளங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. எங்கள் தேர்வில் முகம் முக்கியமல்ல தரத்திற்குத்தான் முதலிடம் கொடுக்கிறோம்.

இலக்கியப் போர்வையில் வணிகத் தன்மையில் பல இதழ்கள் இன்று நடமாடுகின்றன. அவைகளின் முகத்திரையைக் கிழிக்க வேண்டும். வேஷதாரிகளின் உண்மை உருவத்தை பா. செயப்பிரகாசம் அவர்கள் கோடிட்டுக் காட்டுவார்கள். விற்பனையாளர்கள் இல்லாத இடங்களில் இலக்கிய அன்பர்கள் சதங்கையின் வாசகர்தளம் விரிவடையச் செய்யவேண்டுமென அன்பு வேண்டுகோள் விடுத்தேன்.. சில இலக்கிய ஆர்வலர்கள் தங்கள் பொறுப்பில் சதங்கையை வாங்கி இலக்கியத் தாகமுள்ளவர்களின் தாகத்தைப் போக்குகிறார்கள். இன்னும் நாணயமான விற்பனையாளர்களை அறிமுகப்படுத்தலாம்.

ஆசிரியர் பொறுப்பில் நான் இருந்தாலும், ஆலோசனைக் குழுவினரின் அறிவுரைகளை ஏற்றுக் கொள்கிறேன்.

கவிதைகளை இடம் நிரப்பியாகப் பயன்படுத்துவதாக ஒரு குற்றச்சாட்டு..... ஒரு படைப்பு ஐந்தேகால் பக்கத்தில் நிறைவு பெறுகிறது என்றால், மீதி முக்கால் பக்கத்தை நிரப்புவது எப்படி? அந்தப் படைப்பை எடிட் செய்ய வேண்டும். எடிட் செய்யும்போது படைப்பாளியின் உரிமையை நாங்கள் மதிக்கவில்லை என்றாகிறது.

நான் ஆசிரியர் என்ற தோரணையில் செயல்படுவதில்லை. எனக்குள்ள உரிமைகள் அனைத்தும் ஆலோசனைக் குழுவினருக்கும் உண்டு. நிறைகுறைகளை நாங்கள் கடிதங்கள் மூலமே பரிமாறிக் கொள்ளமுடியும்.

உங்கள் எண்ணங்களை எங்களுக்கு எழுதும்போது பாராட்ட வேண்டாம். குறைகளைச் சுட்டிக்காட்டுங்கள். அதற்கு நாங்கள் முன்னுரிமை கொடுப்போம்.

ஏழு மாதங்களாக என் கண் பார்வையின் பாதிப்பால் எழுத்துப்பிழைகள் ஏற்படுகின்றன. விரைவில் அதைத் தவிர்க்க ஏற்பாடு செய்யப்படும்.

வாசகர் மத்தியில் விழிப்புணர்வு ஏற்பட்டதால் வணிக இதழ்கள் இறங்கு முகமாகி விட்டன. வருங்காலம் இலக்கிய இதழ்களின் ஒளிமயமான காலம் என்பது உறுதி.

அன்பன்

வனமாலிகை.

**Edited and Published by VANAMAALIGAI, 459, Pandian Street, Kavimony Nagar, Nagercoil - 629 002. Printed by BHARATHI OFFSET, Chettikulam Jn., Rajakkamangalam Road, Nagercoil - 2.**

படிப்பகம்

www.padippakam.com



★ நாடெங்கும் 520க்கும் மேற்பட்ட நிலையங்கள்

★ ஒவ்வொரு பெருநகரங்களிலும் சரக்கு மாற்று மையங்கள் இவற்றின் எண்ணிக்கை சுமார் 10

★ 325 புத்தம் புதிய வாகனங்கள்

இவையனைத்தும் உற்பத்திப் பொருட்களை ஓரிடத்திலிருந்து பிறிதோர் இடத்திற்கு விரைந்து கொண்டு செல்ல உதவுகின்றன.

நாட்டின் வளர்ச்சிப் பணியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டுள்ள இந்நிறுவனம் வாடிக்கையாளர்களுக்கான சேவையை தனது உன்னத இலட்சியமாக கொண்டது.

# ஏபிடி பார்சல் சர்வீஸ்

10/14-15, காளிங்கராயன் வீதி,
இராம் நகர், கோவை - 9.
தொலைபேசி : 233566, 67, 68 & 69
தொலையச்சு : 0855 - 262; ஃபேக்ஸ் : 0422-233188

படிப்பகம்

www.padippakam.com

SATHANGAI Regn. No.21621 / 71

பெண்மைக்குப் பட்டுடுத்தி பொலிவேற்றிடும்

ஆரெம்கேவி திருநெல்வேலி டவுண்



பட்டுச்சேலைகளின் களஞ்சியம் ஆரெம்கேவி

காஞ்சிபுரம் பட்டுகள் ★ ஆரணி பட்டுகள் ★ பனாரஸ் பட்டுகள்....

RmKV வடக்கு ரத வீதி,
திருநெல்வேலி டவுண்.

படிப்பகம்